
Follow us:
வாரவெளியீடு
# தமிழன்
THAMILAN WEEKLY
තමිලන් සතිඅන්තය
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 55- பிலவ வருடம், ஆனி மாதம் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை (11.07.2021) ஹிஜ்ரி - 1442, துல்கஹ்தா பிறை - 29 0115886187 பக்கங்கள் 20 விலை ரூ.40

'வெடி'மணியம்



அமெரிக்காவுக்கு போன "பெசில்" சிறிலங்காவுக்கு திரும்பிவந்த போது;

தெற்கு அரசியலில் ஏதோ ஒரு "பிரகண்டம்" நடக்கப்போகுது எண்டு ஆவெண்டு பாத்துக்கொண்டிருந்த எல்லாருக்கும் கோட்டா ,மகிந்த தரப்பு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்திருக்கிறது.

இதுவரைகாலமும் தன்வசம் இருந்த நிதியமைச்சர் பதவியை மகிந்த தன்னுடைய சகோதரன் பெசிலுக்கு தாரைவார்த்துக் கொடுத்துள்ளார்.

அந்த "நன்றிக்கடனை" பெசில் உயிர் உள்ளவரைக்கும் மறக்கமாட்டார்.

பதவியேற்ற நாளில் பெசில் நாடாளுமன்றத்தில் "குனிஞ்சு வளைஞ்சு" மகிந்தவுக்கும், கோட்டாபாயவுக்கும் தெரிவித்த "வணக்கத்தில்" ஆயிரம் அர்த்தங்கள் இருக்கலாம்.

பெசிலோடு சேர்த்து ஐந்து ராஜபக்ஷமார் நாடாளுமன்றத்தில் 03

நக்கல் நமசிவாயம்



ராஜபக்ஷமார் கையில எத்தின அரச நிறுவனங்கள் இருக்கிறதெண்டு தேடுறதவிட எத்தின இல்லையெண்டு தேடினால் விடை லேசா கிடைச்சிடும் பாருங்கோ...

# அரசிலிருந்து சுதந்திரக்கட்சி வெளியேறாது

## கோட்டாவுடன் 21 ஆம் திகதி முக்கிய சந்திப்பு; பிரச்சினைகளை அவரிடம் எத்திவைக்க முடிவு

02

## அரச சேவை உயர் பதவிகளில் அதிரடி மாற்றம் ; வட மாகாண ஆளுநர் பதவிக்கு புதிய முகம்

அரச நிர்வாக சேவையில் அதிரடி மாற்றங்களைச் செய்ய தீர்மானித்திருக்கிறது அரசு. அதன்படி இவ்வாரம் புதிய மாற்றங்கள் அரச நிர்வாக சேவையின் உயர் பதவிகளில் இடம்பெறவிருக்கின்றன. 02

## புதிய வழிகாட்டல்கள் அமைச்சினால் வெளியீடு

மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துத் தடை தொடரும் என அறிவிப்பு 02

## முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய 19 ஆம் திகதி விசேட பேச்சு

### அமைச்சர் சரத் வீரசேகர தலைமையில்

*நா. தினுஷா*

நாட்டில் முஸ்லிம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் 19 ஆம் திகதி விசேட கூட்டமொன்றைக் கூட்டியிருக்கிறார் பொதுமக்கள் பாதுகாப்பமைச்சர் சரத் வீரசேகர. 02






கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் உட்பட்ட குழுவினர் சட்டத்தை மீறியதாக குற்றஞ்சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்ட பின்னர், தனிமைப்படுத்தலுக்காக முல்லைத்தீவுக்கு அனுப்பப்பட்டனர். அங்கு அடிப்படை வசதிகளற்ற இடமொன்றில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக கூறும் அவர்கள் அதன் புகைப்படமொன்றை சமூக ஊடகங்களில் பதிவேற்றியிருந்தனர்.

## நாடு முழுவதும் பொருட்கள் பற்றாக்குறை ஏற்படும் ஆபத்து

### வங்கிகளில் எல்.சி. கடிதம் வழங்கப்படாமை குறித்து மங்கள எச்சரிக்கை

*யோ.தர்மராஜ்*

நாட்டின் பல பிரதான வங்கிகளினால் பொருட்கள் இறக்குமதி தொடர்பான கடன் கடிதம் (எல்.சி.) வழங்குவது நிறுத்தப் பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர... 02

## சீரற்ற காலநிலையால் 56,238 பேர் பாதிப்பு

02






# ஜனவரி மாதத்திற்குள் மேலும் ஒரு தொகுதி அரசியல் கைதிகள் விடுவிக்கப்படுவர்!

## சுரேன் ராகவன் எம்.பி. உறுதி



சிறைச்சாலையிலிருந்து இன்னுமொரு தொகுதி கைதிகளை அடுத்த ஜனவரி மாதத்திற்குள் விடுதலை செய்வதற்கு தயாராக இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்திலுள்ள நகரசபை மற்றும் பிரதேச சபைகளின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வவுனியாவில் இடம்பெற்றது.

அதன் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வன்னிமாவட்டத்தில் பொருளாதார, அரசியல், சமூக பிரச்சனைகள் இருக்கின்றன. இவற்றை கட்சி ரீதியான பிரிவினைகளை பார்த்து, செய்தால் மக்களுக்கு நன்மை செய்யமுடியாமல் போகும். தேர்தல் காலத்தில் அரசியல் செய்வது வழக்கமான விடயம். ஆனால், தேர்தலுக்கு அப்பாற்பட்டு ஜனநாயகத்தை நிலைநிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இருக்கின்றேன்

வன்னி மாவட்ட மக்கள் கொரோனா நோய்த் தாக்கத்தில் குறைந்தளவில் பாதிக்கப்பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. மக்களினுடைய பொறுப்புணர்ச்சியினாலேயே அது நடந்துள்ளதென நம்புகிறேன். அடுத்த வாரம் இந்த மக்களுக்கான தடுப்பூசி ஏற்றும் செயற்பாடு இடம்பெறும். குறிப்பாக வன்னியில் உள்ள குளங்களை திருத்த வேண்டும்.

எமது பொருளாதாரம், மற்றும் சமூகம், வளர்ச்சியடைய இலகுவான வழி அதுவே.

அத்துடன் இயற்கை உரங்களை பயன்படுத்தி விவசாயம் செய்யும் கேந்திரமாக இலங்கை மாறியிருப்பதாக ஐக்கிய நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியமும் ஏற்றுக்கொண்டுள்ளன. எமது மக்கள் நோயின்றி நலமாக வாழவேண்டும் என்று எடுத்த முயற்சியில் சில தடைகள் ஏற்பட்டன என்பது உண்மையே. சில பொருளாதாரத் திட்டங்களை ஏற்படுத்தும்போது தடைகள் ஏற்படும்.

இதேவேளை, கைதிகள் தொடர்பில் நான் எடுத்த முயற்சி காரணமாக 16 கைதிகளை அண்மையில் விடுதலை செய்திருக்கிறோம். இதன் பணி மேலும் தொடரும். எதிர்வரும் ஜனவரி மாதத்திற்குள் இன்னுமொரு தொகுதி கைதிகளை விடுதலை செய்வதற்கு தயாராக இருக்கிறோம். அவர்கள் விடுதலைபெற வேண்டும்.

அவர்கள் பிழை செய்திருக்கலாம். அவர்கள் கொண்ட நோக்கத்துடன் அவர்கள் செய்தது அரசுக்கோ அல்லது நீதிக்கோ பிழையாக இருக்கலாம். ஆனால், போர் முடிந்து 11 வருடங்களிற்கு பின்னர் பொதுமன்னிப்புக் கொடுத்து அவர்கள் வாழ வழி விடப்படவேண்டும் என்பதில் ஆழமான நம்பிக்கை கொண்டவன் நான். அத்துடன் காணாமல் போனோர் தொடர்பாக பாராளுமன்றத்தில் புதிய சீர்சிருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. காணாமல் போனோருக்கான நிலையம் முழுமையாக இயங்கும் வகையில் தடைகளை நீக்கியிருக்கின்றோம்.

உடைந்த உறவினை வளர்த்தெடுத்து சமாதானத்தின் பாதையில் செல்லவேண்டும். நியாயமான விடயத்திற்காக இந்த நாட்டை வளர்த்தெடுக்க வேண்டும்.

இலங்கை அரசு பொருளாதார நெருக்கடியில் இருப்பது என்பதனை மறுக்கக்கூடாது. அதனை மறைப்பதில் ஒரு பலனும் இல்லை. எனவே, பெசில் மீது இருக்கும் நம்பிக்கை மூலமாக பொருளாதார நெருக்கடியில் இருந்து வெளிவரக்கூடிய திட்டங்களை எடுப்பதற்கான முழுமையான பொறுப்பினை கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் முன்வந்துள்ளது. எதிர்வரும் ஆறு மாதங்களிற்குள் அவரது வருகையின் நன்மையினை நாங்கள் எதிர்பார்த்துள்ளோம். அவர் செய்வார் என்ற ஆழமான நம்பிக்கை எனக்கு இருக்கின்றது. இந்தியாவில் நரேந்திரமோடி 45 புதிய அமைச்சர்களை நியமித்துள்ளார். எனவே, புதிய அமைச்சுக்களை உருவாக்குவதோ அல்லது புதியவருக்கு அமைச்சினை வழங்குவதோ அரசியலில் புதிய விடயமல்ல என்றார்.

# தூக்கில் தொங்கி ஒருவர் தற்கொலை

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு தாழங்குடா பகுதியில் ஆண் ஒருவர் நேற்று (10) வீட்டின் கூரையில் கயிற்றில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்துகொண்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

தாழங்குடா சமுர்த்தி வங்கி வீதியைச் சேர்ந்த மேசன் தொழிலாளியான 45 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையான விக்டர் சுஜித்குமார் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கணவன் - மனைவிக்குள் ஏற்பட்ட சண்டையடுத்து சம்பவ தினமான நேற்று முன்தினம் மனைவி பிள்ளைகளுடன் அவரது தாயார் வீட்டுக்கு சென்றுள்ளார். இந் நிலையில் தனிமையிலிருந்த குறித்த நபர் வீட்டின் கூரையில் கயிற்றில் தூக்கில் தொங்கி தற்கொலை செய்து கொண்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்பது பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஒன்றரை கோடி ரூபா பணத்துடன் அத்துருகிரியவில் இருவர் கைது



அத்துருகிரிய, ஒருவல வீதியில் ஒன்றரை கோடி ரூபா பெறுமதியான பணத்தை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்றுகொண்டிருந்த நபர்கள் இருவர் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகத்தின் அடிப்படையில் மோட்டார் சைக்கிளொன்றை நிறுத்தி பரிசோதனைக்குட்படுத்தியபோது அதனுள்ளிருந்து இந்த பணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

வெல்லம்பிட்டிய மற்றும் கொலன்னாவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த நபர்கள் இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். இந்தப் பணம் ஏதாவதொரு வியாபாரத்தினூடாகவோ அல்லது ஏதாவதொரு குற்றச் செயலுக்காகவோ எடுத்துச்செல்லப்பட்ட பணம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் அத்துருகிரிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் .

## நாடு முழுவதும்...

தீர்வு வழங்கப்படாவிட்டால், அடுத்த மூன்று மாதங்களில் நாடு முழுவதும் பொருட்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்படும் என முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இறக்குமதி அனுமதி வழங்கப்படாதிருப்பது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் பல பிரதான வங்கிகளினால் பொருட்கள் இறக்குமதி தொடர்பான கடன் கடிதம் (எல்.சி.) வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. சில வணிக வங்கிகள் கடன் கடிதங்களுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்கின்றன, ஆனால், கடன் கடிதங்களை வழங்குவது நாளுக்கு நாள் தள்ளி வைக்கப்படுகின்றது.

அரசாங்கத்துக்குத் தேவையான பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அரச வங்கிகளினால் கடன் கடிதம் வழங்கப்படுவதுடன், தேசிய ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்குத் தேவையான மூலப்பொருட்கள் மற்றும் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்காக வணிக வங்கிகளால் கடன் கடிதங்கள் வழங்கப்படாமலிருக்கின்றது.2020 நடுப்பகுதியிருந்து தொடர்ந்து இறக்குமதியைக் கட்டுப்படுத்துவது, அந்நிய செலாவணியை கட்டுப்படுத்துவது இந்த அரசாங்கத்தின் கொள்கையாகவுள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு வழங்கப்படாவிட்டால், அடுத்த மூன்று மாதங்களில் நாடு முழுவதும் பெரும் பொருட்கள் பற்றாக்குறை ஏற்படும் மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் முடக்கம் காரணமாக சரியான நேரத்தில் ஏற்றுமதி செய்ய முடியாது போனால், அது அந்திய செலாவணி இருப்புக்களில் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும். இலங்கையின் பொருளாதாரம் படுகுழியை நோக்கிச் செல்லும்.

உற்பத்தி நிறுவனங்களுக்கு தேவையான 10 ஆயிரம் டொலர் பெறுமதியான உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதற்கு தந்தி பரிமாற்றத்திற்கு (Telegraphic Transfer) கூட சில வணிக வங்கிகளை நிராகரிப்பது ஆச்சரியமான விடயமாகவுள்ளது.

மேலும், வெளிநாடுகளில் கல்வி கற்கும் குழந்தைகளுக்கு பணம் அனுப்புவதற்குக் கூட சில வங்கிகள் நிராகரிப்பது பெற்றோர்களிடையே பெருங்கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## சீரற்ற..

யோ.தர்மராஜ்

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஐந்து மாவட்டங்களில் 17 ஆயிரத்து 559 குடும்பங்களைச் சேர்ந்த 56 ஆயிரத்து 238 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அதன்படி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, கம்பஹா மற்றும் இரத்தினபுரி ஆகிய ஐந்து மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 8 ஆயிரத்து 663 குடும்பங்களைச் சேர்ந்த 27 ஆயிரத்து 478 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 8 ஆயிரத்து 599 குடும்பங்களைச் சேர்ந்த 27 ஆயிரத்து 688 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், கம்பஹா மாவட்டத்தில் 294 குடும்பங்களைச் சேர்ந்த, ஆயிரத்து 61 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், இரத்தினபுரி மாவட்டத்தில் இரு குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, ஏழு மாவட்டங்களைச் சேர்ந்த 18 கிராமசேவகர் பிரிவுகளுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, கொழும்பு, காலி, களுத்துறை, கேகாலை, நுவரெலியா, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 18 கிராமசேவகர் பிரிவுகளுக்கு இவ்வாறு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அரச சேவை...

வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ், வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே ஆகியோர் அந்த பதவிகளில் இருந்து நீக்கப்படவுள்ளனர். வடமேல் மாகாண ஆளுநராக முன்னாள் அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன நியமிக்கப்படலாமென தெரிகிறது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தற்போதைய தலைவர் கலாநிதி ஜகத் வெள்ளவத்த, வெற்றிடமாகவுள்ள அவுஸ்திரேலியாவுக்கான இலங்கை தூதுவர் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார். சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவராக முன்னாள் மேல்மாகாண சபை உறுப்பினர் ரேணுக்க பெரேரா நியமிக்கப்படவுள்ளார்.

தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் தலைவராக தற்போதைய லிட்ரோ கேஸ் நிறுவனத் தலைவர் அனில் கொஸ்வத்த நியமிக்கப்படவுள்ளார். லிட்ரோ கேஸ் நிறுவன தலைவராக தேஷார ஜெயசிங்க நியமிக்கப்படவுள்ளார்.

ஏற்கனவே வெற்றிடமாகியிருந்த இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவராக மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கிடையில், பிரதமரின் செயலாளர் காமினி செனரத்துக்கு பொருளாதார நடவடிக்கை, கொள்கை திட்டமிடல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் பதவியும் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது.

திறைசேரிச் செயலாளர் பதவியில் ஆட்டிகல தொடர்ந்து பதவி வகிப்பார். இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியிலும் அடுத்த வாரம் மாற்றம் இடம்பெறவுள்ளது.

## முஸ்லிம்கள்...

புர்கா தடை, அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள் கைது, இஸ்லாமிய இயக்கங்கள் மீதான தடை உட்பட்ட பல விடயங்கள் குறித்து முன்னதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் பேச்சு நடத்தியிருந்தனர்.

இந்த விடயங்கள் குறித்து கவனம் செலுத்துமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர் சரத் வீரசேகரவை பணித்திருந்தார். அதனடிப்படையில் 19 ஆம் திகதி மேற்படி பேச்சு நடக்கவுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு பாதுகாப்புத்துறையின் உயரதிகாரிகள் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். இதில் முக்கிய பல தீர்மானங்கள் எடுக்கும் வாய்ப்பிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

## அரசிலிருந்து...

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தரப்பிலிருந்து மேற்கொள்ளப்படும் அநீதியான செயற்பாடுகளால் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை வாபஸ் பெறவேண்டுமென ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழு வலியுறுத்தியுள்ள போதிலும், அது தொடர்பில் உடனடியாக தீர்மானமொன்றை எடுப்பதில்லையென்று அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன தீர்மானித்துள்ளாரென நம்பகமாக அறியமுடிந்தது.

கொழும்பில் கடந்த வார இறுதியில் கூடிய சுதந்திரக்கட்சி மத்திய குழுவின் சிரேஷ்ட உறுப்பினர்கள், ஆளுங்கட்சியில் நடக்கும் அதிருப்திகர செயற்பாடுகளுக்கு எதிர்ப்பை வெளியிட்டு உடனடியாக அரசிலிருந்து வெளியேறவேண்டுமென வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால், இந்த விடயத்தில் உடனடி தீர்மானமொன்றை எடுக்காதிருக்கவும், எதிர்காலத்தில் உரிய நேரம்வரும்போது அதைப்பற்றி சிந்திப்பதென்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை தீர்மானித்துள்ளது.

இதன்படி , எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் நடைபெறவுள்ள சந்திப்பில் முக்கிய விடயங்களை சுட்டிக்காட்டி, அவற்றிற்கு தீர்வினை பெற்றுக்கொள்வது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கவனம் திரும்பியுள்ளது.

இப்போதுள்ள நிலைமையில் அரசுக்கு எதிராகத் திரும்பினால் நீதிமன்ற வழக்குகளை சந்திக்கவேண்டி வருமெனவும், அரசியல் பழிவாங்கல்களை எதிர்கொள்ளவேண்டிவருமென்றும் கருதுவதால் சுதந்திரக்கட்சியின் தலைமை இந்த முடிவை எடுத்துள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

இதற்கிடையில் ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உயர்மட்ட தலைவர்களின் விசேட கூட்டமொன்று சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்றது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயற்பாடுகள் குறித்து அங்கு விரிவாக பேசப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அமைதியாக இருந்து அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு, பொதுஜன பெரமுனவை பிளவுபடுத்தும் வேலைகளை மேற்கொள்ளலாமென்பதால் அது குறித்து கவனமாக செயற்படுவதென அங்கு தீர்மானிக்கப்பட்டதாக அறியமுடிந்தது.

அதேசமயம் அமைச்சுப் பொறுப்புகளை துறந்து சுதந்திரக்கட்சி அரசிலிருந்து வெளியேறுமாயின் மலையக அரசியல் கட்சி ஒன்றினதும், முஸ்லிம் எம்.பி.க்கள் சிலரினதும் ஆதரவை பெற்று மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்துடன் தொடர்ந்து ஆட்சியை முன்னெடுத்து செல்வதெனவும் அங்கு முடிவு செய்யப்பட்டது.

## புதிய வழிகாட்டல்கள்...

*யோ.தர்மராஜ்*

கொவிட் தொற்று நிலைமைக்கு மத்தியில் நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள மாகாணங்களுக்கிடையிலான பயணக்கட்டுப்பாடு தொடர்ந்து அமுலில் இருக்கும் என சுகாதார அமைச்சு விசேட சுற்றறிக்கையை நேற்று (10) வெளியிட்டுள்ளது.

மாகாணங்களுக்கு இடையிலான போக்குவரத்து தடையானது, எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 14 நாட்களுக்கு அமுலிலிருக்கும். கொவிட் தொற்று நிலைமைக்கு அமைய பயணக்கட்டுப்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, சுகாதார சேவைகளின் பணிப்பாளர் நாயகம் அசேல குணரத்னவினால் வெளியிடப்பட்டுள்ள சுகாதார சுற்றறிக்கையில் பொதுமக்கள் கடைபிடிக்க வேண்டிய சுகாதார விதிமுறைகள் வருமாறு,

விகாரைகள், கோயில்கள், பாடசாலைகள் மற்றும் கிறிஸ்தவ தேவாலயங்கள் என திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளளது.

ஆடை விற்பனை நிலையங்கள் உள்ளிட்ட வர்த்தக நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் சேவைகளுக்கு குறைந்த பணியாளர்கள் குழுவைக் கொண்டு சேவை வழங்க வேண்டும். சேவைக்கு அழைப்போரை அந்நிறுவன பிரதானியால் தீர்மானிக்க முடியும்.

நிறுவனங்களில் ஒன்றுகூடலின் போது இடவசதியில் 25 வீதமானோருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திருமண நிகழ்வுகள் நடத்துவதற்கு அனுமதியுண்டு. எனினும், இடவசதியில் 25 வீதமானோர் அல்லது 150 பேரைக் கொண்டு நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளுக்கு குறைந்த பணியாளர்கள் குழுவைக் கொண்டு சேவை வழங்க வேண்டும்.

தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களில் ஆசன எண்ணிக்கைகளுக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விவசாய மற்றும் பெருந்தோட்ட நிறுவனங்கள் திறப்பதற்கு அனுமதியுண்டு. எனினும், 25 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திறந்த வெளி வர்த்தக மற்றும் வாராந்த சந்தைகள் என்பன உள்ளூராட்சி மன்றங்களினால் நடைமுறைப்படுத்தப்படும் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

செயலமர்வு, கருத்தரங்கள் நடத்துவதற்கு அனுமதியுண்டு. எனினும், இடவசதியில் 50 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்தில் ஆசன எண்ணிக்கையில் 50 வீதமும், மேல் மாகாணத்தில் ஆசன எண்ணிக்கை 30 வீதமும் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து பரீட்சைகள் நடத்துவதற்கும் அனுமதி.

வங்கிகள், நிதி நிறுவனங்கள், அடகு கடைகள் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், 10 பேருக்கு அதிகமாக ஒரே நேரத்தில் அழைப்பதற்கு அனுமதியில்லை. மேலும், குறைந்த பணியாட்கள் குழுவைக் கொண்டு சேவையாற்ற வேண்டும்.

பொருளாதார மத்திய நிலையத்தை மொத்த விற்பனைக்காக திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நடமாடும் விற்பனை வாகனங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் விற்பனைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது

சுப்பர் மார்க்கட் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், இட வசதியில் 25 வீதமானோர் மாத்திரமே அனுமதிக்கப்படுவர்.

மோட்டார் வாகன திருத்த நிலையங்கள், டயர் கடைகள், வாகன சேவைகள் போன்றவற்றை திறப்பதற்கு அனுமதி.

ஆடை விற்பனை, சில்லறை விற்பனை நிலையம் உள்ளிட்ட அனைத்து வர்த்தக மற்றும் கடைகள் என்பன திறப்பதற்கு அனுமதி.

கட்டட நிர்மாண பொருட்கள் உள்ளிட்ட விற்பனை நிலையங்களை திறப்பதற்கும் அனுமதி.

சலூன்கள் திறப்பதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. எனினும் கடுமையான சுகாதார விதிமுறைகள் கடைபிடிக்கப்பட வேண்டும்.

கட்டட நிர்மாணங்களில் ஈடுபடும் நிறுவனங்களை திறப்பதற்கு அனுமதி.

சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்கள், சிறைச்சாலைகளில் உறவினர்கள் பார்வையிடுவதற்கு அனுமதி.

நீதிமன்றங்கள் அத்தியாவசிய மற்றும் அவசர தேவைகளுக்கு திறக்க அனுமதி. 50 வீதமானோருக்கு அனுமதி. மேல் மாகாணத்தில் 35 வீதமானோருக்கு அனுமதி.

நூல் நிலையலங்களை திறப்பதற்கு அனுமதி.

சுகாதார அமைச்சின் வழிகாட்டலுக்கு அமைய தனி நபர் பயிற்சிகளுக்கு அனுமதி. எனினும், குழு விளையாட்டுக்கு அனுமதியில்லை.

அதிவேக பாதைகள் திறப்பதற்கு அனுமதி.

கொரோனா மரணங்கள் தவிர்ந்த மரணங்கள் 24 மணித்தியாலத்திற்குள் இறுதி கிரிகைகள் நிறைவு செய்ய வேண்டும். எனினும் 50 பேருக்கு மாத்திரமே அனுமதி.

சினமா திரையரங்கள் திறப்பதற்கு அனுமதி. எனினும், இடவசதியில் 50 வீதமானோருக்கு மாத்திரமே அனுமதி.

ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் கடுமையான சுகாதார விதிமுறைகளுடன் திறப்பதற்கு அனுமதி.

உணவு விநியோகத்திற்கு அனுமதி.

ஸ்பா (மசாஜ் நிலையங்களை) திறப்பதற்கு அனுமதி.

கெசினோ மற்றும் இரவு களியாட்டங்களுக்கு அனுமதியில்லை.

## வெடிமணியம் தொடர்ச்சி...

உலாவுகிறார்கள்.

முக்கியமான அத்தனை அமைச்சுகளும் அவர்கள் வசம்தான்.

அதைவிட முக்கியமான ஐம்பதுக்கும் அதிகமான திணைக்களங்கள் அவர்களின் நேரடி கண்காணிப்பில் இருக்கின்றன.

மொத்தத்தில் "குடும்ப ஆட்சி" எண்டால் ஒருத்தரும் கோவிக்கமாட்டினம்.

ஆளும் தரப்பு கோட்டா, மகிந்த எதிர்ப்பு உறுப்பினர்கள் உள்ளடங்கலாக கூட்டணிக் கட்சிகளின் சலசலப்பு எதையும் காதில் வாங்காது பெசிலை அமைச்சராக ஆக்கும் "ஒப்பிறேசன்" வெற்றிகரமாக நடந்துமுடிந்துவிட்டது.

ஒரு நாட்டின் நிதியமைச்சர் பதவி என்பது மிக முக்கியமான பதவி.
அதை எப்படி எந்த அடிப்படை தகுதியில்லாத பெசிலுக்கு கொடுக்கலாம் எண்டு குசுகுசுப்பவர்களின் குரல்வளைகளை நெரித்து அவர்களை அடக்கி ஒடுக்கிவிட்டது ஆளும் ராஜபக்ஷ அணி.

எது என்னவோ!

பெசிலுக்கு கிடைத்திருப்பது ஒரு மிகப்பெரிய "பதவி"!

அதன் அருமையை உணர்ந்து நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பும் மிகப்பெரிய சவால் அவர்முன் வைக்கப்பட்டுள்ளது.

வெளிப்படையான வசைகளையும் கேலிகளையும், கிண்டல்களையும் தாண்டி;

பெசிலுக்கு ஒரு மறைமுக எதிர்ப்பு எப்போதும் இருக்கிறது.

ஆளும் தரப்பு ஆதரவுக் கட்சிகளின் தலைவர்களான விமல் வீரவன்சவும் வாசுதேவ நாணயக்காரவும் " எள்ளி நகையாடிய " போதும்;

வெளிப்படையாக எதிர்ப்பை காட்டியபோதும் எந்த எதிர்வினைகளையும் பெசில் காட்டவேயில்லை.

பதவியேற்றதன் பின்னர் பெசில் "நான் ஆரையும் பழிவாங்கமாட்டேன்" எண்டு சொன்னதால் பலர் நிம்மதியாக இருக்கினம். இந்த நிம்மதி நிரந்தரமானதல்ல.

ஒரு காலத்தில் மகிந்தவும், கட்சியும் விழுந்து கிடந்தபோது கட்சியைத் தூக்கி நிமிர்த்திவிட்டது பெசில் தானாம்.

பல அரசியல் "டீல்களை" சாணக்கியமாக செய்து மைத்ரி தரப்பு ஆதரவு உறுப்பினர்களை "கொப்பு தாவ வைச்சதன்" பிரதான மூளை பெசிலின்ரதான் எண்டு சொல்லுகினம்.

பெரும்பாலான நாடுகளில் நிதியமைச்சராக நியமிக்கப்படும் நபர் அடிப்படையில் உலக பொருளாதாரத்தை ஓரளவுக்கேனும் "படிச்சிருக்கவேண்டும்" என்ற எழுதப்படாத விதியுள்ளது.

உலகத்தில் எந்த நாட்டில் எடுத்தாலும் அந்த விதி செல்லுபடியாகத்தான் உள்ளது.

ஆனால், சிறிலங்காவில் அந்த விதியை உடைச்சு பெசிலை நிதியமைச்சராக நியமிச்சதன் பின்னணியில் ஒரு "இராஜதந்திர" காய் நகர்த்தல் இருக்கலாம் எண்டு சொல்லுகினம்.

அமெரிக்கா தன்னுடைய சீனாவுக்கு எதிரான "காய்நகர்த்தலை" பெசிலை வைச்சு செய்ய நினைச்சிருக்கலாம் எண்டுகினம்.

அண்மையில் அமெரிக்க சுதந்திர தினத்துக்காக "ஜோ பைடனுக்கு" வாழ்த்துச் செய்தி அனுப்பிய கோட்டா தன்னுடைய "நல்லெண்ண" கைகளை நீட்டியிருந்தார்.

அமெரிக்காவுக்கு நீட்டிய அதே கைகளால்தான் சீன கொம்யூனிஸ்ட் கட்சியின் நூற்றாண்டு நினைவு நாணயத்தையும் வெளியிட்டமை வேற கதை.

சிறிலங்காவில் அமெரிக்காவின் நகர்வுகளை உன்னிப்பாகக் கவனிச்சால் ஒரு விடயம் புலப்படும்.

சீனாவின் ஆதிக்கத்துள் விழுந்துகிடக்கும் சிறிலங்காவுக்கு எதிராக அமெரிக்க - இந்திய கூட்டு நடவடிக்கை ஆரம்பமாகிவிட்டதும் புலப்படும்.

சிறிலங்காவுக்கான புதிய அமெரிக்க தூதுவர் ஆரெண்டு ஒருக்கால் விசாரியுங்கோ. சில முடிச்சுகள் அவிழும்.

பெசிலின் நிதியமைச்சர் நியமனத்தில் கூட ஒரு "பூகோளப்போட்டி" இருக்குது எண்டு சொல்லுறாங்கள்.

எங்களைப்போல சாதாரண சனத்துக்கு உந்த ஒரு கோதாரியும் விளங்காது.

ஆனால்;
பெசில் வந்தால்...

பெற்றோல் விலைகுறையும்.
சாமான் விலைகுறையும்.

எண்டு நம்பும் மக்களுக்கு சிறிலங்காவின் புதிய நிதியமைச்சர் என்ன நம்பிக்கையை கொடுக்கப்போறார் எண்டு பொறுத்திருந்துதான் பாக்கவேணும்.

"சும்மா ஒரு பேச்சுக்குத்தான் சிறிலங்காவின் நிதியமைச்சர் பெசில். ஆனால், சிறிலங்காவின் உண்மையான நிதியமைச்சர் லீ குன் தான். அவர் சீனாவில் இருக்கிறார் " எண்டு பகிடி பண்ணுறாங்கள்.

எது என்னவோ!

நெளிஞ்சு கிடக்கும் சிறிலங்காவின் பொருளாதாரத்தை நெளிவு எடுப்பது என்பதுதான் இப்போதைய உடனடித்தேவை.

அதை பெசிலும் செய்யலாம். லியூ குன்னும் செய்யலாம்.

செய்தால் சரி எண்ட நிலையிலதான் சனம் இருக்குது.

★★★

சம்பந்தனும், அவரது பரிவாரங்களும் தொடர்ச்சியான "சந்திப்புகளில்" வலு பிசியாக திரியினமாம்.

அடிக்கடி அவர்களின் சந்திப்புகளின் புகைப்படங்களை தமிழ் ஊடகங்களில் காணமுடிகிறது.

என்ன பேசுகினம் எண்டது கடவுளுக்குத்தான் வெளிச்சம்.

தள்ளாடிக்கொண்டிருக்கும் "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு" மக்களிடத்தில் தன்னை நிலைநிறுத்த இப்படி இடைக்கிடை உயர்மட்ட ராசதந்திரிகளை சந்திச்சு அதை ஊடகங்களில் விளம்பரம் செய்யவேண்டிய இக்கட்டில் இருக்கிறது.

அதுக்காக "தள்ளாடும்" வயதில் இருக்கும் சம்பந்தனைக்கூட ஈவு இரக்கமின்றி இழுத்துவந்து இருத்திவைச்சு கொடுமை செய்வது கண்டனத்துக்குரியது.

சம்பந்தனுக்கு நிகழும் இந்த "கொடுமையை" எந்த தமிழ் ஊடகங்களும் தட்டிக்கேட்பதாகவும் தெரியவில்லை.

நாடாளுமன்றத்துக்கு கைத்தாங்கலாக வந்த காலம் முடிந்து அவரை தூக்கிக்கொண்டு வரும் நிலை வந்துவிட்டது.

அப்படியிருந்தும் கூட அவரை அரசியலிலிருந்து ஓய்வெடுக்க விடாமல் கொடுமைப்படுத்தும் தமிழரசுக்கட்சியை வன்மையாகக் கண்டிக்காமல் வேடிக்கைபார்க்கும் கட்சித்தொண்டர்களுக்கு உண்மையில் மனச்சாட்சி இல்லையா எண்டு கேட்டால் பிழையோ?

மேலோட்டமாகப் பார்த்தால் சம்பந்தரின் முதுமையை நக்கலடிப்பது போலத்தான் தெரியும்.

ஆனால்;

தமிழரசுக்கட்சியின் "இயலாமை" பல இடங்களில் பல்லிளிக்கிறது.

நோய்வாய்ப்பட்டுத் தள்ளாத வயதில் கூட இன்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருக்கும் சம்பந்தர் செய்யவேண்டிய பல "நல்ல" விடயங்கள் இருக்கின்றன.

முதுமை காரணமாக அவருக்கு அவற்றை சிந்திக்கும் "ஆற்றல்" இல்லாமல் போயிருக்கும்.

சம்பந்தர் தற்சமயம் வாயைத்திறந்து பேசினால் அதை "ஆஹா ஓஹோ" எண்டு பாராட்டி அந்த மனிசனை "பப்பாவில்" ஏத்திவிட்டு கூத்துப்பாக்கும் பரிவாரங்களை நினைச்சால் எரிச்சலாக இருக்கிறது.

"தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக" தங்களை அடையாளப்படுத்தி நிற்கும் சம்பந்தனும் அவரது பரிவாரங்களும் முதலில் செய்யவேண்டியது எதுவென்று அவர்களுக்கே தெரியாமல் இருப்பதே ஒரு காலக்கொடுமைதான்.

சிறிலங்காவில் நிகழும் உலக வல்லாதிக்க நாடுகளின் "சதுரங்க" ஆட்டத்தில்;

"கிங் மேக்கர்களாக" இருக்கவேண்டிய தமிழர்களை வெறும் "சிப்பாய்களாக" ஆக்கிவிடும் "பேத்தனமான" வேலையை;

சம்பந்தரும் அவரது பரிவாரங்களும் செய்துவிடுவார்கள் என்று பலரும் "அபாயமணி" எழுப்புகிறார்கள்.

ஒரு இறுக்கமான நேர்மையான "கட்டளையும்" இல்லாத இடத்தில் தறிகெட்டு தன்பாட்டுக்கு ஓடும் "தமிழ்த் தேசிய கூட்டமைப்பின்" தற்போதைய அரசியல் நகர்வுகளை யார் கண்காணிக்கிறார்கள்?

உப்பிடித்தான் போன "நல்லாட்சி" காலத்திலும் தறிகெட்டு தன்னிச்சையாக ஓடினார்கள்.

"முடிவு" என்னண்டு எல்லாருக்கும் தெரியும்.

மீண்டும் அத்தகையதொரு வரலாற்றுப்பிழையை விடாமல் இவர்களின் கழுத்தில் யார் "கயிறு" கட்டுவது?



தமிழன்
THAMILAN WEEKLY
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 012 67 34 42.
தொலைபேசி : 015 200 900/ 015 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilanweekly@gmail.com/thamilaneditor@gmail.com

# மக்கள் புரட்சி வரலாம்!

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களை தனிமைப்படுத்தல் விதிமுறைகளின்கீழ் கைதுசெய்வது சட்டவிரோதமானது என தெரிவித்து ஐக்கிய மக்கள் சக்தி, நீதிமன்றத்தில் மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல்செய்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார உட்பட மூவர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை தாக்கல்செய்துள்ளனர்.

கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கான சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள விதிமுறைகளை பயன்படுத்தி அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்வதற்கான உரிமைகள் ஒடுக்கப்படுகின்றன என ஐக்கிய மக்கள் சக்தி தனது மனுவில் தெரிவித்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களை நியாயமற்ற முறையில் கைதுசெய்வது அரசமைப்பினால் வழங்கப்பட்ட பேச்சு கருத்து சுதந்திரத்திற்கான உரிமையை மீறும் செயல் என நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தி வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களை கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளமை குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம் வெளியிட்டுள்ளது. நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலைசெய்யப்பட்டவர்களை தடுத்துவைப்பது நாட்டின் சட்டத்திற்கு முரணானது என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

தனிமைப்படுத்தல் சட்டம் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு அனுமதியளிக்கவில்லை என தெரிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி இதனை கண்டிப்பதாக தெரிவித் துள்ளது.


நாட்டின் தற்போதைய நிலையில் மக்களுக்கு எழுந்துள்ள பிரச்சினைகளை சுட்டிக்காட்டி அதற்கு தீர்வை பெற்றுக்கொள்ளும்வகையில் சாத்வீக முறையிலான போராட்டமொன்றை நடத்தும்போது அதற்கு உரிய வகையிலான சுதந்திரம் வழங்கப்படவேண்டும். ஆனால், சுகாதார தனிமைப்படுத்தல் விதிகள் காரணம் காட்டப்பட்டு அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்படுவது ஏற்க முடியாதது.

விவசாயிகள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி தமது பிரச்சினைகளை சுட்டிக்காட்ட முற்படும்போது அதற்கு அரசியல் முலாம் பூச முயற்சிக்கும் அரசு அவர்களுக்கு பிரச்சினைகளே இல்லை என்று காட்ட முயல்கிறது. மறுபுறம் ஆசிரியர்கள் மற்றும் இதர தொழிற்சங்கவாதிகள் ஆர்ப்பாட்டம் அல்லது சாத்வீக போராட்டம் செய்ய நடவடிக்கைகளை எடுக்கும்போது அவற்றுக்கு தடைபோட முயல்கிறது காவல்துறை.

ஆனால், சட்டத்தை அமுலாக்கும் காவல்துறையினர் கடந்த சில நாட்களாக அந்த சட்டத்தை மதித்து செயற்படுகிறார்களா? நிதி அமைச்சராக பெசில் ராஜபக்ஷ பொறுப்பை ஏற்றபின்னர் நாடளாவியரீதியில் பட்டாசுகள் வெடித்தனவே? அவர்களது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஆதரவாளர்கள் கூட்டங்கள் கூடி மகிழ்ச்சி கொண்டாட்டங்களை நடத்தினார்களே? அப்போது சட்டங்கள் எங்கே போயின? சட்டத்தை பாதுகாப்போர் என்ன செய்தனர்? இவற்றுக்கு பதில்கள் இல்லை.

கொரோனா வைரஸால் நாட்டில் சாதாரண மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழில்களை பலர் இழந்துள்ளனர். பலரின் வருமானம் வெகுவாக குறைந்துள்ளது. மாணவர்களின் வாழ்க்கை இணையத்துடன் முடங்கிப்போயிருக்கிறது. பலருக்கு இணையக்கல்விக்கான வாய்ப்பே இல்லை. ஆசிரியப் பெருந்தகைகள் தங்கள் சொந்தச் செலவில் மேலதிக வகுப்புகளை வழங்கிவருகின்றனர். அப்படியான ஒரு குழுவினர் தங்களது உரிமைகளை கேட்டு குரலெழுப்பும்போது அவர்களை கைதுசெய்து பலவந்த, கட்டாய தனிமைப்படுத்தலுக்கு அனுப்புவது எவ்வகையில் நியாயமானது?

இவர்களின் நடவடிக்கைகளில் நியாயம் இருப்பதாக கருதி நீதிமன்றமே அவர்களை பிணையில் விடுதலைசெய்யும் சூழ்நிலையில், அவர்களை கட்டாய தனிமைப்படுத்தலுக்கு அனுப்புவதன்மூலம் அவர்களின்மீது தனிப்பட்ட பழிவாங்கலையே பாதுகாப்புத்துறை மேற்கொள்கிறது. ஏற்கனவே அத்தியாவசிய சேவையான மருத்துவ சேவையின் பணியாளர்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். இப்போது ஆசிரியர்களும் உரிமைக்குரல் எழுப்பி வீதிகளுக்கு இறங்கலாம். இலங்கை அரசு மனித உரிமைகளுக்கும் பேச்சு சுதந்திரத்திற்கும் மதிப்பளித்து செயற்படவேண்டும். இல்லையேல் மக்கள் புரட்சி ஏற்படுவதை தவிர்க்க முடியாது.



# கேகாலை மாவட்டத்தில் இதுவரை 14,300 பேருக்கு கொரோனா

## அச்சுறுத்தல் தொடர்கின்றது

**- எம்.எஸ்.அமீர் ஹுசைன் -**



கொரோனா வைரஸ் தொற்று (கொவிட் 19) பரவ ஆரம்பித்ததுமுதல் இதுவரையில் கேகாலை மாவட்டத்தில் மாத்திரம் 14,300 பேரளவில் கொரொனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 11,700 பேர் குணமடைந்துள்ள நிலையில், ஏனையோர் கொரொனா தடுப்பு நிலையங்களில் சிகிச்சைபெற்றுவருகின்றனர். அதேநேரம் மரணமடைந்தவர்களின் எண்ணிக்கை 48 ஆகும். இவர்களது குடும்பங்களைச் சேர்ந்த 87,600 பேரளவில் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். தற்போது மேலும் 5,700 பேரளவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். தனிமைப்படுத்தல் நடைபெறும்போது அவர்களது பி.சி.ஆர். மாதிரிகள் பெறப்பட்டே தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

தினசரி கேகாலை மாவட்டத்தில் சுமார் 110இற்கு மேற்பட்ட நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றனர். 2021 ஜூன் 30ஆம் திகதி மாத்திரம் 188 தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர். தற்போதைய புள்ளிவிபரங்களின் அடிப்படையில் கேகாலை மாவட்டத்தில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தெஹியோவிட்ட பிரதேசத்தில் 2,500 பேர், கேகாலையில் 1,480 பேர், வரக்கா பொலையில் 1930 பேர், மாவனல்லையில் 1250 பேர் என்ற அடிப்படையில் சில பிரதேசங்களில் நோயாளர் வீதம் உயர்வடைந்து செல்வதை புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன. இதன்படி கேகாலை மாவட்டத்தில் முதலாம் இடத்தில் தெஹியோவிட்டவும், இரண்டாம் இடத்தில் வரக்காபொலவும் மூன்றாம் இடத்தில் கேகாலை மற்றும் 04 ஆம் இடத்தில் மாவனல்லை ஆகிய பிரதேசங்களும் உள்ளன.

இவ்வாறு தினசரி எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் பிரதேசங்களில் அரசாங்கம் கொரோனா பரவுவதைக் கட்டுப்படுத்த பிரதேச செயலக மட்டங்களில் கொரோனா தடுப்புப் பிரிவு ஏற்படுத்தப்பட்டு இயங்கிவருகின்றன. அவை அந்தந்த பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், பொதுச் சுகாதார பணிமனை ஆகியவற்றுடன் இணைக்கப் பட்டதாக கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன.

அதில் பிரதான நடவடிக்கையாக மிக வேகமாக கொரொனா பரவும் பிரதேசங்களை அடையாளம் கண்டு தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுத்தல், அதையும் தாண்டி கொரோனா பரவும் நிலை அவதானிக்கப்பட்டால் அந்த கிராமசேவகர் பிரதேசங்களை முடக்கம் செய்வது (லொக்டவுன்) போன்ற நடவடிக்கைளை மேற்கொண்டு வருகின்றது.

ஆனாலும் அந்தந்த பிரதேசங்களின் இன்றைய வரையான நிலையை சரியான முறையில் அடையாளம் காண்பதன் மூலமே தமது பிரதேசங்கள் கொரோனா பரவும் வேகத்தில் எந்த நிலையில் இருக்கின்றது என்பதை புரிந்துகொண்டு மக்கள் தாமாகவே கொரோனாவிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ள துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

அரசாங்கமும் கொரோனா தடுப்புப் பிரிவும் தொடர்ச்சியாக 2020 பெப்ரவரி மாதம் முதல் இன்றுவரையான 18 மாதங்களுக்கு மேலாக அறிவுறுத்தல்களையும் வழிகாட்டல்களையும் வழங்கி பரவலை தடுக்க கட்டுப்பாடுகளை விதித்து வந்தாலும் அதனையும் கடந்து இந்தளவு கொரானா பரவும் வேகம் உயர்வடைய காரணம் பொதுமக்களின் அவதானம் குறைவதும் உதாசீனப் போக்குகளுமாகும்.

தற்போதைய நிலையில் கேகாலை மாவட்டத்தில் மாவனல்லை பிரதேசத்தை எடுத்தக்கொண்டால் மாவனல்லை பிரதேசத்திலுஉள்ள 71 கிராமசேவகர் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக கடந்த 18 மாதங்களில் பதிவாகியுள்ள கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 2021 ஜூலை மாதம் 05ஆம் திகதிவரையில் 1,325 அளவிலாகும். இந்தத் தொகையில் 2021 பெப்ரவரி மாதம் 15ஆம் திகதிமுதல் ஜூலை மாதம் 05ஆம் திகதிவரையில் மாத்திரம் 900 நோயாளர்கள் அளவில் பதிவாகியிருப்பதாக கேகாலை மாவட்ட சுகாதார திணைக்களத்தின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேநேரம் மாவனல்லை பிரதேசங்களில் தினமும் 50 நோயாளர்கள் அளவில் (பொசிடிவ்) கண்டு பிடிக்கப்பட்டு வருகின்றனர். அத்துடன், மாவனல்லை பிரதேசத்தில் கடந்த ஒருமாத காலப்பகுதிக்குள் 28 பேரளவில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மரணமடைந்துள்ளனர். இவர்களில் ஹிங்குள்ஓயா கிராமசேவகர் பிரிவில் 04 மரணங்களும் மஹவத்தையில் 03 மரணங்களும் உயன்வத்தை, கோங்கமுவை, நாங்கூறுகமை உட்பட ஏனைய கிரமசேவகர் பிரிவுகளில் தலா ஒன்று அல்லது இரண்டு என்ற அடிப்படையில் மரணங்கள் நிகழ்ந்துள்ளன.

தற்போதைய நிலையில் மாவனல்லை பிரதேசத்தில் ஜூலை 05ஆம் திகதி வரையில் மஹவத்தை (105), ஹிங்குல் ஓயா(85), கிருங்கதெனிய (52), ஹெம்மாதகமை (46), உயன்வத்தை ஆகிய பிரதேசங்களில் கொரோனா நோயாளர் எண்ணிக்கையில் அதிகரிப்பை அவதானிக்க முடிகின்றது. இப்பிரதேச மக்களிடையில் கூடுதல் அவதானமும் எச்சரிக்கையும் தேவைப்படுகின்றது. நோயாளர் எண்ணிக்கை உயர்வடைந்து அப்பிரதேசம் 14 நாட்களுக்கு முடக்கப்பட்டால் மக்கள் சிரமங்களை அனுபவிக்க நேரிடுகின்றது.

தற்போதைய நிலையில் ஹெம்மாதகமை, உயன்வத்தை, தல்கஸ்பிடிய, அரனாயக்கா, திப்பிட்டி, வில்பொலை போன்ற மாவனல்லையை சூழவுள்ள பிரதேசங்களில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை ஓரளவில் கட்டுப்பாட்டில் காணப்பட்டாலும் எதிர்காலத்தில் இப்பிரதேசங்கள் கூடுதலாக பாதிக்கப்படலாம். தற்போதைய நிலையை விட எண்ணிக்கை உயர்வடையாமல் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கான முயற்சிகள் அவசியமாகின்றன. அதனால் இப்பிரதேச மக்கள் மத்தியில் பள்ளிவாசல்களை மையப்படுத்தி அறிவுறுத்தல்களும் விழிப்புணர்வும் அவசியமாகின்றது. ஏனெனில், இப்பிரதேசங்கள் அதிகமாக முஸ்லிம்கள் செறிவாக வசிக்கின்ற பகுதிகளாகும்.

மாவனல்லை பொதுச் சுகாதார பணிமனையின் அதிகாரிகளைப் பொறுத்தவரையில் ஒருவகையில் முஸ்லிம் சமூகத்தவர்கள் மத்தியில் கொரோனா தொடர்பாக இன்னும் உதாசீனப்போக்கு இருந்துவருவதாக அதிருப்தி தெரிவிக்கின்ற நிலை காணப்படுகின்றது.

ஏற்கனவே மாவனல்லை பிரதேசத்தில் பிரதேச செயலகம், பிரதேச சபை, பொலிஸ் நிலையம் உட்பட அரசாங்க அதிகாரிகளுக்கும் மஹவத்தையில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் கொரோனா முதலாவது தடுப்பூசி ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாவனல்லையில் அமைந்துள்ள கைத்தொழில் நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 2000இற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது. அத்துடன் நேற்று 09ஆம் 10ஆம் திகதிகளில் கிருங்கதெனிய, ரந்திவலை, ரங்கொதிவலை மற்றும் முறுதவலை கிராமசேவகர் பிரிவுகளில் வசிக்கும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது.

ஏற்கனவே தொடர்ச்சியாக அந்தந்த ஊர்களின் பள்ளிவாசல்களால் கணிசமான அளவு கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் பிரதேசத்திற்குள் பயணத்தடைகள் இல்லாததால் மக்கள் நிரம்பி வழிகின்ற பகுதிகளிலான அநவசியமான நடமாட்டத்தை இயன்றவரையில் மக்கள் கட்டுப்படுத்திக்கொள்வது கொரோனா தொற்றாமல் இருக்க மேற்கொள்ளும் பிரதான தடுப்பு நடவடிக்கையாகும்.



இந்நிலையில், அரசாங்கம் இயன்றவரையில் கொரோனா பரவலை கட்டுப்படுத்துவதற்காக விரைவான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. அதில் முதற்கட்ட நடவடிக்கையாக இலங்கை முழுவதிலும் முதலாவது தடுப்பூசியை 3104966 பேருக்கு ஏற்றியிருக்கின்றது. இரண்டாவது தடுப்பூசி ஏற்றப் பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 12,69,101 என்ற அடிப்படையில் 2021 ஜூலை 01ஆம் திகதிவரையான புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

# 13ஆவது திருத்தத்தின் காணி - பொலிஸ் அதிகாரங்கள் அமுல்படுத்தப்படவில்லை

## சிவாஜிலிங்கம் குற்றச்சாட்டு



(வீரமுனை நிருபர்)

எத்தனையோ உலக நாடுகளில் சமஷ்டி அரசுகள் இருக்கின்றன. அமெரிக்காவில் 50 சமஷ்டி குடியரசு அரசாங்கங்கள் இருக்கின்றன. ஆகவே, அங்கு எந்தப் பிரிவினையும் ஏற்படவில்லையென தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான க. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

13ஆவது திருத்தத்தில் சொல்லப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்கள் அதன் கீழ் 42 ஆவது மாகாண சபை சட்டத்தின் மூலம் அரசியலமைப்பில் வழங்கப்பட்ட அதிகாரங்கள் அமுல்படுத்தப்படவில்லை என்றும் குற்றஞ்சாட்டினார்.

சமஷ்டி ஆட்சி முறைதொடர்பில் வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

இன்றைக்கு சமஷ்டியை பிரிவினை, தனிநாடு எனக் கூறுவீர்களாக இருந்தால், உண்மையிலேயே இலங்கைத் தீவின் பிரச்சினையை நீங்களாகவே தனிநாட்டுக்குக் கொண்டு போய் இலங்கை பிளவுபடுகின்றது என்று முடிப்பீர்கள் என்பதை தயவுசெய்து ஞாபகத்தில் வைத்து கொள்ளுங்கள்.

சிங்களத் தலைவர்கள் சமஷ்டி என்று சொன்ன போது அதை தமிழ்த் தலைவர்கள், தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால், சமஷ்டி என்பது தனி நாட்டுக்கோரிக்கை என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.

பிரதமருக்கு நினைவுபடுத்த விரும்புகிறோம். 1926 ஆம் ஆண்டு உங்கள் கட்சியின் ஸ்தாபகர் மறைந்த பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க 1926 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வைத்து சமஷ்டி அரசுகள் மூலமே இலங்கைத்தீவில் நிர்வாகத்தை நடத்த முடியும் என்று சொன்னது மாத்திரமல்ல, கோல்புரூக் ஆணைக்குழு முன்னிலையில் ஆணைக்குழுவினுடைய கூட்டங்களில் கண்டியில் இருக்கக்கூடிய ஒரு சபையாக அதில் தோன்றி மலையகத்தினருக்கு ஒரு சமஷ்டி அரசும், வடக்கு கிழக்குக்கு ஒரு சமஷ்டி அரசும், வடகிழக்குத் தவிர ஏனைய பகுதிகளில் இருக்கக்கூடிய கரையோரங்களுக்கு ஒரு சமஷ்டி அரசும் என்று 3 சமஷ்டி அரசுக் கோரிக்கைகளை பண்டாரநாயக்க தலைமையில் வைத்ததை ஏன் மறந்து போனாரோ தெரியவில்லை.

மேலும் 1957 ஆம் ஆண்டு ஜூலை 26 ஆம் திகதி செய்துகொள்ளப்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், அன்றைய பிரதமர் பண்டாரநாயக்கவிற்கும், தமிழர் தலைவர் தந்தை செல்வநாயகத்திற்கும் இடையில் செய்து கொண்ட ஒப்பந்தம், பௌத்த பிக்குகள், சிங்கள தீவிரவாதிகளின் எதிர்ப்பினால் அன்றைய பிரதமரால் கிழித்து எறியப்பட்டது.

பல நீண்ட காலத்திற்கு பின்னர் பண்டா - செல்வா ஒப்பந்தம் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தால் இலங்கையில் இனப்பிரச்சினை இருந்திருக்காது என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா உட்பட பலர் கூறியிருந்தார்கள். அது மாத்திரமல்ல, பின்னாளில் அரசியலமைப்பு 1972 இல் கொண்டு வரப்பட்ட போதும் அன்றைய தமிழர் கூட்டணியில் இலங்கைத் தமிழ் அரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகளை அப்போதைய அரசியலமைப்பில் சேர்த்துக் கொள்ளவில்லை. இந்தப் பின்னணியில்தான் இப்போது சமஷ்டியை ஒரு பிரிவினையாக சொல்பவர்களுக்கு எத்தனையோ உதாரணங்களை சொல்ல முடியும்.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் செய்யப்பட்ட அரசியல் அமைப்புக்கான 13ஆவது திருத்தத்தில் சொல்லப்பட்ட காணி, பொலிஸ் அதிகாரங்கள் அதன் கீழ் 42 ஆவது மாகாண சபை சட்டத்தின் மூலம் அரசியல் அமைப்பில் வழங்கப்பட்ட அதிகாரங்களும் அமுல்படுத்தப்படவில்லை என்றார்.

# அரசாங்கம் இன - மத வேறுபாடு காட்டுவதில்லை

## ஒட்டமாவடியில் அலி சப்ரி தெரிவிப்பு

(மீராவோடை நிருபர்;)

இந்தியாவிலிருந்து படகுகளில் வருவோர் மூலம் டெல்டா வைரஸ் தாக்கும் என்பதால் அப்பகுதி மக்களின் நலன்கருதி முதலில் அந்த தடுப்பூசிகளை வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பியுள்ளோம். இலங்கை மக்களை பாதுகாக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முஸ்லிம், சிங்களம், தமிழ் என்று வேறுபடுத்திப் பார்ப்பது கிடையாது. அவர் இந்நாட்டு மக்கள் என்று எண்ணியே பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருவதாக நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

ஓட்டமாவடியில் நேற்று (10) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

விசேடமாக நாங்கள் நூறு கிலோமீற்றர் வீதி வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். அதேபோன்று கிராமசேவகர் பிரிவுகளில் வீடுகளை அமைத்துக் கொடுத்துள்ளோம். அத்தோடு ஆயிரம் தேசிய பாடசாலைகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

இந்த அரசாங்கம் கொரோனாவைக் காரணம் காட்டி அபிவிருத்திப் பணிகளை நிறுத்தவில்லை. கிட்டத்தட்ட ஐந்து மில்லியன் கொரோனா தடுப்பூசிகள் நாட்டுக்கு வந்துள்ளன. இன்னும் ஐந்து மில்லியன் கொரோனா தடுப்பூசிகள் வரவுள்ளன.

இந்த வருடத்துக்குள் இலங்கையிலுள்ள அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும்



நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமெரிக்காவின் பைசர் தடுப்பூசி நாட்டுக்கு கிடைத்துள்ளது. அதை நாங்கள் வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பியுள்ளோம்.

இந்தியாவிலிருந்து படகுகளில் வருவோர் மூலம் டெல்டா வைரஸ் தாக்கும் என்பதால் அப்பகுதி மக்களின் நலன்கருதி முதலில் அந்த தடுப்பூசிகளை வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளுக்கு அனுப்பியுள்ளோம். இலங்கை மக்களைப் பாதுகாக்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முஸ்லிம், சிங்களம், தமிழ் என்று பார்ப்பது கிடையாது. அவர் இந்நாட்டு மக்கள் என்று எண்ணியே பல்வேறு அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர் பெசில் ராஜபக்ஷ ஆகியோர் ஒரு நல்ல திட்டத்தோடு இலங்கையை கட்டியெழுப்புவார்கள். அதில் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும். ஒருபோதும் கொரோனாவைக் காரணம் காட்டி இந்த நாட்டின் அபிவிருத்திப் பணிகள் நிற்கப்போவதில்லை என்றார்.

# பலத்த காற்றினால் வீடுகளுக்கு சேதம்

(பலாங்கொடை)

பலாங்கொடை - மெந்தகந்த பிரதேசத்தில் வீசிய பலத்த காற்றினால் நேற்று (10) காலை பாரிய மரமொன்று, லயன் குடியிருப்பு மீது உடைந்து வீழ்ந்ததில் வீடொன்றின் ஒரு பகுதி முற்றாக சேதமடைந்துள்ளதுடன், இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமாகியுள்ளன. அந்தக் குடியிருப்பிலிருந்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

இதேவேளை, பலாங்கொடை - தெஹிகஸ்தலாவ பிரதேசத்தில் வீசிய பலத்த காற்றினால் நேற்றுக் காலை 9.30 மணியளவில் தென்னை மரமொன்று வீடோன்றின் மீது உடைந்து வீழ்ந்ததில் வீடு முற்றாக சேதமாகியுள்ளது.

தென்னை மரம் உடைந்து விழும்போது வீட்டில் உள்ளவர்கள் சமயலறையில் இருந்துள்ளதால் அவர்களுக்கும் பாதிப்புகள் ஏதும் ஏற்படவில்லை.



# பொத்துவிலில் 26 பேருக்கு கொரோனா தொற்று;

## பாக்கியத்தை பி –13 கிராம சேவையாளர் பிரிவு மீள் அறிவித்தல் வரை முடக்கம்

(பெரியநீலாவணை நிருபர்)


அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவுக்குட்பட்ட பொத்துவில் பிரதேசத்தின் பாக்கியத்தை பி -13 கிராம சேவையாளர் பிரிவு நேற்று முன்தினம் (09) இரவு 8.00 மணி முதல் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (09) மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பொத்துவில் கொவிட்- 19 கொரோனா விசேட தடுப்பு செயலணியினரின் விசேட கூட்டம் பொத்துவில் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.யூ.அப்துல் சமட் தலைமையில் மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.எம்.அப்துல் மலிக்கின் ஒருங்கிணைப்பில் சுகாதார வைத்திய அதிகாரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதன்போதே இத்தீர்மானம் அறிவிக்கப்பட்டதாக சுகாதார தரப்பினர் தெரிவித்தனர்.

தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள கிராம சேவையாளர் பிரிவில் வசிப்பவர்கள் வெளியிடங்களுக்குச் செல்வது மற்றும் வெளியிடங்களில் வாசிப்பவர்கள் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசத்துக்குள் பிரவேசிப்பது என்பன முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட கலந்துரையாடல் கூட்டத்தில் பொத்துவில் பிரதேச உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ், தவிசாளர் எம்.எச்.அப்துல் ரஹீம், பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திசாநாயக்க, செங்காமம் இராணுவ கட்டளைத் தளபதி வசந்த, விசேட அதிரடிப்படை பொத்துவில் இராணுவ முகாம் பொறுப்பதிகாரி வீரசேகர, தனிமைப்படுத்தப்பட்டுள்ள பிரிவு கிராம சேவையாளர் எம்.எஸ்.எம்.றிஸ்வி உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.



# அரசுக்கு எதிராக யாழில் கவனயீர்ப்புப் போராட்டம்



(யாழ். செய்தியாளர்)

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்கத்துக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் கவனயீர்ப்பு போராட்டமொன்று நேற்று (10) இடம்பெற்றுள்ளது.

புதிய ஜனநாயக மார்க்ஸிச லெனினிச கட்சியின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்திற்கு எதிரில் இந்தப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், அனைத்து அரசியல் கைதிகளையும் உடனே விடுதலை செய், கொரோனா திறைமறைவில் எங்களை வதைக்கதே, அனைவருக்கும் தடுப்பூசி வழங்கு, பாதுகாப்பு வழிகளைச் செய்து பாடசாலைகளைத் தொடங்கு, உணவுப்பொருட்கள் – எரிபொருட்களின் விலையை உடனே குறை, விவசாயிகள் – மீனவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிக்குத் தீர்வு காண், நிறுத்து நிறுத்து - விலை உயர்வை நிறுத்து உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டம் இடம்பெறும் இடத்திற்கு வருகைதந்த யாழ்.நகர பொலிஸார், போராட்டத்தை நிறைவுசெய்யுமாறு கூறியதையடுத்து, போராட்டம் நிறைவடைந்திருந்தமை குறிப்பிடத் தக்கது.

# மன்னார் மக்களுக்கு இரண்டாம் கட்ட தடுப்பூசியாக ‘பைசர்’ வழங்கிவைப்பு

(மன்னார்;)

மன்னார் மாவட்டத்தில் நேற்று (10) பைசர் கொரோனா தடுப்பூசி செலுத்தும் இரண்டாம் கட்டப்பணி ஆரம்பமாகியது.

மன்னார் மாவட்டத்திலுள்ள கரையோரப் பிரதேசங்களில், அபாயம் கூடிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு, முன்னுரிமை வழங்கப்பட்டு, குறித்த கிராமங்களைச் சேர்ந்த 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

குறிப்பாக நேற்று நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த வங்காலை, அச்சங்குளம், நறுவலிக்குளம், வஞ்சியம்குளம் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த 30 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு நானாட்டான் சுகாதார வைத்திய அதிகாரி றூபன் லெம்பேர்ட் தலைமையில் வங்காலை புனித ஆனாள் ஆலயத்தில் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

அதேநேரம், முசலி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வைத்திய அதிகாரி ஒஸ்மன் டெனி தலைமையில் அரிப்பு, சிலாவத்துறை,



முத்தரிப்புத்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மன்னார் மாவட்டத்திற்கென 20 ஆயிரம் பைசர் தடுப்பூசிகள் வழங்கப்பட்ட நிலையில், இரண்டாம் கட்டமாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தலைமையில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கையில் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரிகள், தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவிற்கான வைத்திய அதிகாரி, உட்பட சுகாதாரத் துறையினர் கடமைகளில் ஈடுபட்டுள்ள நிலையில், அதிகளவான மக்கள் ஆர்வத்துடன் தடுப்பூசிகளைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மாணிக்கக்கல் அகழ்வில் காணப்படும் இணை உரிமை தொடர்பான சட்டத்தடை நீக்கப்படும்

## அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தீர்மானம்



மாணிக்கக்கல் அகழ்வுக்கான நிலத்தின் இணை உரிமை இல்லாத நபர்களுக்கு அனுமதி பெறுவதற்கான சட்டரீதியான தடையை நீக்குவதற்கான பொருத்தமான ஒழுங்குவிதிகளை கைத்தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக்குழு அண்மையில் ஏற்றுக்கொண்டது.

கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச தலைமை தாங்கிய இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர்களான தயாசிறி ஜயசேகர, லொஹான் ரத்வத்த, பிரசன்ன ரணவீர ஆகியோர் கலந்துகொண்டனர்.

1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை சட்டத்தின் கீழ் கைத்தொழில் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒழுங்குவிதிகள் 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02 ஆம் திகதியிடப்பட்ட 2165/1 வர்த்தமானி அறிவிப்பு மற்றும் 2021 ஏப்ரல் 01 திகதியிடப்பட்ட 2221/49 எண் வர்த்தமானி அறிவிப்பு ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளன. மாணிக்கக்கல் சுரங்கத்தின் இணை உரிமையாளர் அல்லாத நபர்கள் மாணிக்கக்கல் சுரங்கத்திற்கான வரிப் பத்திரங்கள் மூலம் தொடர்புடைய உரிமத்தைப் பெற முடியும் என்று தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் அதிகாரிகள் தெரிவித்தனர். கைத்தொழில் அமைச்சின் செயலாளர் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள் இதன்போது இணையத்தினூடாகக் கலந்துகொண்டனர்.

# கள்ளச்சாராயம் காய்ச்சிய ஒருவர் கைது

கிளிநொச்சி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய நேற்று (10) பெரியகுளம் - கட்டைக்காடுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, சட்டவிரோதமாக மதுபான உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேகநபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அதற்கமைய கைதுசெய்யப்பட்டவரிடமிருந்து, 218 போத்தல் கோடாவும், கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவரும் சம்பவ இடத்தில் வைத்துக் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இதுதொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



**ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில், கிதுல்கல யடிபேரியவில் நேற்றுக்காலை ஏற்பட்ட பாரிய மண்சரிவு காரணமாக ஹட்டன் - கொழும்பு பிரதான வீதிப் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டது.** **(படப்பிடிப்பு: அருண் யுகேஷ்)**

# அரசை எதிர்த்து ஒன்றையும் செய்துவிட முடியாது!



## ஹாபீஸ் நஸீர் எம்.பி. கருத்து

**நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹாபீஸ் நசீர் அஹமட் 'தமிழன்' வார இதழுடன் கருத்துகளை பகிர்ந்துகொண்டார்.**

**கே – நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலை பற்றிய உங்கள் கருத்து என்ன?**

நாட்டில் மட்டுமல்ல, உலகளவில் இன்று பெரும் நெருக்கடியை நாம் எதிர்கொள்ள நேர்ந்துள்ளது. விசேடமாக கொவிட் -19 கொரோனாத் தொற்று பல்வேறு வகைகளில் எம்மைத் தாக்கி வருகிறது. உறவுகளை இழக்கிறோம், பொருளாதாரத்தை இழக்கிறோம் என்பது மட்டுமல்ல, இதற்கு எதிராகப் போராடுவதால் மன தைரியத்தையும் இழக்க நேரிடுகிறது. இவற்றை எதிர்கொண்டு அனைவரும் முன்னோக்கிச் செல்லவேண்டியுள்ளது.

**கே – ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை பிரதிநிதித்துவப்படுத்தும் நீங்கள், அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்தை ஆதரித்தீர்களே... ஏன்?**

சாதாரண விடயங்களிலும் சிலநேரங்களில், நமது தீர்மானங்கள் பிழைத்துப்போவதுண்டு. அதற்காக தொடர்ந்தும் அதைச் சரிப்படுத்தும் மனநிலைகளில் செயற்படாமல், சரிப்படுத்தும் சந்தர்ப்பங்களை உருவாக்க முயற்சிப்பதுதான் பிரயோசனமானது. கடந்தகால அரசியல் தீர்மானங்களால், சிங்களப் பெருந்தேசியவாதத்தின் சந்தேகப்பார்வைக்குள், முஸ்லிம் சமூகம் மாட்டிக்கொள்ளும் நிலைமைகள் ஏற்பட்டிருநதன. இந்த இடைவெளியை நெருக்கமாக்கும் உறவுப்பாலமாகத்தான் இருபதாவது திருத்தத்திற்கு ஆதரவளித்தோம்.

**கே – இருபதாவது திருத்தத்தை ஆதரித்ததற்கான பிரதிபலன்கள் கிடைத்திருக்கின்றனவா?**

மிகப்பிரதானமாக ஒன்று கிடைத்திருக்கிறது. எங்களுக்கும், அரசுக்குமிடையிலான புரிந்துணர்வு வளர்ந்து நட்பு மலரத் தொடங்கியுள்ளது. இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை அழுத்தி, அச்சுறுத்தி எதையும் செய்ய இயலாது. ஏனெனில், அந்தளவு பலத்திலுள்ளது இந்த அரசு. இதனால், நட்பு, நம்பிக்கை பேச்சுவார்த்தைகளினூடாகவே, சிலதைச் சாதிக்க வேண்டியுள்ளது. கொரோனாத் தொற்றில் உயிரிழந்த முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கான அனுமதியும் பரஸ்பர புரிந்துணர்வில்தான் கிடைத்தது. இது போன்று இன்னும் சில விடயங்களை வெல்வதற்கு, சூட்சுமமாகப் பேசிவருகிறோம்.

எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டத்திலும் பல விடயங்கள் பேசப்படவுள்ளன. அநாவசியக் கைதுகள், முஸ்லிம் அமைப்புக்கள் மீதான தடைகள், கலாசார அடையாளங்களை அச்சுறுத்தும் வகையிலான தீர்மானங்கள் என்பவற்றில் முஸ்லிம்களின் நிலைப்பாடுகள், இவற்றை இல்லாமல் செய்வதிலுள்ள எமது நியாயங்களை இக்கூட்டத்தில் விளக்கவுள்ளோம். எதற்கெடுத்தாலும், ஆர்ப்பாட்டம், அமர்க்களம், கோஷங்கள், கொடி பிடித்தல்களெல்லாம், சமூகங்களின் பொதுப்பரப்பிலிருந்து அந்நியப்படுத்தி விடும். அது மட்டுமல்ல, கோஷங்களும், ஆர்ப்பாட்டங்களும் களத்தைச் சூடாக்குவதற்கான விளம்பரங்களேயன்றி, காரியமாற்றும் கடமையுணர்வல்ல. சமூகத்தில் மிகப்பயங்கரமாகக் கொழுந்து விட்டெரிந்த, ஜனாஸா எரிப்பு விடயத்தை நிறுத்தியதும் பேச்சுவார்த்தைகள்தான். இருபதுக்கான முதல் நிபந்தனையே எரிப்பதை நிறுத்துவதாகத்தான் இருந்தது.

**கே – கட்சியை விட்டுப் பிரிந்து செல்லும் சிந்தனைகள் ஏதேனும் மேலோங்கியுள்ளனவா?**

(சிரிக்கிறார்...) முஸ்லிம்களுக்காக மர்ஹூம் அஷ்ரப் ஆரம்பித்த கட்சியை பலப்படுத்துவதுதான், சமூகத்துக்குச் செய்யும் சிறந்த தொண்டெனக் கருதுபவன் நான். எனவே, என்னிடம் இவ்வாறான சிந்தனைகள் இல்லை.

**கே – பொதுஜன பெரமுன அரசில் இணையும் விருப்பங்கள் உள்ளனவா?**

இந்த அரசாங்கமும் கூட்டுக்கட்சிகளைக் கொண்டதுதானே? எதையும் சாதிப்பதற்கு அரசில்தான் இணைய வேண்டும் என்பதில்லை. நல்ல விடயங்களை ஆதரித்து, சமூகத்துக்குத் தேவையானதைப் பெற்றுக்கொள்வதிலேயே குறியாக உள்ளோம். எல்லாவற்றையும் எதிர்த்துக்கொண்டு எதிர்க்கட்சி, ஆளுங்கட்சி என்ற மனநிலைகளை வளர்க்கும் அரசியல் கலாசாரம் மாறவேண்டும், மாற்றப் புறப்பட வேண்டும்.

**கே- ராஜபக்ஷக்களின் மற்றொரு சகோதரரான, பெசில் ராஜபக்ஷ நாடாளுமன்றம் வந்துள்ளதை என்ன கோணத்தில் நோக்குகின்றீர்கள்?**

கடந்த காலங்களில் அரசியல் பொதுவெளியில் அடையாளம் காணப்பட்ட நல்லதொரு ஆளுமை அவர். மிக நெருக்கடியான காலகட்டத்தில் அமைச்சராகியுள்ளார். நாட்டுக்கு நல்லது செய்வாரென்று நான் நம்புவதுபோன்றுதான், நாட்டு மக்களும் நம்புகின்றனர். நாட்டில் நிலவிய அசாதாரண காலங்களில்கூட, பல விடயங்களைச் செய்துகாட்டி, சர்வதேசத்தின் பிழையான பார்வைகளைப் போக்கிய செயல்வீரரும் இவர்தான். யுத்த காலத்தில் அகதியாக்கப்பட்ட தமிழர்களின் மீள்குடியேற்றப் பிரச்சினைகள், சர்வதேச அளவில் பாரிய நெருக்கடியை ஏற்படுத்தியிருந்தது. இதை,அவசரமாகத் தீர்த்து வைத்த பெசிலின் ஆளுமையால்தான் நாட்டுக்கே நிம்மதி கிடைத்தது. தனிப்பட்ட ரீதியான நட்புடன் நான் அவருடன் பலகாலமாகப் பழகிவருவதால், அவரிடமுள்ள ஆளுமை, இயலுமைகள் எனக்குத் தெரியும். மூன்றே மாதங்களுக்குள் ஒரு கட்சியைத் தொடங்கி, நம் நாட்டையே பெருமையடையச் செய்தவர் பெசில். ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து இந்த நேரத்தில் எடுத்துள்ள முடிவுதான், ராஜபக்ஷக்களின் ராஜதந்திரத்தை உலகுக்கு வெளிப்படுத்தியுள்ளது. அது மட்டுமல்ல, இவர் இனவாதி இல்லையென்பதை என்னால் அடித்துச் சொல்ல முடியும்.

**கே – அமைச்சரவையில் மாற்றங்கள் நிகழும்போது, உங்களுக்கும் பதவிகள் வழங்கப்படுமென பரவலாகப் பேசப்படுகிறது. அவ்வாறு வழங்கப்பட்டால் ஏற்றுக்கொள்ளும் எண்ணங்கள் உள்ளனவா?**

அமைச்சுப்பதவி என்பது ,அரசியல் கலாசாரத்தின் ஒரு கூறு. இந்தப்பதவிகளால் மக்களுக்கு சிறந்த சேவைகளாற்றலாம் என்பதும் ஏற்கத்தக்கதுதான். எனினும், எழுமாந்தமான முடிவுகளுக்குப் பலியாகி, இந்தப்பதவிகளை எடுக்க முடியாது. கட்சி,தலைமை என்பவைதான் இதைத் தீர்மானிக்க வேண்டும். பொறுப்பு வாய்ந்த பதவிகளிலுள்ளோர், எதையும் ஆராய்ந்து, ஆலோசித்தே முடிவுகளை மேற்கொள்வர்.

**கே – முஸ்லிம்களின் பிரச்சினைகளுக்கு இந்த அரசாங்கத்தில் தீர்வுகள் கிடைப்பதாகக் கருதலாமா?**

சமூகத்துக்குப் பாதகமான சில விடயங்களை உடனடியாக நிறுத்த முடியாவிட்டாலும், கிடப்பில் (pending) போடவைத்துள்ளோம். தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளால், அரசுக்கு ஏற்பட்ட புரிந்துணர்வுகளால்தான், பாதகமான விடயங்களை அவரமாக நிறைவேற்றாது, தடுக்க முடிந்துள்ளது. எங்கள் கருத்துகளை உள்வாங்கும் ஒரு ஆறுதல் சூழலும் இந்த அரசில் ஏற்பட்டிருக்கிறது.

**கே – முஸ்லிம் திருமணச் சட்டம் தொடர்பில் உங்கள் பார்வை என்ன?**

சமூகத்துக்கு ஏதுவான சட்டமாக இது மாற்றப்பட வேண்டும். இதற்காக தொடர்ச்சியான கருத்தாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இதுவரை, நடந்த சகல கருத்தாடல்கள், கலந்துரையாடல்களும் சாதகமான நிலையைத்தான் எட்டியுள்ளன. மதம் சம்பந்தமான விடயம் என்பதால், மிக நிதானமாகவே இதில் நடந்துகொள்ள வேண்டியுள்ளது.

**கே – முஸ்லிம் பெண்களின் கலாசார ஆடையான புர்காவைத் தடைசெய்ய அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. முஸ்லிம்களின் பிரதிநிதியென்ற வகையில் இதற்கு எதிராக நீங்கள் செய்யவுள்ளதென்ன?**

சமூகப் பிரச்சினைகளில் இதுவும் பிரதானமானது. ஒரு சிலரால் வழங்கப்பட்டுள்ள தவறான எடுகோள்களை எடுத்துக்காட்டி, அரசுடன் இதுகுறித்துப் பேசி வருகிறோம்.

**கே – முஸ்லிம் கட்சிகள் இணைந்து பொதுவான கூட்டணியை அமைக்கவுள்ளதாக, முஸ்லிம் அரசியல் தளத்தில் பேசப்படுகிறதே?**

தலைவர் அஷ்ரப்பின் மரணத்துக்குப் பின்னர், முஸ்லிம் அரசியல் தளத்தில் உருவான கருத்தியலே இது. பல கட்சிகளின் தோற்றம், சமூக விடுதலை அரசியலில், தேக்கம், என்பன பற்றிக் கவலைப்படும் புத்திஜீவிகள்தான் இந்த நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளனர். ஆனால், இப்போது இது தேர்தல் சீசன் கோஷமாக மாற்றப்பட்டுள்ளமைதான் கவலைக்குரியது. உண்மையில் இது நடந்தால் நல்லதுதான்.

**கே – அரசின் பங்காளிக் கட்சிகளுக்குள் குழப்பம் ஏற்பட்டுள்ளதாகவும், ஆட்சியைத் தொடர்ந்து கொண்டு செல்ல இயலாத நிலைமைகள் ஏற்படலாமெனவும் எதிர்வு கூறப்படுகிறதே?**

குழப்பமும், பிரச்சினையும் எதற்காக ஏற்படுகின்றன என்பது எங்களுக்குத் தெரியாதா? எத்தனையோ சவால்கள், குழப்பங்களைச் சமாளித்த ராஜபக்ஷக்களுக்கு கூட்டுக்கட்சிகளின் குழப்பங்கள் ஒருபொருட்டில்லையே.

**கே – அதிகாரப்பகிர்வின் அத்திவார அம்சமான மாகாணசபைத் தேர்தல்கள், இதுவரைக்கும் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றன. முன்னாள் முதலமைச்சர் என்ற வகையில் இதுபற்றிய உங்கள் நிலைப்பாடுளைக் கூறுங்களேன்.**

இந்தக் கவலை எல்லோருக்கும் உள்ளதுபோல் எனக்கும் உள்ளது. ஆனால், இப்போது எதிர்க்கட்சியிலுள்ள எவருக்கும் இதுகுறித்துப் பேசவோ அல்லது குரல்கொடுக்கவோ அருகதையில்லை. உள்ளூராட்சி சபைகள், மாகாணசபை முறைகளைச் சீரழித்து, சிறுபான்மையினருக்குத் துரோகம் செய்த பாவம், பழிகளை நல்லாட்சி நாயகர்கள்தான் ஏற்க வேண்டும். 2017 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட மாகாணசபைகள் திருத்தச்சட்டத்துக்கு நான் முந்தி, நீ முந்தி எனக் கையுயர்த்திய இவர்கள்தான், இன்று பிள்ளையைப்பிடி, பிள்ளையைப்பிடி எனப் பதறுகின்றனர். இந்தச் சட்டமூலம், ''தங்கத்தட்டில் தந்த பன்றியிறைச்சி'' எனச்சொன்னவர்கள் நாங்கள். இந்த இறைச்சியைச் சாப்பிட்டவர்கள் இப்போதுதான் அலறத் தொடங்கியுள்ளனர்.

**கே – ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள், இந்த நாட்டை ஆண்டுள்ளன. இவற்றில் முஸ்லிம்களுக்கு மிகப் பொருத்தமான அரசாங்கமாக எதைக் கருதலாம்?**

பொறுத்திருந்து, புரிந்துகொள்ள வேண்டிய கேள்வி இது. ஒப்பீட்டளவில் ஐக்கிய தேசியக் கட்சியில்தான், முஸ்லிம்களுக்கு அதிக அநீதிகள் நடந்துள்ளன. ஏன்,வாழைச்சேனையில் முஸ்லிம்களை உயிரோடு நெருப்பில் கொளுத்திக்காட்டியதும் இவர்கள்தான். வடக்கிலிருந்து முஸ்லிம்கள் விரட்டப்பட்டமை, பள்ளிவாசல்கள் இரத்தக்களரியாக்கப் பட்டதெல்லாம் பிரேமதாச, ரணில் தலைமைவகித்த ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சிகளில்தான் என்பதே நம் நாட்டின் துயர வரலாறு. நல்லாட்சியில் பள்ளிவாசல்களில் ஆயுதங்கள் இருப்பதாகக் கூறி தேடி சிறிய கத்தியைக் கைப்பற்றி முஸ்லிம்களை கொலைகாரர்கள் போன்று சித்திரிக்கவில்லையா? இந்த அக்கிரமங்களுக்கு நிகராக எதுவும் எந்த ஆட்சியிலும் நடைபெறவில்லை. தேவையேற்படுவோர் வரலாற்றுப் பக்கங்களைப் புரட்டிப் பார்க்கட்டும்.

நேர்காணல்:- யோ.தர்மராஜ்

# இரத்தினபுரியில் பல்வேறு இடங்களில் வெள்ளம் - மண்சரிவு ஏற்படும் அபாயம் என எச்சரிக்கை










(சிவா ஸ்ரீதரராவ்)

இரத்தினபுரி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து பெய்து வரும் அடைமழை காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டத்தில் இரத்தினபுரி, கிரியெல்ல, எலபாத்த, குருவிட்ட உட்பட மேலும் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இரத்தினபுரி நகரை அண்மித்த வெரலுப்ப, புளுங்குபிட்டிய, அல்-மக்கியா பாடசாலை மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள், இரத்தினபுரி சீவலி மைதானம், இரத்தினபுரி மணிக்கூட்டுக் கோபுரம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்கள் உட்பட மேலும் பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அத்துடன் இரத்தினபுரி மாவட்டத்தில் சில இடங்களில் மரங்கள் முறிந்து விழுந்துள்ளதுடன், சிறு மண்திட்டுகள் சரிந்துள்ளதையும் அவதானிக்க முடிந்தது.

இரத்தினபுரி மாவட்டத்தில் தொடர்ந்து மழை பெய்யுமானால் இங்கு மேலும் பல இடங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவு ஏற்படும் அபாயமுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மாவட்டத்தில் வெள்ளம் மண்சரிவு ஏற்படும் அபாயமுள்ள பிரதேசங்களில் மக்களை அவதானத்துடன் இருக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

# 3 கெபினட் - 4 இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்களுக்கு தெரிவுக்குழு அனுமதி

அமைச்சரவை அந்தஸ்துள்ள மூன்று அமைச்சுகள், நான்கு இராஜாங்க அமைச்சுகளின் செயலாளர்களுக்கு நாடாளுமன்றத்தின் உயர் பதவிகள் தொடர்பான தெரிவுக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது.

நாடாளுமன்றத்தின் உயர் பதவிகள் தொடர்பான தெரிவுக்குழு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் நேற்று முன்தினம் கூடியபோது இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நிதியமைச்சின் செயலாளராக எஸ்.ஆர்.ஆட்டிகல, புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஜி.எச்.கே.கே. குணவர்தன, கைத்தொழில் அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் தயா ரத்னாயக்க ஆகியோருக்கு நாடாளுமன்றத்தின் உயர் பதவிகள் தொடர்பான தெரிவுக்குழுவின் அனுமதி கிடைத்துள்ளது.

அத்துடன், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கொவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் செயலாளர் சுனேத்ரா குணவர்தன, வெளிநாட்டுத் தொழில் வாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ்.அருமைநாயகம், கூட்டுறவு சேவைகள், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சின் செயலாளர் எஸ்.ருவன்சந்திர, தென்னை, கித்துல் மற்றும் பனை செய்கை மேம்பாடு மற்றும் அவை சார்ந்த கைத்தொழில் பண்டங்கள் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவித்தாரண ஆகியோருக்கும் நாடாளுமன்றத்தின் உயர் பதவிகள் தொடர்பான தெரிவுக்குழு அங்கீகாரம் அளித்துள்ளது.

# கதிர்காமம் கிரிவெஹரவில் பிரதமர் சமய வழிபாடு


கதிர்காமம் கிரிவெஹரவிற்கு விஜயம் செய்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் (09) பிற்பகல் அங்கு வழிபாட்டில் ஈடுபட்டார்.

ருஹுணு மாகம் பத்துவே தலைமை சங்கநாயக்கர் கிரிவெஹர விகாராதிபதி கலாநிதி வணக்கத்திற்குரிய கொபவக தம்மிந்த தேரரிடம் நலன் விசாரித்த பிரதமர் அவரிடம் ஆசிகளையும் பெற்றுக்கொண்டார். அதனைத் தொடர்ந்து பிரதமர் மற்றும் பிரதமரின் பாரியார் திருமதி ஷிரந்தி ராஜபக்ஷ உள்ளிட்டோர் கிரிவெஹர வழிபாட்டில் ஈடுபட்டனர். வணக்கத்திற்குரிய கொபவக தம்மிந்த தேரர் உள்ளிட்ட மகா சங்கத்தினர் கிரிவெஹரவில் பிரித் பாராயணம் செய்து பிரதமருக்கு ஆசி வழங்கினர்.

பிரதமருடனான சமய வழிபாட்டில் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ, ருஹுணு மகா கதிர்காம ஆலயத்தின் பஸ்நாஹிர நிலமே டிஷான் விக்ரமரத்ன குணசேகர, முன்னாள் ஊவா மாகாண சபை உறுப்பினர் விமல் கலகம ஆரச்சி, கதிர்காமம் பிரதேச சபையின் தலைவர் சானக அமில் ரங்கன உள்ளிட்ட பிரதேச அரசியல்வாதிகள் பலர் கலந்துகொண்டனர்.



# மஸ்கெலியவில் மண்சரிவு; போக்குவரத்து ஸ்தம்பிதம்




(செ.தி.பெருமாள்)

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பெய்த அடைமழை காரணமாக நல்ல தண்ணீர் - மஸ்கெலிய பிரதான வீதியில் பாரிய மண் திட்டுகள் இரண்டு இடங்களில் சரிந்துள்ளமையால் போக்குவரத்து தடைப்பட்டது.

இதனால் அப்பகுதியிலுள்ள பயணிகள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். அத்துடன் பஸ் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

மேலும், நேற்று முன்தினம் பெய்த கடும் மழையினால் மவுசாக்கலை நீர்த்தேக்கத்தில் நீர்மட்டம் அதன் கொள்ளளவை எட்டியுள்ளது. அதேபோல் கனியோன், லக்ஷபான, நவ லக்ஷபான, விமல சுரேந்திர, காசல்ரீ ஆகிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்களும் அவற்றின் கொள்ளளவை எட்டியுள்ளன.

# மேல்கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் திறப்பு




(க.கிஷாந்தன்)

மலைநாட்டில் பெய்து வரும் அடைமழையால் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் வெகுவாக அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தின் மூன்று வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன.

நேற்று அதிகாலை ஒரு வான்கதவு திறக்கப்பட்ட நிலையில், நீர்மட்டம் அதிகரித்ததால் நேற்றுக் காலை மேலும் இரு வான்கதவுகள் திறக்கப்பட்டன. இதனால் சென்கிளயர் நீர்வீழ்ச்சியின் நீர்மட்டமும் அதிகரித்து ரம்மியமாகக் காட்சியளிக்கின்றது. அத்துடன், மேல் கொத்மலை அணைக்கட்டுக்குக் கீழுள்ள ஆற்றுப்பகுதியைப் பயன்படுத்துபவர்கள் விழிப்புடன் இருக்குமாறு கோரப்பட்டுள்ளது.

# மண்மேடு சரிந்ததில் குடும்பஸ்தர் பலி



(கம்பளை நிருபர்)

கம்பளை - தொலஸ்பாகை, விண்டபோரஸ்ட் பகுதியில் நேற்று (10) அதிகாலை வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து விழுந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நான்கு பிள்ளைகளின் தந்தையான 76 வயதுடைய ஒருவரே இவ்வாறு பலியாகியுள்ளார்.

கம்பளை பகுதியில் நேற்று முன்தினமிரவு முதல் அடைமழை பெய்துவருகின்றது. இந்நிலையிலேயே நேற்று அதிகாலை குறித்த வீட்டின்மீது மண்மேடு சரிந்து விழுந்துள்ளது.

இதனால் வீட்டுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது. பிரதேச வாசிகள், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் இணைந்து மண்ணுக்குள் புதையுண்டவரை மீட்டனர். எனினும், அவர் உயிர் பிழைக்கவில்லையென பொலிஸார் தெரிவித்தனர்.

# சாய்ந்தமருது வொலிவேரியன் விளையாட்டு மைதான அபிவிருத்திக்கு ரூ.50 இலட்சம் நிதி

(நூருல் ஹுதா உமர்)



சாய்ந்தமருது முன்னாள் பிரதேச செயலாளர் ஏ.எல்.எம்.சலீமின் வேண்டுகோளின் பிரகாரம் சாய்ந்தமருது பிரதேச செயலாளரினால், கடந்த மார்ச் 7ஆம் திகதி தயாரிக்கப்பட்ட 60 இலட்சம் ரூபா பெறுமதியான 4 வேலைத்திட்டங்களில், 3 திட்டங்களுக்கு கிராமிய மற்றும் பாடசாலைகள் விளையாட்டு உட்கட்டுமான மேம்பாட்டு இராஜாங்க அமைச்சினால் 50 இலட்சம் ரூபா நிதியொதுக்கப்பட்டுள்ளது.

இதற்கான முறையான திட்ட அறிக்கையினை சமர்ப்பிப்பதற்கு தேவையான அறிவுறுத்தல், சாய்ந்தமருது பிரதேச செயலாளருக்கு அம்பாறை மாவட்ட செயலாளரினூடாக மேற்படி அமைச்சினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதில் மைதான சுற்றுமதில் அமைப்பதற்கு 20 இலட்சம் ரூபா, மண்ணிட்டு மைதானத்தை சீர் செய்வதற்கு 20 இலட்சம் ரூபா, அத்துடன் புல் வளர்ப்பு மற்றும் பண்படுத்தலுக்கு 10 இலட்சம் ரூபா என மொத்தமாக 50 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிப்பது தொடர்பில் நேற்று கள விஜயம் செய்து நிலைகளை ஆராய்ந்து, கொண்ட சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரியும், இலங்கை பொதுச்சேவை ஆணைக்குழு உறுப்பினருமான ஏ.எல்.எம்.சலீம், சாய்ந்தமருது விளையாட்டுக்கழக சங்கங்களின் பிரதானிகள் மத்தியில் உரையாற்றும் போது நிதியொதுக்கீடு செய்த இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, இதற்கான அனுமதியினை பெற்றுத்தருவதில் பங்காற்றிய தேசிய காங்கிரஸ் தலைவரும், திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லாஹ், அத்துடன் அமைச்சின் செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு நன்றிகளை தெரிவித்தார்.

# அரசாங்கத்தின் ஆட்கள் என்று கூறி வலி. கிழக்கு தவிசாளருக்கு அச்சுறுத்தல்



யாழ். நகரில் 'அரசாங்கத்தின் ஆட்கள்' என்று கூறி பிக்கப் வாகனத்தில் வந்தவர்கள் தம்மை அச்சுறுத்தியதுடன், தாக்கவும் முயற்சித்ததாக வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை 4.20 மணிக்கு தவிசாளர் உத்தியோகபூர்வ வாகனத்தில், யாழ்ப்பாணம் ஸ்டான்லி வீதியின் பழைய தபால் கந்தோர் ஒழுங்கையினூடாகப் பயணித்த போது, மத்திய மாகாண இலக்கத்தகடு கொண்ட சொகுசு பிக்கப் (CP PP – 0595) வாகனத்தில் ஒரு குழுவினர் எச்சரித்தவாறு தவிசாளரின் வாகனத்தை முந்திச் சென்றுள்ளனர்.

முந்திச் சென்றவர்கள் முன்னர் தனியார் நெடுந்தூர பஸ் தரிப்பிடமாக பாவிக்கப்பட்ட வளாகத்திற்குள் தவிசாளரின் வாகனம் நிறுத்தப்பட்டவுடன், அவ்வளாகத்திற்குள் நுழைந்துள்ளனர். இதனைத்தொடர்ந்து தவிசாளர் என்ன பிரச்சினை எனக்கேட்டபோது, அவர்கள் தூஷண வார்த்தைகளை உபயோகித்தவாறு தவிசாளரை நோக்கி வந்துள்ளனர்.

தவிசாளர் தொலைபேசியில் அவசர பொலிஸ் (119) இலக்கத்திற்கு முயற்சித்தபோது, தாம் அரசாங்கத்தின் ஆட்கள் என்று கூறியவாறு தவிசாளரைத் தாக்குவதற்கு கட்டட உடைவு கல் ஒன்றினை அக் குழுவில் வந்திருந்த ஒருவர் தூக்கி வீச எத்தனித்தபோது அவ்விடத்திலிருந்த ஒருவரால் தடுக்கப்பட்டுள்ளார். மக்கள் ஒன்றுகூடியவுடன் தவிசாளர் அச்சுறுத்தியவர்களை படம் பிடித்தபோது தாமும் படம் பிடித்தவாறு விலகிச்சென்றுள்ளனர்.

இந்நிலையில் அவ்விடத்திலிருந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையம் சென்ற வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் அச்சுறுத்தியவர்களுக்கு எதிராக பொலிஸ் முறைப்பாட்டினைப் பதிவுசெய்துள்ளார். முறைப்பாட்டில் (CP PP – 0595) இலக்க வாகனத்தில் வந்தவர்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுற்றிவர சி.சி.டி.வி கண்காணிப்பு புகைப்படக்கருவிகள் பொருத்தப்பட்டுள்ள இடமொன்றில் இந்த அச்சுறுத்தல் இடம்பெற்றுள்ளமைகுறிப்பிடத்தக்கது.



பசறை – மடுல்சீமை பிரதான வீதியில், கிக்கிரிவத்தை என்ற இடத்தில், பாரிய மரமொன்று குறுக்காக விழுந்ததால் அந்த வீதியில் நேற்று போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டது. மரத்தை அப்புறப்படுத்த, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் நடவடிக்கை எடுத்தனர்.

(பதுளை செய்தியாளர்)

# பாண்டிருப்பில் கொரோனாவால் பெண்ணொருவர் உயிரிழப்பு

(பாண்டிருப்பு நிருபர்)

கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனைக்குட்பட்ட பாண்டிருப்பு கிராமத்தில் 58 வயது பெண்ணொருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளதாக கல்முனை வடக்கு பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது. இதனையடுத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பாண்டிருப்பில் 60 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் மேலும் 4 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று ஏற்பட்ட காலம் முதல் இதுவரை பாண்டிருப்பில் மட்டும் 36 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பதாக சுகாதாரப்பிரிவினர் தெரிவித்தனர்.

கல்முனைப் பிரதேசத்தில் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்துவதற்கு பொதுமக்கள் சுகாதாரப் பிரிவினருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குமாறும், பிரதேசத்தில் இறுக்கமான சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி நடக்குமாறும் கல்முனை பிராந்திய சுகாதாரப்பணிமனை வேண்டுகோள் விடுத்துள்ளது.


## தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: B

வெற்றி இலக்கங்கள்: 15 21 36 73

திகதி: 09.07.2021

சீட்டிழுப்பு இலக்கம்: 0530

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 2 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 74 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 157 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 4087 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2736 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 67754 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 12819 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,763,320.00

பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 87,630

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை

ரூ. 98,380,514.80

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Web: www.nlb.lk






## Mega Power மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 0848

உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 09.07.2021

ஆங்கில எழுத்து: R — சுப்பர் இலக்கம்: 02 — வெற்றி இலக்கங்கள்: 08 48 52 67

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 5 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 67 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 164 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4260 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2746 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 69182 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 12599 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு

அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.135,652,090.00

அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. 2,820,460.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD



## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 4500 — உத்தியோகபூர்வ முடிவுகள்

திகதி: 09.07.2021

வெற்றி எழுத்து: B — வெற்றி இலக்கங்கள்: 1 2 1 9 9 0

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | | | | |
|---|---|---|---|---|
| 1ஆம் பரிசு | B 1 2 1 9 9 0 | ரூபா | 2,000,000/- | 1 |
| 2ஆம் பரிசு | 2 1 9 9 0 | ரூபா | 100,000/- | 9 |
| 3ஆம் பரிசு | 1 9 9 0 | ரூபா | 10,000/- | 99 |
| 4ஆம் பரிசு | 9 9 0 | ரூபா | 1,000/- | 913 |
| 5ஆம் பரிசு | 9 0 | ரூபா | 100/- | 9178 |
| 6ஆம் பரிசு | 0 | ரூபா | 20/- | 90745 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | | | | |
|---|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 1 2 1 9 9 | ரூபா | 10,000/- | 10 |
| 8ஆம் பரிசு | 1 2 1 9 | ரூபா | 1,000/- | 86 |
| 9ஆம் பரிசு | 1 2 1 | ரூபா | 100/- | 892 |
| 10ஆம் பரிசு | 1 2 | ரூபா | 50/- | 9084 |
| 11ஆம் பரிசு | B | ரூபா | 20/- | 36192 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 8,988,940.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.15,596,932.00

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்

தேசிய லொத்தர் சபை www.nlb.lk

32, தேஷமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.



## கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2795 — சீட்டிழுப்பு திகதி: 09.07.2021

ஆங்கில எழுத்து: R — வெற்றி இலக்கங்கள்: 23 53 56 57

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 153 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 300 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 8256 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5288 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 134150 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 24380 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 172,530

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை ரூ. 5,113,720.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 76,963,720.40

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk

# உலகை மாற்றியமைத்தது கொரோனா

உலக மக்கள் தொகை நாள் என்பது ஆண்டுதோறும் ஜூலை 11 ஆம் திகதி உலகளாவிய ரீதியில் மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு எடுத்துச் செல்லும் ஒரு முயற்சியாக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தினால் கொண்டாடப்பட்டு வருகிறது.

1987ஆம் ஆண்டு ஜூலை 11 உலக மக்கள் தொகை 500 கோடியை எட்டியது. மக்கள் தொகைப் பெருக்கத்தின் அபாயத்தை உணர்ந்த ஐக்கிய நாடுகள் சபை 1987 ஆம் ஆண்டு முதல் ஜூலை 11 ஆம் திகதியை (World Population Day, recognized by the UN ) உலக மக்கள் தொகை தினமாக அறிவித்தது. 1989 முதல் இத்தினம் ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. மக்கள் தொகைப் பெருக்கத்தின் தீமைகளையும், சிறுகுடும்ப நெறியின் நன்மைகளையும் எடுத்துரைப்பது இத்தினத்தின் முக்கிய நோக்கமாகும்.

“இன்று அபிவிருத்தியடைந்து வரும் உலக நாடுகளில் கர்ப்பம் மற்றும் பிரசவம் தொடர்பான சிக்கல்களே பெண்களைப் பிரதானமாகக் கொன்று வருகின்றன. மேலும், தாய்மார் மரண வீதமே உலகில் மிகப் பெரியளவில் ஆரோக்கிய நியாயமின்மையாக விளங்குகின்றது.

பிறப்பு மற்றும் இறப்பு வீதத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் தொகைக் கடிகார (World Population Clock) மதிப்பீட்டின் படி 2021இல் 7.9 பில்லியன் என மதிப்பீடு சுட்டிக்காட்டுகின்றது

**World population** (09/07/2021)

| | |
|---|---|
| 7,901,523,595 | Current population |
| 3,986,754,755 | Current male population (50.5%) |
| 3,914,768,840 | Current female population (49.5%) |
| 82,163,380 | Births year to date |
| 254,220 | Births today |
| 31,979,011 | Deaths year to date |
| 98,946 | Deaths today |
| | |
| 50,184,369 | Population growth year to date |
| 155,274 | Population growth today |

சராசரியாக உலக மக்கள் தொகை நிமிடத்திற்கு 150 பேர், மணிக்கு 9000 பேர், ஒருநாளைக்கு 2,160,000 பேர் என்ற வேகத்தில் அதிகரித்து வருவதாக மதிப்பீட்டின் பிரகாரம் கூறப்படுகின்றது.

உலக சனத்தொகை அதிகரிப்பு தொடர்பாக ஐக்கிய நாடுகள் சனத்தொகைக் கல்வி நிறுவகத்தின் அறிக்கையின் பிரகாரம் கி.பி. 01இல் உலக சனத்தொகை சுமார் 20 மில்லியன்களாக காணப்பட்டது. இத்தொகை கி.பி. 1000ஆம் ஆண்டில் 275 மில்லியனாகவும், கி.பி. 1500ஆம் ஆண்டில் 455 மில்லியனாகவும், 1650ஆம் ஆண்டில் 500 மில்லியனாகவும், 1750ஆம் ஆண்டில் 700 மில்லியனாகவும் காணப்பட்டது. இவ்வாறு அதிகரித்த மக்கள் தொகை 1804ஆம் ஆண்டில் 1 பில்லியனாகவும், 1850ஆம் ஆண்டில் 1.2 பில்லியனாகவும், 1900 ஆம் ஆண்டில் 1.6 பில்லியனாகவும், 1927ஆம் ஆண்டில் 2 பில்லியனாகவும், 1950ஆம் ஆண்டில் 2.55 பில்லியனாகவும், 1960ஆம் ஆண்டில் 3 பில்லியனாகவும், 1975ஆம் ஆண்டில் 4 பில்லியனாகவும், 1987ஆம் ஆண்டில் 5 பில்லியனாகவும் உயர்ந்தது. இத்தொகை 1990ஆம் ஆண்டில் 5.3 பில்லியனாகவும், 1995ஆம் ஆண்டில் 5.7 பில்லியனாகவும், 1999ஆம் ஆண்டில் 6 பில்லியனாகவும், 2006ஆம் ஆண்டில் 6.5 பில்லியனாகவும், 2009 ஆம் ஆண்டு 6.76 பில்லியனாகவும் 2012ஆம் ஆண்டில் 7 பில்லியனாகவும், 2020ஆம் ஆண்டில் 7.6 பில்லியனாகவும் ஆகியுள்ளது. இத்தொகை எதிர்வரும் 2030ஆம் ஆண்டில் 8.2 பில்லியனாகவும், 2040ஆம் ஆண்டில் 8.8 பில்லியனாகவும், 2050ஆம் ஆண்டில் 9.2 பில்லியனாகவும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுவாக நோக்குமிடத்து 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தைத் தொடர்ந்து சனத்தொகையானது மிக வேகமாக பல மடங்கு அதிகரித்திருப்பதை அவதானிக்க முடியும்.

இன்று உலகளாவிய ரீதியில் அதிக சனத்தொகைக் கொண்ட 15 நாடுகளை எடுத்துக் கொள்ளுமிடத்து மக்கள் தொகை கடிகார (World Population Clock)

1. சீனா

| | |
|---|---|
| 1,447,839,725 | 18.32% |

2. இந்தியா 1,165,930,000 (17.22%)

| | |
|---|---|
| 1,399,602,586 | 17.71% |

3. ஐக்கிய அமெரிக்க

| | |
|---|---|
| 333,820,814 | 4.22% |

4. இந்தோனேசியா

| | |
|---|---|
| 277,383,268 | 3.51% |

5. பாக்கிஸ்தான்

| | |
|---|---|
| 225,772,833 | 2.86% |

6.பிரேசில்

| | |
|---|---|
| 214,743,183 | 2.72% |

7.நைஜீரியா

| | |
|---|---|
| 211,881,042 | 2.68% |

8.பங்களாதேஸ்

| | |
|---|---|
| 166,869,207 | 2.11% |

9. ரஸ்யா

| | |
|---|---|
| 145,994,338 | 1.85% |

10.Mexico

| | |
|---|---|
| 130,933,374 | 1.66% |

ஜூலை 9, 2021 மதிப்பீட்டின்படி ஆகியன அமைந்துள்ளன.

**Religion of the World**

| Religion | Number of followers | Percentage of total population |
|---|---|---|
| Christianity | 2,484,172,183 | 31.6 % |
| Islam | 1,941,018,638 | 24.7 % |
| Religiously Unaffiliated | 1,208,013,562 | 15.4 % |
| Hinduism | 1,168,785,340 | 14.9 % |
| Buddhism | 522,942,830 | 6.7 % |
| Folk or traditional religions | 444,574,333 | 5.7 % |
| Other | 66,737,025 | 0.9 % |
| Judaism | 14,919,945 | 0.2 % |

மதிப்பீட்டின்படி பின்வருமாறு அமைந்துள்ளது.

மேற்குறிப்பிட்ட அட்டவணைப்படி உலக சனத்தொகையில் தெற்காசிய நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகியன கூடிய சனத்தொகைக் கொண்ட நாடுகளாக இருப்பதை அவதானிக்கலாம். 2021ஆம் ஆண்டு ஜூலை 09ம் திகதியின் மதிப்பீட்டின் பிரகாரம் இப்பட்டியலில்

| | | | | |
|---|---|---|---|---|
| 59 | | Sri Lanka | 21,531,833 | 0.273 |

இலங்கை 59 ஆவது இடத்தில் உள்ளது.

இலங்கை சமூகக் குறிகாட்டிகள் பலவற்றில் மாறுபட்ட போக்கைக் கொண்ட நாடாக விளங்குகின்றது. இங்கு வருடாந்த இயற்கை அதிகரிப்பு வீதம் 1.1 ஆகவும், பிறப்புவீதம் 1000 பேருக்கு 17.9 வீதமாகவும், இறப்பு வீதம் 1000 பேருக்கு 6.6 வீதமாகவும் காணப்படுகின்றது.

இலங்கையின் 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கடிகாரத்தின் பிரகாரம் 18,797,257 தொகையாகவும், 2007 ஆம் ஆண்டில் 20,010,000 தொகையாகவும் இருந்த மக்கள் தொகை தற்பொழுது 2009ஆம் ஆண்டு மதிப்பின்படி 21,128,772 தொகையாக உயர்வடைந்துள்ளது. இங்கு ஆண்களின் சராசரி ஆயுட்காலம் 71 வயதாகவும், பெண்களின் சராசரி ஆயுட்காலம் 78 வயதாகவும் காணப்படுகின்றது.

இலங்கையின் சராசரி மக்கள் தொகை வீதத்தினை நோக்கும்போது, 1995 முதல் 2000 ஆண்டு வரையிலான காலப்பகுதியில் 1.37 வீதமாக இருந்த வளர்ச்சி வீதம் அண்மைய தரவுகளின் படி 1.1 வீதமாகக் குறைவடைந்துள்ளது. இது 2050 ஆண்டில் 0.45 வீதமாக மேலும் குறைவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கையின் கருவளவீதமானது 1965 ஆம் ஆண்டில் 5.19 வீதமாகவும், 1975 ஆண்டில் 3.6 வீதமாகவும், 1995 முதல் 2000 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் 1.96 வீதமாகவும் காணப்படுகின்றது. இவ்வாறு குறைவடையும் போக்கானது, பெண்கள் கல்வியில் ஈடுபாடு, திருமண வயதில் ஏற்பட்ட மாற்றம், குடும்பக்கட்டுப்பாடு பற்றிய விழிப்புணர்வு, பெண்களின் தொழில் அந்தஸ்து அதிகரிப்பு போன்றவற்றின் காரணங்களாக அமைந்ததெனலாம்.

உலகளாவிய ரீதியில் தற்பொழுது வளர்ச்சியடைந்து வரும் மக்கள் தொகையானது, மக்கள் தொகைக் கடிகாரத்தின் 2009 ஆம் ஆண்டு கணிப்பின்படி, மக்கள் தொகை வளர்ச்சி வீதமானது 1.31 வீதத்தால் அதிகரித்து வருகின்றது. ஒவ்வொரு வினாடிக்கும் 2.582 வீதமாகவும், ஒரு நாளுக்கு 223,098 எனவும், ஒரு வருடத்திற்கு 81,430,910 எனவும் அதிகரித்துச் செல்கின்றது. எனினும், 2050 ஆம் ஆண்டு, மக்கள் தொகை வளர்ச்சி 0.5 வீதமாக குறைவடைகின்ற போதிலும், உலக சனத்தொகையானது 900 கோடியாக பதிவாகும் என அமெரிக்க மக்கள் தொகை மதிப்பீட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

மக்கள் தொகையானது இதே வேகத்தில் வளர்ந்து செல்லுமாயின் 2075 ஆம் ஆண்டில் 1000 கோடியாகவும் 2200 ஆம் ஆண்டில் 1,200 கோடியாகவும் உயரும் என மக்கள் தொகை வளர்ச்சி தொடர்பான அறிக்கைகள் பலவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலக மக்கள் தொகை பெருக்கத்திற்கான பிரதான காரணங்களாக பிறப்பு வீதம், இறப்பு வீதம் என்பன அமைந்துள்ளன. உலக மக்கள் தொகை நிர்ணயப்படி பிறப்புகள் முக்கியத்துவம் பெறுகின்றன. பெண்களின் கருவளம் பிறப்பு வீதத்தை நிர்ணயிக்கின்றது. இனப்பெருக்கத் திறன்கொண்ட பெண்கள் பெறும் உயிருள்ள குழந்தைகளின் எண்ணிக்கை ‘கருவளம்’ எனப்படும். ஓராண்டில் ஆயிரம் மக்களுக்குப் பிறக்கின்ற குழந்தைகளின் எண்ணிக்கை பிறப்பு வீதம் எனப்படும். நாடுகளின் பிறப்பு வீதமானது உயிருடன் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கையை ஆயிரத்தால் பெருக்கி நாட்டின் மொத்த சனத்தொகையால் பிரிக்கும்போது வருகின்றது. பிறப்பு வீதத்தை நிர்ணயிக்கும் காரணிகளாக வயது, மதம், கல்வி நிலை, பொருளாதார நிலை, இருப்பிடம் போன்றன அமைகின்றன.




குறித்த ஓராண்டில் ஒரு நாட்டில் வாழ்கின்ற மக்களில் ஆயிரம் பேருக்கு மரணம் அடைகின்றோரின் எண்ணிக்கை ‘இறப்பு வீதம்’ என்பர். நாடுகளின் இறப்பு வீதம் என்பது இறந்தோரின் மொத்த எண்ணிக்கையை ஆயிரத்தால் பெருக்கி நாட்டின் மொத்த மக்கள் தொகையால் வகுக்கும்போது பெறப்படும் எண்ணிக்கையாகும். பொதுவாக இறப்பு வீதத்தைவிட பிறப்பு வீதம் அதிகமாகக் காணப்படுவதே மக்கள் தொகைப் பெருக்கத்திற்கான காரணமெனலாம். நவீன காலத்தில் மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள மகத்தான முன்னேற்றம் பெருமளவுக்கு இறப்பு வீதத்தைக் கட்டுப்படுத்தியுள்ளது.

பூமியிலுள்ள வளங்கள் 200 கோடி மக்களுக்கு மட்டுமே போதுமானதாக மதிப்பிடப்பட்டுள்ளது. அதிகப்படியான மக்கள் தொகையால் சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் பிரச்சினைகள் அதிகரிக்கின்றன. ஒவ்வொரு நாளும் பூமியின் வளங்களை புதிதாக இரண்டு இலட்சம் பேரோடு பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கிறது. நாம் வாழும் பூமிக்கு நாமே ( மனிதர்கள் ) பாரமாகிவிட்டோம் எனும் நிலைக்கு மனித மக்கள் தொகை அதிகரித்துவிட்டதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். இந்த அதிகரிப்பானது பூமியில் இருக்கும் பயன்பாட்டுக்குரிய வளத்தை விட அதிகமாக உருவாகி வருவதால் குடிநீர் மற்றும் உணவு வளப்பிரச்சனை என்பது உலகில் விரைந்து அதிகரிக்கும் நிலை இருந்து வருகிறது. இதனை ஈடு செய்ய நீர் முகாமைத்துவப் பயன்பாடு மற்றும் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உணவுப் பயிர்களின் உற்பத்திகளை அபரிமிதமாக அதிகரிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இருப்பினு, இது விடயத்தில் சிக்கல்களும் நிறைந்திருக்கின்றன.

பூமியின் கொள்ளளவை விஞ்சிய உலக மக்கள் தொகை அதிகரிப்பானது ஆபத்தான விளைவுகளையே உருவாக்கும் என்பதால் உலக மக்கள் தொகை வளர்ச்சி வீதத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய கட்டாய நிலை பூமியில் தோன்றியுள்ளது என்கின்றனர் அமெரிக்க விஞ்ஞானிகள். மனித இனத்தின் பெருக்கம் பூமியின் சுற்றுப்புறச் சூழல் பாதிப்பையும் அதிகரிக்க வகை செய்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மக்கள் தொகை பெருக்கத்தின் பாதிப்பு அபிவிருத்தியடைந்த நாடுகளிலும் பார்க்க அபிவிருத்தியடையாத நாடுகளிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. காரணம் உலக வளத்தில் 80 சதவீதத்தை வைத்திருக்கும் அபிவிருத்தியடைந்த நாடுகளான செல்வந்த நாடுகளிலுள்ள மக்கள் தொகை வெறும் 20 சதவீதம்தான். மாறாக வெறும் 20 சதவீத வளத்தைக் கொண்டிருக்கும் அபிவிருத்தியடையாத நாடுகளான ஏழை நாடுகளிலுள்ள மக்கள் தொகையோ 80 சதவீதமாகும்.

ஒரு குடும்பத்தில் எவ்வளவுதான் பொருளாதார வளமிருந்தாலும் குடும்பத்தின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தத் தவறினால் வளம் வறண்டு விடும். வாழ்வு வீழ்ந்து விடும். அளவோடு பெற்றால்தான் வளமோடு வாழ முடியும். வீட்டுக்குப் பொருந்தும் இந்த நியதி நாட்டுக்கும் பொருந்தும்.

உலகில் 6 வினாடிகளுக்கு ஒரு குழந்தை போதிய சத்துணவின்மையினால் இறக்கிறது. ஆபிரிக்க மண்டல நாடுகள்தான் இதில் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற நிலை கடந்த 20 ஆண்டுகளில் எப்போதும் இருந்ததில்லை. இதே நிலை நீடித்தால் பட்டினிச்சாவு ஆபத்து ஏற்படும். மனிதாபிமான அவலத்தின் விளிம்பில் உலகம் உள்ளது. இதனை எதிர் கொள்ள முழுமையாக நன்கொடைகளையே நம்பியிருக்கவேண்டிய நிலை உள்ளது. இக்கருத்து ஆழமாக ஆராயப்படல் வேண்டும்.

2012 இன் ஆரம்பத்தில் உலக மக்கள் தொகை 700 கோடியை எட்டிவிடுமெனவும், 2050 இல் 900 கோடியைத் தாண்டி விடுமெனவும் ஐ.நா. மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. அதிகளவு மக்கள்தொகைப் பெருக்கம் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலேயே ஏற்படும். 2010 – 2050 வரையான காலப்பகுதியில் உலக சனத்தொகையின் அரைப்பங்கை கொண்டதாக 9 நாடுகள் இருக்குமென கூறப்படுகிறது. அதில் இந்தியா, அமெரிக்கா, சீனா, பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகியவை அடங்கியுள்ளன.

ஏனைய நாடுகள் நைஜீரியா, எத்தியோப்பியா, கொங்கோ குடியரசு, தான்சானியா ஆகியவை அதிகளவு சனத்தொகையை கொண்ட நாடுகளாக இருக்கும். அண்மைய மதிப்பீடுகளில் பாரிய மாற்றங்கள் இல்லையென்று பொருளாதார, சமூக விவகாரத் திணைக்களத்தின் மக்கள் தொகைப் பிரிவின் பணிப்பாளர் ஹானியா ரிவிசன் தெரிவித்துள்ளார். 2050 இல் உலக மக்கள் தொகை 901 கோடியாயிருக்குமென மதிப்பிடப்பட்டிருப்பதாக அவர் கூறியுள்ளார். உலக மக்கள் தொகை எதிர்பார்ப்புகள் தொடர்பாக 2008 இற்கான மீளாய்வு அறிக்கையை அவர் சமர்ப்பித்திருக்கிறார்.

பெண் ஒருவருக்கு 2.5 பிள்ளைகள் என்ற விகிதத்தில் தற்போது உலகளாவிய ரீதியில் பிறப்பு வீதம் உள்ளது. இப்போதிலிருந்து 2050 வரை பெண் ஒருவருக்கு 2.1 பிள்ளைகள் என்ற விகிதத்தில் பிறப்பு வீதம் வீழ்ச்சியடையுமென கணிப்பிடப்படுவதாக அவர் மேலும் கூறியுள்ளார். மிகக்குறைந்தளவு வளர்ச்சியடைந்த 49 நாடுகளில் மக்கள் தொகை வேகமாக அதிகரித்துவருகிறது. வருடாந்தம் 2.3 வீதத்திற்கு மக்கள் தொகை பெருகி வருவதாக மக்கள் தொகை மதிப்பீட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

வறுமை, வேலையின்மை, அடிப்படைச் சுகாதார வசதியின்மை, சுற்றுச்சூழல் கேடு, தண்ணீர்ப் பஞ்சம் போன்றவற்றிலிருந்து வன்முறை, கொலை, கொள்ளை வரையிலாக அனைத்தும் அளவுக்கதிகமான மக்கள் தொகைப் பெருக்கத்தின் பக்க விளைவுகளே என்ற உறுதியாகச் சொல்லலாம்.

மக்கள் தொகைப் பெருக்கத்தால் வனவளம் அருகி, மண் அரிப்பு பெருகி, சுற்றுச்சூழல் சீர்கெடுகிறது. கொங்கிறீட் காடுகளின் வளர்ச்சியால் பயிர்க் காடுகளுக்கான நிலப்பரப்பு குறைந்து வருகிறது. கிராம மக்கள் பிழைப்புக்காக நகரத்தை நோக்கி ஓடுகிறார்கள். அங்கே குடிசைகள் பெருகி சுற்றுச்சூழல் சீர் கெடுகிறது. குடிநீர்ப் பற்றாக்குறை, மின்சாரப் பற்றாக்குறை, போக்குவரத்து நெரிசல், மருத்துவமனைகளில் கூட்டம், பாடசாலைகளில் இடமின்மை, போன்ற பல்வேறு பிரச்சினைகளால் நகரங்கள் நரகங்களாகின்றன.

மேற்குறிப்பிட்ட அடிப்படையில் மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படக் கூடிய பிரச்சினைகளை நேரடியாக நோக்குவோம். அவை அடிப்படையில் உணவுப் பிரச்சினை, தொழில் பிரச்சினை, வதிவிடப் பிரச்சினை என வகுக்கலாம். கல்வி வசதி, மருத்துவ வசதி, சுகாதார வசதி, போக்குவரத்து வசதி முதலிய சமூகநலச் சேவைகளை நிறைவேற்றுவதில் ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளென பல மக்கள் தொகை பிரச்சினைகள் தலைதூக்கியிருக்கின்றன. இவற்றினால் அதிகளவில் பாதிக்கப்படுவன அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளேயாகும்.

மக்கள் தொகைப் பெருக்கத்தினால் இன்றைய உலகம் எதிர்நோக்கும் முக்கியமான பிரச்சினை உணவுப் பிரச்சினையாகும். அதிகரித்துவிட்ட மக்களுக்கு போதிய உணவுமில்லை. ஊட்டமான உணவுமில்லை. உலகின் மக்கள் தொகையில் மூன்றிலொரு பங்கினர் உணவுப் பற்றாக்குறையினால் தவிக்கின்றனர். மூன்றிலொரு பங்கினருக்கு மாத்திரமே போதுமானளவு உணவு கிடைக்கின்றது. அத்துடன், வேலையில்லாப் பிரச்சினை குறைவிருத்தி நாடுகளில் அதிகளவில் தலைதூக்கியுள்ளது. அதனால்தான் அண்மைய ஆண்டுகளில் பலவிதமான தொழில்களை நாடி இலங்கை, இந்திய மக்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு அதிகளவில் இடம்பெயர்கின்றனர். மூளைசாலிகள் வெளியேறுவதும், மனிதவலு வெளியேறுவதும் ஒரு நாட்டின் ஏற்பட்டிருக்கும் வேலையில்லாமையினாலும், ஊதியக் குறைவினாலுமாகும். பொதுவாக பயிர்ச்செய்கை பொருளாதாரத்திலேயே தொழில் பிரச்சினை அதிகளவு காணப்படுகிறது. அதிகரிக்கும் மக்கள் தொகைக்கு வேலை வழங்கும் திறன் பயிர்ச்செய்கைக்கு இல்லை. அதனால்தான் குறைவிருத்தி நாடுகள் இன்று கைத்தொழில் ஆக்கங்களில் கவனம் செலுத்தி வருகின்றன.

இன்று முக்கியமாக நகர்ப்புறங்களில் வதிவிடப் பிரச்சினைகள் தோன்றியிருக்கின்றன. மக்கள், தொழில் நாடி நகரங்களுக்குக் குடிபெயர்வதால் நகரங்களில் இருப்பிடமின்மை உருவாகின்றது. நியூயோர்க், லண்டன், ஹொங்கொங், பெரிஸ் போன்ற பெரிய நகரங்களில் மாத்திரமன்றி கொழும்பு போன்ற சிறிய நகரங்களிலும் வதிவிடப் பிரச்சினைகள் உருவாகின்றன. அதனால்தான் வானளாவிய மாடிக்கட்டடங்கள் இந்த நகரங்களில் கட்டப்பட்டு வருகின்றன. பண்டைய காலம் முதலே மக்கள் தொகைப் பிரச்சினை பொருளாதார, புவியியல் அறிஞர்களுக்கு ஒரு பெரும் பிரச்சினையாக இருந்து வருகின்றது. இப்பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து அறிஞர்கள் மக்கள் தொகைக் கோட்பாடுகளை விஞ்ஞானபூர்வமாக உருவாக்கியுள்ளனர்.

மேலும், மக்கள் தொகைப் பிரச்சினை உக்கிரமடைய உலகக் குடிப்பரம்பலும் ஒரு காரணமாக அமைகின்றது. கிழக்காசிய நாடுகளிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், மத்திய ஐரோப்பிய நாடுகளிலும், வடக்கில் அமெரிக்க நாடுகளிலும் மக்கள் தொகைப் பரம்பல் அதிகரிப்புக்கான காரணங்களாக பயிர்ச்செய்கைக்கு உகந்த விளைநிலங்கள் காணப்படுவதும், உகந்த காலநிலை காணப்படுவதும் பிரதான காரணிகளாக அமைகின்றன. அதேநேரம், அதிகக் குளிர்ப் பிரதேசங்கள், அதிக வெப்பப் பிரதேசங்கள் அதிக ஈரலிப்பான பிரதேசங்கள், அதிக உயரமான பிரதேசங்களில் மக்கள் தொகைப் பரம்பல் மிக அரிதாகக் காணப்படுகின்றது.

மக்கள் தொகைப் பெருக்கம் குறித்து இரு வேறு கருத்துக்கள் தொடர்ந்து இருந்து வருகின்றன. ‘பிறக்கும் குழந்தை வயிற்றோடு மட்டும் பிறக்கவில்லை. உழைப்பதற்கு இரு கரங்களோடு பிறக்கிறது’ இது சமவுடமைவாதிகளின் கருத்தாகும். அதாவது பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் சமவுடமைவாதம் மூலதனமாகவே கருதுகின்றது. மறு சாரார் ‘கரங்கள் உழைப்பது சில காலம்தானே. ஆனால், காலம் முழுக்க வயிற்றுக்கு சோறிட வேண்டுமே’ என்று வேதனை கொள்கிறது இது முதலாளித்துவவாதத்தின் அடிப்படை. இதை வேறுவிதமாகக் கூறும்போது பிறக்கும் ஒவ்வொரு குழந்தையும் சுமையாகவே கொள்ளப்படுகின்றது.

அறியப்பட்ட வளங்களை கணக்கில் கொண்டு உலக மக்கள் தொகை மிகையாக (Over Population) கருதப்படுகிறது. நாளைய தினம் மனிதனின் அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியால் இயற்கையின் இரகசியங்கள், முடிச்சுகள் அவிழ்க்கப்பட்டு புதுப்புது வளங்கள் கண்டறியப்படுமானால் இருக்கும் இந்த மக்கள் தொகை குறைவானதாக (Under population) கருதப்படும் நிலை ஏற்படக்கூடும்.

அதே போல மக்கள் தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் கேடுகளை விட மக்கள் தொகை குறைந்துவிட்டால் அது பேராபத்தில் முடிந்து விடும் என்ற கணிப்பும் இருக்கின்றன. மக்கள் தொகைக் கட்டுப்பாட்டின் காரணமாக உழைக்கும் மக்களின் எண்ணிக்கை குறைந்து, ஓய்வெடுக்கும் மூத்த மக்களின் எண்ணிக்கை அதிகரித்து விடும் என்பதை ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன.

இவையனைத்தும் எதிர்காலத்தில் நிலவும் சமூக, பொருளாதார, இயற்கை சூழலைப் பொறுத்தது. இன்றைய சூழலில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தொகை ஒரு நாட்டிற்குச் சொத்தா, அல்லது சுமையா என்றால் தொழிலாளர்களின் தேவை பெருமளவில் இருக்கும். சில நாடுகளுக்கு வேண்டுமானால் அது இருக்கிறது என்பதே உண்மை. அதன் பொருட்டே சிறுகுடும்ப நெறியை பின்பற்றுவோருக்கு அரசு பல்வேறு சலுகைகளையும் உதவிகளையும் அளிக்கிறது.

எது எவ்வாறெனினும் மக்கள் தொகை வளர்ச்சிக்கேற்ப சூழலின் சமநிலை பாதிக்கப்படுவது நிதர்சனமான உண்மை. எனவே, எமது சூழலினை சுத்தமாக வைத்திருப்போம் எதிர்கால சந்ததிக்கு சிறந்த உலகினை விட்டுச்செல்வோம் ....

**தொகுப்பு:- செபமாலை றியானா**

# பாவம்!



## மிருகங்களின் இச்சைக்கு பலியாகும் பூக்கள்

**இணையத்தளங்களின் ஊடாக 5000 சிறுமியரும் பெண்களும் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.**

**அண்மையில் அடையாளம் காணப்பட்ட 15 வயது சிறுமி 60 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப் பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.**

**அந்தச் சிறுமி மீது பாலியல் குற்றம் புரிந்த அரசியல்வாதியொருவர், பொலிஸ் உயர் அதிகாரியொருவர் உள்ளிட்ட மேலும் பலர் விரைவில் கைதாகலாம் என தெரிவிக்கப்படுகிறது.**

**நா.தினுஷா**

காலங்காலமாக சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் பேசப்பட்டிருந்தாலும், சமூக நடப்புகள் தொடர்பில் புரியாத வயதிலுள்ள சிறுவர்களை இணையத்தளத்தினூடாக விளம்பரப்படுத்தி துஷ்பிரயோகத்துக்குட்படுத்தும் யுகமொன்றை சந்திக்க நேர்ந்துள்ளது.

இணையத்தள வியாபாரத்துக்கு பெண்ணொருவர் பயன்படுத்தப்படுவதாக கடந்த ஜூலை மாதம் 7ஆம் திகதி கல்கிஸை பொலிஸ் தலைமையகத்துக்கு தகவல் கிடைத்துள்ளது. கல்கிஸை புகையிரத பாதையிலுள்ள ஒரு தொடர்மாடி குடியிருப்பில் இந்த சம்பவம் இடம்பெறுவதாகவும் தகவல் கிடைத்துள்ளது. இதுதொடர்பில் கல்கிஸை பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் முகவர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவர்களிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய பொலிஸாருக்கு கிடைத்த தகவலில் குறிப்பிடப்பட்ட பெண்ணுக்கு 15 வயது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த சிறுமி தங்கியிருந்த வீட்டுக்குப் பெருமளவு தொகை பணம் எவ்வளவு செலவிடப்படுகின்றது, எவ்வித தொழிலும் இல்லாத நபரொவர் எவ்வாறு இந்தப் பணத்தை செலுத்துகிறார் என்ற அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய 35 வயதுடைய நபரொருவர் கைதுசெய்யப்பட்டார்.

தந்தை மற்றும் தாயாரினால் கைவிடப்பட்ட நிலையில், பெற்றோரின் அனுமதியுடனேயே சிறுமி பாலியல் நடவடிக்கைகளுக்காக இணையத்தளத்தினூடாக விற்பனை செய்ய ஒப்படைக்கப்பட்டுள்ளார் என்பது அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய மாலைதீவின் முன்னாள் இராஜாங்க அமைச்சர் மொஹமட் அஸ்மலி உள்ளிட்ட 34 பேர் கைதுசெய்யப்பட்டிருந்தனர். இவர்களில் குறித்த சிறுமியை அழைத்துச்சென்ற தரகர்கள் 17 பேரும், துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவர்கள் 17 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்திருந்தார்.



அதற்கமைய, இந்த வியாபார நடவடிக்கைக்காக நாட்டிலுள்ள 02 பிரதான விளம்பர இணையத்தளங்களும், 03 சாதாரண இணையத்தளங்களுமாக மொத்தம் 05 இணையத்தளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. பாரதூரமான குற்றச்செயலாக கருதப்படும் ஆட்கடத்தல், சிறுவர் துஷ்பிரயோம் மற்றும் சிறுவர் உரிமை மீறலாக இந்த சம்பவம் அமைந்துள்ளதுடன், பாரதூரமான இணையவழி குற்றச்செயலாகவும், துஷ்பிரயோகமாகவுமுள்ளது.

மிருகங்களை விலைபேசி இணையத்தளத்தினூடாக விற்பனை செய்வது போன்று மனிதர்களையும் விலைக்கு விற்பனை செய்வதும், இணையத்தளத்தினூடாக பாலியல் துஷ்பிரயோகம் செய்வதும் தண்டனைக்குரிய செயற்பாடாகும்.

இணையத்தள உரிமையாளர்கள் விளம்பரமொன்றை வெளியிடும்போது எந்த நோக்கத்துக்காக இவ்வாறான விளம்பரம் வெளியிடப்படுகிறது, அதனால் யாரேனும் பாதிக்கப்படுவார்களா, துஷ்பிரயோகப்படுத்தப்படுவார்களா போன்ற விடயங்கள் தொடர்பில் கவனமின்றி செயற்படுவதால், இவ்வாறான பாரியளவு குற்றங்கள் இடம்பெறும் நிலை உருவாகியுள்ளது. மனித உரிமை மற்றும் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் இணையத்தள உரிமையாளர்கள் தொடர்பில் சட்ட ஏற்பாடுகள் செய்ய வேண்டியது அவசியமாகும்.

இணையத்தள குற்றங்களில் சைபர் குற்றங்களே அதிகளவில் இடம்பெறுகின்றன. குறிப்பாக சைபர் குற்றங்களுக்கப்பால் இணையத்தள வாயிலான துண்பறுத்தல்களே அதிகளவில் இடம்பெறுகின்றன. தற்போதுள்ள நிலைமைகளில் இவ்வாறான குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகளவில் பதிவாவதாக இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஒசத சேனநாயக்க தெரிவித்தார்.

வீட்டிலிருந்து கல்வி நடவடிக்கைகளை இணையத்தளத்தினூடாக முன்னெடுக்க வேண்டியுள்ளது. இதுதொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளன. பல்லாயிரக்கணக்கான இணையத்தளங்கள் இன்று உலகில் காணப்படுகின்றன. அவற்றில் சட்ட ரீதியாக பதிவுசெய்யப்பட்ட இணையத்தளங்களும் இருக்கிறன. சட்டபூர்வமற்ற இணையத்தளங்களும் இருக்கின்றன.

இதனால் செயலிகளுக்கும், இணையத்தளங்களுக்கும் மாணவர்கள் அடிமையாகும் நிலை உருவாகியுள்ளது. பெற்றொர்களின் கவனமின்மையினாலேயே இந்த 15 வயது சிறுமியின் பிரச்சினை உருவாகியுள்ளது. தொலைதொடர்புகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவின் தனியான தீர்மானத்துக்கமைய தேவையில்லாத இணையங்களை எம்மால் தடைசெய்ய முடியாது. அவ்வாறான இணையத்தளங்களை முடக்க வேண்டுமாயின் அதற்கு நீதிமன்ற உத்தரவும் அவசியமாகவுள்ளது. அதனடிப்படையிலேயே நாங்கள் செயற்பட்டு வருகின்றோம். அவ்வாறான பல்வேறு இணையத்தளங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம்.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை மற்றும் பொலிஸாருடன் இணைந்து இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் செயற்பட்டு வருகின்றோம். ஆகவே, நாம் தற்போது தொழில்நுட்பமயமாகியுள்ளதால், வீட்டிலிருந்து கல்வி கற்கும் நடவடிக்கைகளை கட்டாயம் முன்னெடுக்க வேண்டியுள்ளது. ஆகவே, பெற்றோர்கள் தொலைபேசியோ அல்லது வேறேதும் சாதனத்தை வழங்குவதாயின் தேவையான அணுகல்களை வழங்கவேண்டியது அவசியமாகும். முக்கியமாக பெற்றோர்கள் பயன்படுத்தும் தொலைபேசிகளை அவர்களின் குழந்தைகளிடம் வழங்குவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இனந்தெரியாதவர்களின் குறுஞ்செய்திகளுக்கு பதிலளித்தல், இனந்தெரியாதவர்களுடனும் தொடர்பு கொள்வதைத் தவிர்த்துக்கொள்வது அவசியம் என்பதை குழந்தைகளுக்கு வலியுறுத்தவேண்டும். அவ்வாறான இணையத்தள அச்சுறுத்தல் எதுவும் ஏற்படுமாக இருந்தால் அதுதொடர்பில் உடனடியான தொலைதொடர்புகள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

1995 ஆம் ஆண்டு குற்றவியல் கோவையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்துக்கமைய, பாலியல் நடவடிக்கைகளுக்காக இலங்கைக்குள்ளோ அல்லது வெளிநாடுகளுக்கோ பெண்கள் அல்லது சிறுவர்களை யாராவது வழங்குவார்களாயின் அது பாரதூரமான குற்றமாகும்.

அதேபோன்று, 1996ஆம் ஆண்டு குற்றவியல் சட்டத்தில் புதிய திருத்தமொன்று கொண்டுவரப்பட்டது. அந்த திருத்தத்துக்கமைய, நபரொருவரை விற்பனை செய்தல் அல்லது ஆட்கடத்தலும் தண்டனைக்குரிய சட்டமாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, கல்கிஸையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் இவ்விரு சட்டத்திருத்தங்களும் கடுமையாக மீறப்பட்டுள்ளன.

“பொதுவான பிரச்சினையாக இதனை நோக்கும்போது இது சிறுவர்களுக்கு எதிராக பாரிய அநீதியை ஏற்படுத்தும் செயற்பாடாகும். 15 வயது சிறுமிக்கு நடந்த சொல்லமுடியாத கொடுமையாகவும், துயரமான சம்பவமாகவுமே இதனை நாங்கள் நோக்குகிறோம் என தேவை நாடும் மகளிர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சந்ரா தியாகராஜா குற்றஞ்சாட்டுகிறார்.

இந்த விவகாரம் தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் பேராசிரியர் முதித விதானபத்திரனவிடம் வினவியபோது....



**இணையத்தளத்தினூடாக 15 வயது சிறுமியை துஷ்பிரயோகம் செய்த விவகாரத்தில் தற்போது எவ்வாறான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன?**

சிறுமியுடன் சம்பந்தப்பட்ட விளம்பரத்தை வெளியிட்ட 5 இணையத்தளங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவரின் பாதுகாவலர்களாக சிறுமியின் பெற்றோர்களும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான விளம்பரமொன்றை வெளியிடுவது குற்றச்செயலாகும். அதேபோன்று, குற்றவியல் சட்டக்கோவையின் 360/A பிரிவுக்கமைய சிறுமியை இந்த செயற்பாட்டுக்கு உட்படுத்திய தரகர்களுக்கு 10 வருட சிறைத்தண்டனை வழங்கக்கூடும். மேலும், பணத்துக்காக சிறுமியை விற்பனை செய்தவர்களுக்கு 20 வருட சிறைத்தண்டனை வழங்க முடியும்.

சிறுமி 16 வயதுக்கு குறைந்தவர் என்பதால் துஷ்பிரயோப்படுத்தியவர்களை 363 பிரிவின்படி அவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்கப்படலாம். மேலும், இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களோ அல்லது வேறு ஏதாவதொரு வகையில் கையடக்க தொலைபேசியிலோ அல்லது வேறெதாவது ஆவணத்தில் சிறுமியின் புகைப்படத்தை வைத்திருப்பார்களாயின் அவர்களுக்கும் 2 இலிருந்து 10 வருடங்களுக்கு சிறைதண்டனை வழங்கமுடியும்.

**சிறுமி தொடர்பில் எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?**

பாதிக்கப்பட்ட சிறுமி தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றார். சிகிச்சைகளின் பின்னர் அவரை சமூக மனநிலை பரிசோதனை, பாலியல் தொற்று தொடர்பான பரிசோதனைகள், அவர் கர்ப்பம் தரித்துள்ளாரா என்பது தொடர்பிலான ஆய்வுகளை முன்னெடுக்கவும் எதிர்பார்த்துள்ளோம். சிறுவர் மருத்துவ நிபுணரிடம் பரிசோதனைக்குட்படுத்தவுள்ளோம்.

அவரை ஐஸ் போதைப்பொருள் பாவனைக்கு உட்படுத்தியுள்ளதால், அதுதொடர்பிலும் முக்கிய கவனம் செலுத்த வேண்டியுள்ளது.


**சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு இவ்வாறான சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் இதவரையில் எத்தனை முறைப்பாடுகள் கிடைத்துள்ளன?**

இவ்வருடத்தில், ஜனவரி முதல் ஜூன் இறுதிவரை 5 ஆயிரத்து 423 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. கடந்த வருடத்தில் 8 ஆயிரத்து 165 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் அதிகளவில், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலிருந்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அதேபோன்று கடந்த மார்ச் மாதத்திலிருந்து இவ்வாறான சகல முறைப்பாடுகளையும் ஏற்றுக்கொள்ள சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

சிறுவர்களின் பாதுகாப்பு தொடர்பில் பெற்றோரும் அவதானத்துடன் செயற்பட வேண்டியது அவசியம். அதேபோன்று அவர்களுக்கு சமூகம் சார் புரிந்துணர்வு ஏற்படும் வரை அவர்கள் பெற்றோரின் கண்காணிப்பிலிருக்க வேண்டும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த சிறுமியின் விவகாரத்தில் கைதாகிய 34 பேரில் நால்வர் தற்போது வரையில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சிறுமியின் தொலைபேசியை வைத்தே இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இதில் மேலும் பலர் தொடர்புபட்டிருக்கலாம் எனவும் பொலிஸ் ஊடகபேச்சாளர் அறிவித்துள்ளார்.

## நாடளாவிய ரீதியில் பொலிஸ் முறைப்பாடுகள்




Graphic: Anusha Subaskumar

மூலம்: இலங்கை பொலிஸ் திணைக்களம்

# 37ஆவது ஆண்டில் தடம் பதிக்கும் இராணுவ சேவை வனிதையர்கள்



ஓர் ஆண் என்றவகையில் நமது வாழ்வை எட்டுக் கட்டங்களாக பிரித்துப் பார்க்கலாம். அந்த எட்டு கட்டங்களில் நாம் எடுத்துவைக்கும் எட்டுகள் அனைத்தும் சாத்தியமாகும்போது வெற்றி இலக்குகளை அடைந்திருப்போம். அந்த எட்டு எட்டுகளிலும் சாதிக்க நம்மோடு ஒரு சக்தி துணை நிற்கிறது என நம்புகிறோம்.

இதே எட்டுக் கட்டங்களை பெண்கள் கடக்கையில் தாய், சகோதரி, மனைவி, குழந்தை என்று பல பரிணாமங்களை கொள்கிறாள். அந்தவகையில் மேற்கூறிய அத்தனை எட்டுகளையும் சாத்தியமாக்கிக் கொள்வதற்கு ஆணுக்கு ஒரு சக்தி அவசியப்படுகிறது. அந்த சக்தியாகவும் துணையாகவும் ஒரு பெண் இருப்பாள்.

பெண்கள் தற்கால சூழலுக்குள் ஒடுக்கப்பட்டு கிடப்பதற்கு ஆணாதிக்கம், உடல் வலிமை பாலியல் பல காரணங்கள் இருந்தாலும் அத்தனை தடைகளையும் தகர்த்தெறிந்துவிட்டு சமூகத்தின் முன்னோடியாக திகழ்வதற்கான வலிமையும் உண்டு என்பதற்கு முன்னுதாரணமாக பல பெண்கள் உள்ளனர்.

இவ்வாறாக சமூகத்திற்குள் காணப்படும் தடைக்கற்களுக்கு மத்தியில் முட்டி மோதிக்கொண்டு வலிமையும் ஆளுமையும்கொண்ட பெண்களை ஒன்றுதிரட்டி அவர்களை ஒரு குடையின்கீழ் நிறுத்தி இந்நாட்டின் மேம்பாட்டிற்கு சக சக்தியாக திகழும் அமைப்புதான் இலங்கை இராணுவ சேவை வனிதையர் அமைப்பு.

இந்த அமைப்பானது இராணுவ வரையறைக்குள் மாத்திரம் மட்டுப்பட்டு கிடக்காமல் அதற்கும் அப்பாலான பல சமூக பணிகளை ஆற்றிவருகிறது. மங்கையரின் ஆளுமைகளை நெறிப்படுத்தி அவர்களை சேவை வனிதையர்களாக மாற்றியமைத்த சேவை வனிதையர் அமைப்பு இவ்வருடம் ஜூலை மாதம் 12ஆம் திகதி தனது 37வது அகவைக்குள் தடம்பதிக்கிறது.



இத்தனை ஆண்டுகளாக இருந்த அமைப்பு சமூகத்துக்குள் ஆற்றிய சேவைகள் எண்ணிலடங்காதவையாக இருந்தபோதிலும் அவற்றில் சிலவற்றை இங்கு கூறலாம்.

நாட்டில் இடம்பெற்ற 3 தசாப்தகால யுத்தத்தில் போரிட்ட இராணுவ வீரர்களின் உந்துசக்தியாக துணை நின்ற இவர்கள், இராணுவ வீரர்கள் பலர் யுத்தத்தில் தங்கள் கால் கைகளை இழந்துவிட்டு வந்தபோதும் கணவர்மார்களுக்கு தங்களுடைய அன்பான அரவணைப்பால் புதிய உலகத்தில் வாழ வழிகாட்டினர்.

அதேபோல் போரில் உயிர்நீத்த வீரர்களின் மனைவியர்கள் நாட்டுக்காக தங்களது துணையை தியாகம்செய்த அக மகிழ்ச்சிக்குள் தங்களது சோகங்களை மறைத்துக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். மறு திசையில் போரில் உயிர்நீத்த மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் பிள்ளைகளை பராமரிக்கும் பணிகளையும் தாங்களே முன்நின்று செய்கிறார்கள்



இத்தகைய வனிதையர்களுக்கு அவசியான சேவைகளை வழங்கும் அமைப்பாகவே இராணுவ சேவை வனிதையர் அமைப்பு இருந்துவருகிறது.

பிள்ளைகள் பராமரிப்பிற்கும் அவர்களின் எதிர்காலத்தை சிறக்கச் செய்வதற்கான வழிகாட்டிகளாக நாடளாவிய ரீதியில் சேவை வனிதையர் அமைப்பின் பல பாலர் பாடசாலைகளும் இயங்கி வருவதுடன், அதனூடாக பல நூறு பெண்களுக்கு தொழில்வாய்ப்பையும் வழங்கியுள்ளனர். அதேபோல் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்காக இதுவரையில் சுமார் 20 மில்லியன் ரூபா வரையிலான அன்பளிப்புகளை வழங்கியுள்ளது.

புகலிடமற்ற போர் வீரர்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக்கொடுக்கும் இவ்வமைப்பானது அனுராதபுரம், மாத்தறை, பலகொல்ல ஆகிய பகுதிகளில் போர்வீரர்களை பாதுகாத்து பராமரிப்பதற்கான அபிமன்சல நிவாரண நிலையங்களையும் நடத்தி வருகிறது. மேலும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கு உடல் அவயங்கள் மற்றும் பராமரிப்பிற்காக சக்கர நாற்காலிகளை வழங்கும் இந்த அமைப்பு அவர்களின் மனவலிமைக்காக ஆன்மீக நிகழ்வுகளையும் ஏற்பாடுசெய்கின்றது. இவ்வமைப்பு இவ்வாறானவர்களின் நலனுக்காக அண்மைக்காலத்தில் சுமார் 1,450 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது.

மேலும், அங்கவீனமுற்ற வீரர்களின் பிள்ளைகளுக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான டெப் கணினிகளை வழங்கிவைத்துள்ளதுடன், பிள்ளைகளின் நலனுக்காக 65 மில்லியன் ரூபா செலவிட்டுள்ளது. இன்றைய கொவிட் இடர்காலங்களிலும் தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்பதற்காக அதிலும் தம்மை இணைத்துக்கொண்டமை போற்றக்கூடியதுவே.

கடந்த 36 வருடங்களாக மேற்கூறியதுபோன்று சேவை வனிதையர் அமைப்பு தனது அடுத்த அகவையை பெரும் சவாலுக்கு மத்தியில் கடக்கப்போகிறது. இருப்பினும், இலங்கை சேவை வனிதையர் அமைப்பின் ஆலோசகரான இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வாவின் வழிகாட்டலுடனும் இலங்கை இராணுவ சேவை வனிதையர் அமைப்பின் தலைவியுமான திருமதி சுஜீவா நெல்சன் நெறிப்படுத்தில் கீழும் ஆளுமைமிக்கவர்களின் கூட்டாகத் திகழும் இந்த அமைப்பு எத்தகைய சவால்களையும் எதிர்கொண்டு முன்னோக்கி நகரும் என்பதில் சந்தேகமில்லை.

★★★★★

# முஸ்லிம் விவாக - விவாகரத்துச் சட்டத் திருத்தம்

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத்தை அர்த்தமுள்ள வகையில் திருத்துவதற்கான அமைச்சரவையின் முற்போக்கான தீர்மானத்தை வரவேற்கிறோம்

முஸ்லிம் சட்டத் திருத்தங்களுக்கான ஆலோசனைக்குழு, முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தம் (MMDA) தொடர்பான தனது அறிக்கையினை 21 ஜூன் 2021இல் நீதி அமைச்சர் எம்.யு.எம். அலி சப்ரியிடம் கையளித்துள்ள செய்தியினை நாம் வரவேற்கிறோம். திருத்தத்திற்கான காலஎல்லையும், வெளிப்படைத்தன்மையும் இக்காலகட்டத்தில் மிகவும் முக்கியமானவை என்பதுடன், ஏற்கனவே நாம் அவதானிக்கின்றதன்படி திருத்தச் செயற்பாட்டைப் பாழ்படுத்தக்கூடிய அனைத்து செயற்பாடுகளிலிருந்தும் பாதுகாத்து திருத்தத்தினை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதேவேளை, திருத்தங்களுக்கான பரிந்துரைகளைக்கொண்ட அறிக்கையினை தாமதமின்றிப் பகிரங்கப்படுத்துவதன் ஊடாக, பெரிதும் பாதிப்புக்குள்ளாக்கப்பட்ட பெண்களுக்கு வரவிருக்கும் திருத்தம் தொடர்பாக நம்பிக்கை அளிக்கும்படி நீதியமைச்சரைக் கோருகிறோம்.

MMDA தொடர்பாக முக்கிய சட்டப் பிரிவுகள் தொடர்பான அமைச்சரவையின் தீர்மானங்களை நாங்கள் வழிமொழிகிறோம்:

1) எந்தவொரு விதிவிலக்குமின்றி திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லையை 18 ஆக உயர்த்துதல்

2) ஒரு திருமணத்தை வலிதாக்க மணமகளது சம்மதத்தினையும், கையொப்பத்தினையும் தேவைப்படுத்தல்

3) பெண் காதிநீதிபதிகளை அனுமதித்தல் மற்றும்

4) பலதார மணத்தினை ஒழித்தல்.

திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லை, மணமகளின் சம்மதம் மற்றும் பெண் காதிநீதிபதிகள் என்பன 2019ஆம் ஆண்டு பெரும்பான்மையான முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களாலும் ஏற்று அங்கீகரிக்கப்பட்டவை என்பதனை அமைச்சரவையின் இத்தீர்மானங்களை எதிர்ப்பவர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக, இத்திருத்தங்கள் பல குழுக்களால், பல சந்திப்புகளில், பல அரசாங்கங்களுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றன. 'எல்லாத் திருத்தங்களுக்கும் இணங்குதல்' என்பது ஒருபோதும் இருந்ததில்லை, இருக்கப்போவதுமில்லை. இவ்விடயம், திருத்தத்தினை இழுத்தடிப்பதற்காக பயன்படுத்தப்பட்டதென்பதுடன் தொடர்ச்சியாக முஸ்லிம் பெண்களையும், சிறுமிகளையும் இடருக்குள்ளாக்கி வந்துள்ளது. காலம் முழுவதும், இத்தகைய பாரபட்சமான சட்டப்பிரிவுகளால் பாதிப்புக்குள்ளாக்கப்பட்டுவந்த முஸ்லிம் பெண்களை திட்டமிட்ட வகையில் ஆண்கள் தலைமையில் நடத்தப்பட்டுவந்த MMDA உரையாடல்களில் விலத்தியே வைத்திருந்தனர்.

ACJU போன்ற குழுக்கள் முஸ்லிம் பெண்களை ஒருபோதும் உள்ளடக்கவில்லை என்பதுடன், முஸ்லிம் பெண்களதும், சிறுமிகளதும் அன்றாட வாழ்வியல் பிரச்சினைகளைப் பற்றி கருத்திற்கொள்ளவுமில்லை.

திருத்தம் தொடர்பான உரையாடல்களில் அரச பொறுப்புடைமை என்பது மிக முக்கியமானதொரு விடயம். இத்திருத்தங்கள் மிக நீண்டகாலமாக முஸ்லிம் பெண்கள் கோரிவருகின்ற இச்சட்டத் திருத்தத்தின் பகுதி என்பதுடன், இவை முஸ்லிம் பெண்களது வாழ்வியல் அனுபவங்களதும், சிரமங்களினதும் நேரடித் தொடர்புடையனவாகும். இத்திருத்தங்கள் கலந்தாலோசிக்கப்பட்ட அரச பொறுப்புடைமையைக் காட்டி நிற்கின்றன. இந்நான்கு திருத்தங்களையும் நாம் முழுமனதுடன் வரவேற்கிறோம். அத்துடன், இத்தீர்மானங்கள் பெண்கள் பாரபட்சத்துக்குள்ளாக்கப்படவோ அல்லது விலத்தி வைக்கப்படவோ இல்லை என்பதனை உறுதிப்படுத்தும்.

காதிநீதிமன்ற முறைமை தொடர்பான அமைச்சரவையின் தீர்மானம் தொடர்பாக காதிநீதிமன்றத்துடனான முஸ்லிம் பெண்களது வாழ்வியல் அனுபவங்கள் தீவிரமான பல பிரச்சினைகளை வெளிப்படுத்தியுள்ளன. இதில் பெண்கள் நியாயமான நடத்துகை கூட இன்றி பல வழிகளில் பாரபட்சத்துக்கு உள்ளாக்கப்படுகின்றமையும் அடங்குகிறது. முஸ்லிம் பெண்கள் நீதிக்கான சமத்துவமான, நியாயமான அணுகுதலைக் கொண்டிருத்தல் வேண்டும் என தொடர்ச்சியாக நாம் கோரி வருகின்றோம். இந்தளவில், பதிலீடு என்ன என்பது பற்றிய எதுவிதமான போதியளவு தகவல்களுமின்றி காதிநீதிமன்ற முறைமையினை இல்லாமல் ஆக்குவதற்கான அமைச்சரவையின் தீர்மானம் பற்றி நாம் கரிசனை கொண்டுள்ளோம்.

MMDA எவ்வாறு நிர்வகிக்கப்படும் என்பது தொடர்பான தெளிவுபடுத்தல் உடனடியாக நீதியமைச்சினால் வழங்கப்பட வேண்டும் என நாம் வேண்டுகிறோம். தற்போது நடைமுறையிலுள்ள மாவட்ட நீதிமன்ற முறைமையானது ஏற்கனவே அணுகுதல், தாமதம், குடும்ப நேயமற்ற முறைமை என பல சவால்களைக்கொண்டிருக்கிறது. காதிநீதிமன்ற முறைமையைபோன்று, அதுவும் விசாலமான திருத்தத்தினை வேண்டி நிற்கின்றதை நாம் புரிந்துவைத்திருக்கிறோம்.

MMDA இனை நிர்வகிக்கும் எந்தவொரு நீதிமுறைமையாயினும் அது பொதுவாக தற்போது இலங்கை பெண்கள் மற்றும் குடும்பங்களால் அணுகப்படுகின்ற நீதிமுறைமையினை விடவும் சிறந்ததாக இருத்தல் வேண்டும் எனும் நிலைப்பாட்டை நாம் உறுதியாகவும், மனப்பூர்வமாகவும் கொண்டிருக்கிறோம். அதாவது நீதிமுறைமையானது தெளிவான, சமத்துவமான, விரோத மனப்பான்மையுடனான நடைமுறைகள் அற்ற, நேரகாலத்தைப் பொறுத்தளவில் வினைத்திறனுடைய, இலகுவான அணுகுதலுடைய, முக்கியமாக குறைந்த வருமானமுடையவர்களால் செலவைத் தாங்கக்கூடியதாயுள்ள வகையிலானதாய் இருத்தல் வேண்டும்.

திருத்தம் மிக நீண்டகாலமாக தாமதிக்கப்படுகின்றது. திருத்தம் மேற்கொள்ளப்படுவதற்கான நெறிமுறையான செயன்முறைக்கான காத்திருப்பு என்பது முஸ்லிம் பெண்கள் இடர்களையும், தங்களுக்கு எதிரான முற்கற்பிதங்களையும், பாரபட்சங்களையும் தொடர்ந்தும் தாங்கிக்கொள்ள வேண்டும் என்பதாகும். திருத்தம் செய்யப்படும்வரை நாம், குறுகிய அரசியல் இலாபங்களுக்கும், பழைமைவாத குறுகிய நோக்கங்களுக்கும் எதிராகத் தொடர்ந்தும் போராடுவோம். முழுமையான திருத்தத்திற்கான நேரம் இதுவே!

**முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணி (MWRAF) மற்றும் முஸ்லிம் தனியார் சட்டத் திருத்த செயற்பாட்டுக் குழு (MPLRAG)**

# 16ஆவது யூரோ கிண்ணத்தை முத்தமிடுவது இங்கிலாந்தா இத்தாலியா?



ஏ. அகீல் சிஹாப்

கால்பந்து உலகில் நடைபெறுகின்ற மிக உயர்ந்த தொடரான பிபா உலகக்கிண்ணத் தொடருக்கு அடுத்ததாக கால்பந்து உலகில் மிகப் பிரபலமான தொடராக கருதப்படுகின்ற யூ.ஈ.எவ்.ஏ. ஐரோப்பியன் சம்பியன்ஷிப் எனப்படும் யூரோ கிண்ண கால்பந்து தொடரின் 16ஆவது பருவகால தொடரின் இறுதிப்போட்டியானது, இலங்கை நேரப்படி இன்று நள்ளிரவு 00.30 மணிக்கு இத்தாலி - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இங்கிலாந்தின் லண்டனில் அமைந்து விம்ப்ளி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

### யூரோ கிண்ண வரலாறு

‘யூரோ கிண்ணம்’ என்று அழைக்கப்படும் ஐரோப்பியன் சம்பியன்ஷிப் கால்பந்து தொடரானது கடந்த 1960ஆம் முதல் முறையாக நடத்தப்பட்டது. முதலாவது யூரோ கிண்ணத்தை, அப்போதைய சோவியத்



யூனியன் வென்றது. 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் இந்தத் தொடரில் ஐரோப்பிய கண்டத்தைச் சேர்ந்த பல நாடுகள் பங்கேற்கின்றன.

2020ஆம் ஆண்டுக்கான யூரோ கிண்ண கால்பந்து தொடர்தான் தற்போது நடைபெற்று வருகிறது. கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக கடந்த ஆண்டு தொடரை நடத்த முடியாத நிலை ஏற்பட்டதன் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட தொடரே தற்போது நடைபெற்று வருகிறது. ஐரோப்பா கண்டத்தைச் சேர்ந்த 51 நாடுகள் தகுதிகாண் போட்டிகளில் விளையாடி இறுதியாக 24 நாடுகள், 2020 யூரோ கிண்ணத் தொடரில் பங்கேற்றன.

பொதுவாக ஐரோப்பிய கண்டத்திலுள்ள ஏதேனும் ஒரு நாட்டில் மட்டும்தான் யூரோ கிண்ண கால்பந்து தொடர் நடத்தப்படும். ஆனால், இந்த ஆண்டில் 12 ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த நகரங்களில் இத்தொடர் நடத்தப்படுகிறது.

1950களில் ஐரோப்பிய கால்பந்து சங்கத்தின் செயலாளராக இருந்த ஹென்றி டெலானி, யூரோ கிண்ண கால்பந்து தொடரை நடத்துவதற்கான யோசனையை முதலில் வெளியிட்டார். அதனால் தான் யூரோ கிண்ணத் தொடரில் சம்பியனாகும் அணி களுக்கு வழங்கப்படும் கிண்ணமானது, ‘ஹென்றி டெலானி கிண்ணம்’ என்று அழைக்கப்படுகிறது. 8 கிலோ எடைகொண்ட இந்தக் கிண்ணம் 60 சென்றி மீற்றர் உயரம் கொண்டது.




### சம்பியன்கள்

யூரோ கிண்ண கால்பந்து தொடரில் இதுவரை அதிகபட்சமாக ஜேர்மனி, ஸ்பெயின் ஆகிய நாடுகள் தலா 3 முறை கிண்ணத்தை வென்றுள்ளன. இம்முறை ஜேர்மனி, 16 அணிகள் பங்கேற்ற நொக்அவுட் சுற்றில் இங்கிலாந்திடம் தோல்வியடைந்து வெளியேறியது. அதேவேளை, ஸ்பெயின் அரையிறுதிப் போட்டியில் இத்தாலியிடம் வீழ்ந்து வெளியேறியது. நடப்பு உலக சம்பியனான பிரான்ஸ் அணி, 2 முறை சம்பியனாகியுள்ளது.

### அதிக போட்டிகள்

யூரோ கிண்ணத் தொடரில் அதிக போட்டிகளில் விளையாடிய வீரர் என்ற பெருமையை போர்த்துக்கல் அணியின் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ கொண்டுள்ளார். கடந்த 2016ஆம் ஆண்டிலிருந்து விளையாடிவரும் கிறிஸ்டியானோ ரொனால்டோ இதுவரையில் 25 போட்டிகளில் விளையாடியுள்ளார்.

### அதிக கோல்கள்

யூரோ கிண்ண கால்பந்து தொடரில் அதிக கோல்களை அடித்த வீரராக நட்சத்திர வீரரான கிறிஸ்டியானோ ரொனால்டோ காணப்படுகிறார். அவர் இதுவரையில் 14 கோல்களை அடித்துள்ளார்.

### வெளியேறிய நடப்பு சம்பியன்

இறுதியாக கடந்த 2016ஆம் ஆண்டு நடைபெற்ற 15 ஆவது யூரோ கிண்ண கால்பந்து தொடரில் சம்பியனான கிறிஸ்டியோனோ ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கல் அணி, இரண்டாம் சுற்றான 16 அணிகள் பங்குபற்றிய நொக்அவுட் சுற்றில் பெல்ஜியம் அணியிடம் 0-1 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து வெளியேறியது.

### இறுதிப் போட்டிக்கு இத்தாலியின் வருகை

குழு ‘ஏ’ யில் இடம்பெற்றிருந்த இத்தாலி அணி தான் விளையாடிய மூன்று லீக் போட்டிகளிலும் வெற்றிபெற்று 9 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து அடுத்த சுற்றான 16 அணிகள் பங்கேற்கும் நொக்அவுட் சுற்றுக்கு தகுதிபெற்றது. அடுத்த சுற்றில் ஆஸ்திரியா அணியை 2-1 என்ற அடிப்படையில் வீழ்த்தி காலிறுதிக்கு தகுதிபெற்றது. காலிறுதியில் பெல்ஜியம் அணியை 2-1 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதிபெற்றது.

முதலாவது அரையிறுதிப் போட்டியில் பலமிக்க இரு அணிகளான இத்தாலி - ஸ்பெயின் அணிகள் மோதின. போட்டியின் 90 நிமிடங்கள் நிறைவில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்கள் வீதம் பெற்றதால், மேலதிக 30 நிமிடங்கள் வழங்கப்பட்டது. அதில் இரு அணிகளும் கோலை பெறாத நிலையில், வெற்றியாளரை தீர்மானிப்பதற்காக பெனால்டி சுட் நடத்தப்பட்டது. இதில் இத்தாலி 4-2 என்ற பெனால்டி கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று நான்காவது தடவையாக யூரோ கிண்ண இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது. கடந்த 1968ஆம் ஆண்டு சம்பியனான இத்தாலி, 2000 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் இறுதிப் போட்டிக்கு முன்னேறியிருந்தது. இந்நிலையில், 8 வருடங்களின் பின்னர் மீண்டும் இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

### இறுதிப் போட்டிக்கு இங்கிலாந்தின் வருகை

குழு ‘டி’ யில் இடம்பெற்றிருந்த இங்கிலாந்து அணி தான் விளையாடிய மூன்று லீக் போட்டிகளில் இரண்டில் வெற்றி, ஒரு சமநிலை முடிவுடன் பெற்று 7 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து அடுத்த சுற்றான 16 அணிகள் பங்கேற்கும் நொக்அவுட் சுற்றுக்கு தகுதிபெற்றது. அடுத்த சுற்றில் ஜேர்மனி அணியை 2-0 என்ற அடிப்படையில் வீழ்த்தி காலிறுதிக்கு தகுதிபெற்றது.

காலிறுதியில் உக்ரைன் அணியை எதிர்கொண்ட இங்கிலாந்து 4-0 என்ற கோல்கள் கணக்கில் இலகுவாக வெற்றிபெற்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது.



அரையிறுதியில் டென்மார்க் அணியை 2-1 என்ற கோல்கள் கணக்கில் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

### முதல் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து

யூரோ கிண்ண வரலாற்றில் இங்கிலாந்து அணி முதல் தடவையாக இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றுள்ளது. மேலும் இங்கிலாந்து கால்பந்து அணி 1966ஆம் ஆண்டுக்குப் பின்னர் 55 ஆண்டுகளுக்குப் பிறகு உலகின் முக்கிய கால்பந்து தொடரொன்றின் இறுதிப் போட்டிக்கு முன்னேறி வரலாறு படைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# 47ஆவது கோபா அமெரிக்கா சம்பியனாவது யார்?

## பிரேஸில் - ஆர்ஜென்டினா இன்று பலப்பரீட்சை




ஏ. அகீல் சிஹாப்

47 ஆவது கோபா அமெரிக்க கால்பந்து தொடரின் இறுதிப் போட்டியில் கால்பந்து உலகின் இரு பலமிக்க அணிகளான நடப்பு சம்பியன் பிரேஸில் - ஆர்ஜென்டினா அணிகள் இலங்கை நேரப்படி இன்று காலை 5.30 மணிக்கு பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோவில் அமைந்துள்ள மரக்கானா மைதானத்தில் பலப்பரீட்சை நடத்துகின்றன.

### கோபா அமெரிக்க தொடரின் வரலாறு

தென்னமெரிக்க நாடுகள் பங்குபற்றும் ‘கோபா அமெரிக்கா’ எனப்படுகின்ற கால்பந்து தொடரானது, கால்பந்து போட்டிகளிலேயே மிகவும் பழைமையான போட்டியாக கருதப்படுகிறது. இந்தத் தொடரானது கடந்த 1916ஆம் ஆண்டுமுதல் நடைபெற்று வருகிறது. ஸ்பெயின் நாட்டின் ஆதிக்கத்திலிருந்து ஆர்ஜென்டினா விடுதலை பெற்றதன் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் விதமாக 1916ஆம் ஆண்டு நடத்தப்பட்ட முதலாவது கோபா அமெரிக்கா தொடரில்


முதலாவது கோபா அமெரிக்கா தொடரில் சம்பியனான உருகுவே

உருகுவே அணி சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றியது.

ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளுக்கும், ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கும் அல்லது ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் இந்தத் தொடர் நடைபெறுகிறது. ஆரம்பத்தில் தென்னமெரிக்க கால்பந்து சம்பியன்ஷிப் என்று அழைக்கப்பட்ட இத்தொடர், 1975 முதல் கோபா அமெரிக்கா என அழைக்கப்படுகிறது.

தென்னமெரிக்க நாடுகளுக்கு இடையிலான தொடராக இது இருந்தாலும், சில தொடர்களில் தென்னமெரிக்காவைத் தாண்டியுள்ள சில சிறந்த கால்பந்து அணிகளை தொடரில் பங்கேற்க சிறப்பு அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. அந்தவகையில் அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் தொடரில் விளையாடியுள்ளன.

### பெண்கள் கோபா அமெரிக்கா

ஆண்களுக்கான கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் நடைபெற்று வருவதைபோன்று பெண்களுக்கான ‘கோபா அமெரிக்கா ஃபெமினானா’ கால்பந்து தொடரானது கடந்த 1991ஆம் ஆண்டுமுதல் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான தொடரைப் போலன்றி, கோபா அமெரிக்கா ஃபெமினானா தொடரானது ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கும் ஒரு முறை நடத்தப்படுகிறது.

1991, 1995, 1998, 2003, 2010, 2014 மற்றும் 2018ஆம் ஆண்டுகளில் ஏழு கோபா அமெரிக்கா ஃபெமினானா தொடர்களை பிரேஸில் வென்றுள்ளது. 2006ஆம் ஆண்டு ஆர்ஜென்டினா சம்பியனானது. அடுத்த தொடரானது 2022ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது.

### அதிக முறை சம்பியன்

கோபா அமெரிக்கா கால்பந்து தொடரில் அதிக முறை சம்பியன் பட்டத்தை வென்ற அணி என்ற பெருமை உருகுவே அணிக்கு உள்ளது. அந்த அணி இது வரை 15 தடவைகள் சம்பியன் பட்டம் வென்றுள்ளது. இந்த முறை உருகுவே அணி காலிறுதிப் போட்டியில் கொலம்பியா அணியுடன் பெனால்டி சுட் முறையில் தோல்விகண்டு தொடரிலிருந்து வெளியேறியது. உருகுவே அணிக்கு அடுத்ததாக ஆர்ஜென்டினா 14 தடவைகள் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியுள்ளது.

### இறுதிப் போட்டிக்கு பிரேஸிலின் வருகை

குழு ‘பி’ யில் இடம்பெற்றிருந்த பிரேஸில் அணி தான் விளையாடிய 4 போட்டிகளில் 3 வெற்றி, 1 சமநிலை என மொத்தமாக 10 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. காலிறுதிப் போட்டியில் சிலி அணியை 1-0 என்ற கணக்கில் வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதிபெற்றது. அதன்படி, அரையிறுதிப் போட்டியில் பெரு அணியுடன் மோதிய பிரேஸில் 1-0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது.

### இறுதிப் போட்டிக்கு ஆர்ஜென்டினாவின் வருகை

குழு ‘ஏ’ யில் இடம்பெற்றிருந்த ஆர்ஜென்டினா, பிரேஸில் அணியை போன்று தான் விளையாடிய 4 போட்டிகளில் 3 வெற்றி, 1 சமநிலை என மொத்தமாக 10 புள்ளிகளுடன் முதலிடத்தைப் பிடித்து காலிறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றது. காலிறுதிப் போட்டியில் ஈகுவாட்டர் அணியை 3-0 என இலகுவாக வீழ்த்தி அரையிறுதிக்கு தகுதிபெற்றது. அரையிறுதியில் கொலம்பியா அணியை எதிர்கொண்ட ஆர்ஜென்டினா பெனால்டி சுட் முறையில் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்றது.

### எதிர்பார்ப்பு

பிரேஸில் அணி 9 தடவைகள் கோபா அமெரிக்க சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியதுடன், நடப்புச் சம்பியனாகவும் திகழ்கிறது. 14 தடவைகள் சம்பியன் பட்டத்தை கைப்பற்றிய ஆர்ஜென்டினா, 2016ஆம் ஆண்டின் பின்னர் இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. எனவே, இந்த இரு அணிகளும் மிகப் பலம்பொருந்திய அணிகளாக காணப்படும் நிலையில், எந்த அணி கிண்ணத்தை முத்தமிடும் என்பது தொடர்பான எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கிறது.

இலக்கிய சங்கமம்

sangamamjeeva@gmail.com ஜீவா சதாசிவம்



# இலக்கியம் – மனித வாழ்க்கையையும் வரலாற்றையும் முழுமையாக பிரதிபலிக்கக்கூடியது

**எழுத்தாளர் ஜிஃப்ரி ஹஸன் உடனான நேர்காணல்**

எழுத்தாளர் ஜிஃப்ரி ஹஸன் கிழக்கிலங்கையின் வாழைச்சேனை பிரதேசத்தைச் சேர்ந்தவர். இலக்கியத்தின் மீதுள்ள அதீத ஈடுபாடு காரணமாக சிறுகதை, இலக்கிய விமர்சனங்கள், ஆய்வுகள், மொழிபெயர்ப்புகள், கவிதைகள் என பன்முகப்பட்ட தளங்களில் தன்னை நிலைநிறுத்தி வருகிறார். தற்போது அரச பாடசாலையொன்றில் ஆசிரியராக கடமையாற்றி வருகின்ற இவர், இதுவரை 05 நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது இலக்கியப் பயணம் குறித்து 'தமிழன்' இலக்கிய சங்கமம் பகுதிக்காக உரையாடியபோது அவர் எம்மடன் பகிர்ந்துகொண்டவை எமது வாசகர்களுக்காக..

**இலக்கிய உலகிற்குள் உங்களது பிரவேசம் பற்றி எம்முடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

என்னுடைய கிராமம் போரினால் முற்றிலும் சிதைந்ததொரு கிராமம். அங்கு என்னுடைய சாச்சா ஒருவர் தனது பணி நிமித்தம் அடிக்கடி கொழும்புக்குச் சென்று வருவார். அவர் மட்டும்தான் எனது கிராமத்தில் அப்போது சாதாரண தரம் வரை கற்றவர். அவர் பயணங்களின்போது வாசிப்பதற்காக கண்ணதாசன், வைரமுத்து, மேத்தா, அப்துல் ரகுமான் போன்ற கவிஞர்களின் கவிதை, கதை புத்தகங்களையும், மாயாவி தோன்றும் ராணி கொமிக்ஸ் புத்தகங்களையும் வாங்கி வருவார். அவற்றை நான் எடுத்து வாசிப்பேன். நான் அப்போது ஏழு, எட்டாம் தரம் படித்துக் கொண்டிருந்திருப்பேன். அங்கிருந்து தொடங்கிய வாசிப்புத்தான். பத்தாம் வகுப்பு படிக்கும்போது ஓட்டமாவடி அறபாத்தின் கதைகளுக்கு தீவிர வாசகனானேன். பின்னர் வாழைச்சேனை பொது நூலகத்தில் இணைந்து அங்கு கிடைத்த கல்கி, மு.வ, அகிலன், ஜெயகாந்தன், செ.யோ, எஸ்.பொ, மு.த.. போன்ற எழுத்தாளர்களின் படைப்புகளை தீவிரமாக வாசித்தேன்.

போர்ச்சூழலின் தாக்கமும், வாசிப்பும் என்னை சூழலைப் பிரதிபலித்து எழுதத் தூண்டின. என் பதினைந்தாவது வயதிலேயே பல இதழ்களுக்கு பங்களிப்பு செய்தேன். ஆரம்பத்திலிருந்தே கவிதைகள், கதைகள், விமர்சனங்கள் என என்னை விரிவாக்கிக் கொண்டே வந்தேன்.

**உங்களுடைய சிறு கதைகளை வெறுமனே கற்பனை என்ற ஒற்றைச் சொல்லோடு கடந்துசெல்ல முடியவில்லை. அவை உங்களுடைய சொந்த வாழ்க்கையின் மெய்யான அனுபவங்கள் என்று கொள்ளலாமா?**

மனித நாகரிகத்தின் ஒரு பரிமாணமாகவே இலக்கியத்தைப் பார்க்கிறேன். அது மனித வாழ்க்கையை, வரலாற்றை முழுமையாகப் பிரதிபலிக்கக்கூடிய தன்மையைக் கொண்டிருக்கிறது. எனவே, ஒரு படைப்பாளி தான் வாழ்ந்துகொண்டிருக்கும் சமூகத்தில் கிடைத்த அனுபவங்களிலிருந்தும், அவனது சொந்த வாழ்க்கையிலிருந்தும் தனது கற்பனையிலிருந்துமே தனது படைப்புலகை உருவாக்கிக்கொள்கிறான். தனித்து மேலெழுந்து அவன் தன் சமூகத்தை உற்றுநோக்கி மனச்சாட்சியோடு பதிவுசெய்கிறான். இந்தப் புரிதலிலிருந்துதான் நான் எழுதிக் கொண்டிருக்கிறேன். எனது வாழ்க்கையின் பல்வேறு பரிமாணங்கள், அனுபவங்கள், மனித வாழ்வு குறித்த என் அனுமானங்கள், தன்னுணர்வுகள் என்பன எனது கதைகளில் செல்வாக்குச் செலுத்துவது உண்மை. ஆனால், அவை அனைத்தும் இந்தச் சமூகம் எனக்கு கையளித்தவைதான். அதை நான் ஒரு கலை வடிவமாக்கி மீண்டும் சமூகத்துக்கே கையளிக்கிறேன்.

**நீங்கள் மொழிபெயர்ப்புகளும் செய்து வருகிறீர்கள். இவை மொழிபெயர்க்கப்படவேண்டிய படைப்புகள் என்பதை எப்படி நிர்ணயம் செய்கிறீர்கள்?**

மொழிப்பெயர்ப்பு ஈடுபாடு என்பது எனது தனிப்பட்ட விருப்புக்குரியதாக இருந்ததில்லை. எனது மொழிபெயர்ப்புகளில் பெரும்பாலானவை இதழாசிரியர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க செய்யப்பட்டவைதான். ஆனாலும், அவற்றின் மீது எனக்கும் ஒரு பிடிப்பு இருக்கவேண்டும். இல்லாவிட்டால் செய்ய முடியாது என்று மறுத்து விடுவேன். காலாவதியான கோட்பாடுகள், மனிதகுலத்துக்கு ஒவ்வாத கருத்தியல்புகள், சரியான உள்ளீடற்ற படைப்புகள், குறைந்தபட்சம் வாசிப்பு இன்பத்தையேனும் தராத படைப்புகளை நான் மொழிபெயர்ப்பதில்லை. அதனால் நான் மொழிபெயர்த்தவை சொற்பமானவையே.

**உங்களுடைய மொழிபெயர்ப்புக் கவிதைத் தொகுப்பான மூன்றாம் பாலினத்தின் நடனத் தொகுதி வித்தியாசமான அனுபவத்தைத் தருகிறது. இதுபற்றிச் சொல்லுங்கள்.**

அதிலுள்ள கவிதைகள் எல்லாவிதத்திலும் மனித வாழ்வைப் பற்றிப் பேசுபவை. பல்வேறு நாடுகளிலும் விளிம்பு வாழ்க்கையின் நெருக்கடிகளைச் சந்தித்த மனிதர்களின் உணர்வுகளைப் பேசும் கவிதைகள் அவை. அவை எனது தனிப்பட்ட தெரிவுகள்தான். போரினால் பாதிக்கப்பட்டவன் என்றவகையில் - அது தந்த ஒடுக்குமுறையான வாழ்க்கையை அனுபவித்தவன் என்றவகையில் அப்படியான மக்களின் குரல் மீது எப்போதும் எனக்கு ஈடுபாடு இருக்கிறது. அந்த ஈடுபாடுதான் அந்தத் தொகுப்பிலுள்ள கவிதைகளைத் தெரிவுசெய்தது.

**பின்நவீனம் என்ற போர்வையில் நான்கு சுவருக்குள் நடக்கின்ற விடயங்களை நாகரீகமற்ற வார்த்தைகளால் கோர்த்து எழுதுகிறார்களே, இப்படியான எழுத்துகளை நீங்கள் எப்படிப் பார்க்கிறீர்கள்?**

நீங்கள் கேட்பது இலக்கியத்தின் வடிவம் சார்ந்த பிரச்சினையல்ல. உள்ளடக்கம் சார்ந்தது. இலக்கியத்தின் உருவம், உள்ளடக்கம் சார்ந்த நவீனத்துவத்தின் எல்லைகளை பின் நவீன இலக்கியம் மீறுவது உண்மைதான். ஆனால், எந்த வகைப் படைப்பானாலும் அது கவனப்படுத்த விரும்பும் விடயம் சார்ந்து அல்லது அதனை வெளிப்படுத்தும் அழகியல் சார்ந்து முக்கியத்துவம் பெறவேண்டும் என்பதே எனது நிலைப்பாடு.

**நேர்கண்டவர்- நஸார் இஜாஸ்**

# சமூகத்தை கற்றுக்கொண்ட ஆளுமைகொண்ட ஒரு மாமேதை

நெடுவாழ்வின் எழுதித்தீரா நினைவு டொமினிக் ஜீவா எனும் நூல் வெளியீடு உரையாடலும் கடந்த ஞாயிற்றுக்கிழமை (04.06.2021) மெய்நிகர் வழியாக பிரான்சிலிருந்து வெளியிடப்பட்டு அதற்கான அறிமுக நிகழ்வும் நடைபெற்றது.

தேவதாசனின் தலைமையுரையுடன் ஆரம்பித்த இந்நிகழ்வில், பிரான்ஸில் செயற்பட்டுவரும் இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் கடந்தகால செயற்பாடுகள், அதனைத்தொடர்ந்து தற்போதைய டொமினிக் ஜீவாவின் நினைவாக நாம் வெளியிட்டு வைக்கும் புத்தகம் சம்பந்தமான அனுபவத்தை தனது தலைமையுரையில் கூறினார்.

**எழுத்தாளர் விஜி- பிரான்ஸ்**

இந்நூலின் உருவாக்கத்திற்கும் அதன் அவசியத்திற்குமான உந்துதல் எமக்கு எவ்வாறு அமைந்தது என்பதையும், அதற்கான செயற்பாட்டு அனுபவங்களையும் இந்தப் புத்தகம் வெளிவருவதற்காக பெரும் பங்காற்றியவரும், தற்போதைய நெருக்கடியான சூழலிலும் இப்புத்தகத்தின் கையளிப்பு நிகழ்வை இலங்கையில் ஏற்பாடுசெய்த பாக்கியா பதிப்பக நிறுவனர் மல்லியப்புசந்தி திலகருக்கு நன்றி.

பிரான்ஸில் நடைபெற்ற புத்தக கையளிப்பு நிகழ்வை காணொளியாக நெறிப்படுத்தியதில் உதவியாக இருந்த அவரது மகன் நெவின் ஆற்றிய பங்களிப்பிற்கும், இந்த புத்தகத்தின் வடிவமைப்பை செய்து உதவிய சுரேஸுக்கும் நன்றி.



தெளிவத்தை ஜோசப், டொமினிக் ஜீவாவின் மகன் திலீபன், மேமன் கவி, கமல் பெரேரா போன்றவர்கள் இப்புத்தகத்தின் கையேற்கும் ஆளுமைகளாக கௌரவிக்கப்பட்டதையும் அறிமுகப்படுத்தினார். உரையாற்றியவர்களுக்கும் நன்றி தெரிவித்தார்.

ஒரு காணொளிக்காட்சியாக ஏற்கனவே தயார்செய்து இன்றைய புத்தக வெளியீட்டு நிகழ்வில் காட்சிப்படுத்தப்பட்டது. அதேபோன்று பரிஸில் அரவிந்த் அப்பாத்துரையை கௌரவித்து புத்தகம் கையளிக்கப்பட்டது. அந்தக் கையளிப்பு நிகழ்வும் காட்சிப்படுத்தப்பட்டது.



**தெளிவத்தை ஜோஸப்**

யாழ்ப்பாணிய மைய வாத சிந்தனையின் ஆதிக்கம் மலையகத்தில் வாத்திமார் உருவத்தில் எவ்வாறு தேயிலைச் செடிகளோடு படர்ந்திருந்தது என்பதை தெளிவத்தையின் உரையில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

யாழ்ப்பாணத்தில் ஒடுக்கப்பட்டுவந்த சமூகத்திற்கும் ஒரு ஒடுக்குமுறை உருவமாக வாத்திமாரின் ஆதிக்கம் இருந்தது என்பதாக டொமினிக் ஜீவா அப்போது கூறியதை தெளிவத்தை ஜோசப் நினைவுபடுத்துகிறார்.

**எழுத்தாளர் கமல் பெரோரா**

இந்தப் புத்தகம் தொடர்பாக தன்னோடு தொடர்புகொண்டு சகோதரர் திலகர் கதைத்ததாகவும், டொமினிக் ஜீவாவின் மறைவையொட்டி தான் வெளியிட்ட ஒரு குறிப்பு இப்புத்தகத்தில் வெளிவருவதை அறிந்ததாகவும் கூறினார். இப்புத்தகத்தை தனக்கு தந்து கௌரவித்ததற்கும் நன்றி தெரிவித்து பேசியிருக்கிறார்.

**மல்லியப்புசந்தி திலகர்**

டொமினிக் ஜீவா குறித்து பேசுவதென்றால் அவரது பல பரிமாணங்களை நாம் அவதானிக்க வேண்டும். அவரது பல்பரிமாணங்களில் இங்கு நான் ஒரு விடயத்தையே குறிப்பிட்டு பேச விரும்புகின்றேன். அது ஜீவாவின் பதிப்பகம் பற்றியது. நானும் பதினைந்து வருடமாக பல்வேறு செயற்பாடுகளுடன் பதிப்பக செயற்பாட்டிலும் ஈடுபட்டு வருகின்றேன். இந்தப் புத்தகம் தற்போதைய கொரோணா நெருக்கடி இருந்தபோதும், தற்போதைய நவீன தொடர்பு வசதி காரணமாக ஓரளவிற்கு இலகுவாக பதிப்பக வேலைகளை செய்ய முடிந்தது. ஆனால், மிக நெருக்கடியான யுத்த காலத்திலும் எவ்வித நவீன உதவிகளுமற்று டொமினிக் ஜீவா மல்லிகை சஞ்சிகையையும், பிற பதிப்பக செயற்பாட்டிலும் எவ்வளவு சிரமத்திற்கு உள்ளாகியிருப்பார் என்பதை நான் உணரும்போது பெரும் அதிர்ச்சிக்கு உள்ளாகிறேன் - என்றார்.

**நுலின் அறிமுகரை – எழுத்தாளர் சிராஜ்**

புத்தகத்தின் அனைத்துக் கட்டுரைகளையும் மிக அவதானமாக அவரது கூர்ந்த வாசிப்பிற்குட்படுத்திய தன்மையை எம்மால் அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அனைத்துக் கட்டுரைகளிலிருந்தும் தனது பார்வைக்கு முக்கியமாக தென்படுகின்ற ஒரு சில அம்சங்களை வாசித்தும், மிக சிறப்பாக அறிமுக உரையை வழங்கினார் .

**சட்டத்தரணி - ரங்கன் தேவராஜ்**

டொமினிக் ஜீவாவை படிக்காத மேதை என சிலர் சொல்வதை தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது. சமூகத்தை சரியாக புரிந்துகொண்டவனும் சமூகத்தை படித்தவனுமே சிறந்ததொரு கல்விமான். இதனை எந்த நிறுவன பாடசாலையும் எமக்குக் கற்றுத்தராது. அந்தவகையில், டொமினிக் ஜீவா சமூகத்தை கற்றுக்கொண்ட மிக ஆளுமைகொண்ட ஒரு மாமேதை. தனக்கும் ஜீவாவிற்குமான நெருங்கிய தொடர்புகளையும், ஜீவர் பதிப்பகத்தில் அச்சுக்கோப்பதிலிருந்து அனைத்து வேலைகளையும் செய்துவந்ததை தான் நேரில் பார்த்து வியந்த சம்பவங்களையும் நினைவுபடுத்தினார்.

**நெடுவாழ்வின் எழுத்தீரா நினைவு**

டொமினிக் ஜீவா எனும் இப்புத்தகம் மிக சிறப்பாக வெளிவந்திருக்கிறது. இதனது மறுபதிப்பும் விரைவில் வெளிவர வேண்டும். இதன் பதிப்பகமான பாக்கியா பதிப்பகத்திற்கும், இதன் வடிவமைப்பிற்கும், புத்தகத்தை சிறப்பாக வெளியீட்டு வைத்த இலங்கை தலித் சமூக மேம்பாட்டு முன்னணிக்கும் நன்றி தெரிவித்தார்.

**கவிஞர் எழத்தாளர் மேமன்கவி**

பேராசிரியர்கள் எனப்படும் சிலர் டொமினிக் ஜீவாவை முறையற்ற வகையில் விமர்சிப்பது கண்டிக்கத்தக்கதென தனது உரையில் பதிவு செய்தார்.

அதனைத் தொடர்ந்து பார்வையாளர்கள் பலர் டொமினிக் ஜீவாவின் முக்கியத்துவம், அவரை நினைவுகொள்வதன் அவசியம் குறித்தும் இவ்வாறான நிகழ்வுகள் மூலம் ஜீவாவை தொடர்ச்சியாக நினைவுகூரவேண்டும் என்று தமது கருத்துகளை பகிர்ந்துகொண்டதுடன் நிகழ்வுகள் காத்திரமாக நிறைவுபெற்றன.

**தொகுப்பு - ராம்ஜீவா**

# இடர்கால இலக்கியங்கள்

21

காலை வணக்கம் நண்பர்களே!

நேற்றைய வரலாற்றைக் கண்டு இன்றைய காலத்து வாழ்க்கையை நிமிர்த்திக்கொள்ள புத்தகங்கள் உதவும் என்பதை அறியத்தரும் முதல்புள்ளி நமது வளர்ப்பிலும் வார்த்தையிலுமே உள்ளது. மற்றும் வாசித்துப் பழகு எழுத்தை வாசித்துப் பழகு, கதைகளையும் கவிதைகளையும் வாசித்துப் பழகு, கடிதங்கள் கட்டுரைகள் போன்றவற்றை வாசித்துப்பழகு, அனைத்து இலக்கியப் படைப்புகளையும் வாசித்துப் பழகு, காண்பவைகளைக் கூட வாசித்தல் வேண்டும்.

காலம் முழுக்க வாசித்தல் வேண்டும். வாசித்தல் என்றும் தெளிவைத் தரும். நம் வாழ்க்கையில் என்றும் உயர்வைத் தரும். பையில் பல நூறு பணம் இருந்தாலும், அதில் புத்தகம் இருந்தால் மதிப்பை தரும். சுற்றத்தில் உனக்கு மதிப்பைத் தரும். வாழ்க்கையில் உனக்குச் சிறப்பை தரும்...... என்ற பதிவுகளைத் தமது முகநூலிலே பதிவிட்டு வாசிப்பின் உன்னதத்தை விளக்கி இருக்கிறார்கள் வைகறை நூலகச் செயற்பாட்டாளர்கள். புத்தக வாசிப்புத் தொடர்பான அவர்களது முயற்சிகள் ஆக்கபூர்வமானவையாகத் தோன்றுகிறது.



வைகறை நூலக வாசகர் வட்டத்தினுடாக மாதமொருமுறை "ஒரு நூலை பற்றி பேசுவோம்" எனும் தொனிப்பொருளில் நடைபெறும் நிகழ்வில் இம்மாதம் நீலவண்ணனின் 'மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது' எனும் நூல் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த 30.06.2021 அன்று மாலை 7 மணியளவில் நடைபெற்றது.

இனிய முறையில் நடைபெற்ற இந்த இணையவழிக் கலந்துரையாடலில் 'மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது' (ஆசிரியர்-நீலவண்ணன்) நூல் தொடர்பான சிறப்பான அறிமுகத்தையும் கருத்தையும் சிறகுகள் அமையச் செயற்பாட்டாளர் த.சுஜிவன் வழங்கினார். இளம் கவி நிவேதிகாவின் யாழ். நூலகம் தொடர்பான கவிதையோடு ஆரம்பித்த இக்கலந்துரையாடலில் தலைமைக் கருத்தை ஆசிரியர் மோகன்குமார் வழங்கினார்.

தொடர்ந்து செந்தமிழ் செல்வி, திருமதி மோகன்குமார், பிரியாநந்தன், கனகேஷ்வரி மற்றும் பாடசாலை மாணவி தனுஷ்கா ஆகியோரும் தமது கருத்துகளை முன்வைத்ததைத் தொடர்ந்து நிகழ்வு நிறைவுபெற்றது. யாழ். நூலக எரிப்பும் அதன் பின்னணியும் இந்நூலில் விரிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்து மலையக இலக்கியம் பற்றி பேசப்பட்ட ஒரு நிகழ்வு பற்றியது. மூங்கில் காடு கலந்தாய்வு நிகழ்ச்சி – மலையகம் வாழ்வும் இலக்கியமும். கடந்த 06.07.2021 செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்ற நிகழ்வு அது. மலையக வாழ்க்கை பகிர்தலும் புரிதலும் என்ற அடிப்படையில் சூம் இணையவழிச் செயலியினூடாக நடைபெற்ற நிகழ்ச்சியில் சுரேஸ்பாபு வரவேற்புரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து தேவதர்சன் சுகிந்தன் அறிமுக உரை இடம்பெற்றது.

ஆடுபாலம் - அஜய் ஆபிரகாம் மற்றும் ஒப்பாரிக் கோச்சி – மணிவண்ணன் ஆகியோர் 'மலையக இலக்கியம் புரிதலும் பகிர்தலும்' என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினர். மலையக மக்களின் வாழ்வும் மக்கள் இலக்கியமும் பற்றி ஜெ.சற்குருநாதன் (பிரதி அதிபர் கொட்டகலை ஆசிரியர் கலா சாலை, (வருகைதரு விரிவுரையாளர் - பேராதனைப் பல்கலைக் கழகம்) மற்றும் சிவராஜேந்திரன் (எழுத்தாளர், ஓய்வுநிலைப் பீடாதிபதி - மட்டக்களப்பு தேசிய கல்வியில் கல்லூரி) தமது கருத்துகளை முன்வைத்தனர். ஜெபஸ்டியனின் நன்றி உரையுடன் நிகழ்வு நிறைவுபெற்றது.

ஈழத்து இலக்கியம் பற்றி பேசப் புறப்படுகையில் மலையக இலக்கியத்தைப் புறந்தள்ளிவிட்டுப் பேச முடியாத அளவுக்கு மலையக இலக்கியத்துக்கு முக்கிய இடம் உண்டு. ஏராளமான படைப்புகளை வெளிக்கொண்டு வருவதற்குரிய தளமாக மலையகம் காணப்படுகிறது.

தற்போது காணப்படும் தொழில்நுட்பத்துக்கேற்ப நிகழ்வுகளை வடிவமைக்கலாம். அதில் ஈழத்து இளம் இலக்கிய ஆர்வலர்கள் கரிசனைகொண்டிருக்கிறார்கள் என்றதற்கு மேல் குறிப்பிட்ட விடயங்கள் சாட்சியாகும் என்பது எனது கருத்து. அது மட்டுமல்லாது வடக்கு, கிழக்கு இளம் இலக்கிய ஆர்வலர்களோடு மலையக இளம் இலக்கியச் செயற்பாட்டாளர்கள் கைகோர்த்து மேற்கொள்ளும் இலக்கிய முயற்சிகளும் அது தொடர்பான நடவடிக்கைகளும் மனதுக்கு மகிழ்ச்சியைத் தருக்கின்ற விடயமாகவும் காணப்படுகின்றன.

இன்று மட்டுமல்ல, அன்றும் மலையக இலக்கியச் செயற்பாடுகள் மிகவும் ஆரோக்கியமாக நகர்ந்திருக்கின்றன. சிவி சில சிந்தனைகள் பற்றி சாரல் நாடன் எழுதிய நூலில் அவர் சிவியின் இலக்கிப் படைப்புகள் பற்றியும் அவரது செயற்பாடுகள் பற்றியும் விவரித்திருக்கிறார்.

மலையக இலக்கியத்துறையில் 1960களில் ஏற்பட்ட எழுச்சியல் மலர்ந்த எழுத்தாளர்களில் ஒருவர் சாரல் நாடன் என்ற குறிப்பையும் கண்டேன். சிறுகதை, கவிதை, கட்டுரை, விமர்சனம், மொழி ஆராய்ச்சி என்று தனது இலக்கியப் பணியைத் தொடர்ந்தார். அவர் பிறந்தது, வளர்ந்தது, கற்றது, தொழில் புரிந்தது என அனைத்துமே மலையக மண்ணிலேயே என்றதனால் தன் பெயரில் அது தெரியவேண்டும் என்ற அவாவினால் குறுந்தொகையில் குறிஞ்சித் திணைப்பாடல்களில் வரும் சாரல் நாடன் என்ற விளிப்புத் தொடரை சுயமாகச் சுவீகரித்துக்கொண்டவர் அவர் எனக் குறிப்பு உண்டு.

கண்டியில் வெளிவந்த 'மாலை முரசு' சஞ்சிகையில் மலர்ந்து பின் தேசிய ஏடுகளில் இவரது படைப்புகள் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

மலையக இலக்கிய வானில் தென்றலாக வீசி புயலாகச் சீறி எழுந்த சாரல் நாடனின் படைப்புகளை மீள்வாசிப்புச் செய்வதன் மூலம் மலையக இலக்கியத்தின் அன்றைய வலிமையை அறிந்துகொள்ளலாம்.

**கணபதி சர்வானந்தா**

# மகத்துவம் மிக்க எமது பாரம்பரிய கலையே சிலம்பம்



**யதன்சைட் தோட்டம் கொட்டகலையை பிறப்பிடமாகவும் கொலப்பத்தனை தோட்டம், ஜீ. ஓ. பிரிவு, கட்டபுலாவை வசிப்பிடமாகவும் கொண்டவர் சிலம்பக் கலைஞர் செல்லதுரை தயாநந்தன். பாடசாலை காலங்களிலிருந்தே கலைத்துறையில் அதீத ஆர்வம் கொண்ட இவர், தற்போது தமிழ்க் கலையான சிலம்பக் கலையில் சிறப்புத் தேர்ச்சிபெற்றவராக விளங்குகிறார்.**

**இக்கலைக்குள் அவரது பிரவேசம் மற்றும் இக்கலை பற்றி அவருடன் உரையாடியவை எமது வாசகர்களுக்காக...**

**உரையாடல் ராம் ஜீவா**

**அரிதாகிவரும் சிலம்பக் கலைக்குள் உங்களது பிரவேசம் பற்றி எம்முடன் பகிர்ந்துகொள்வீர்களா?**

எனக்கு சிறுவயதிலிருந்தே நமது தமிழ்க் கலையான சிலம்பக் கலையை கற்றுக்கொள்ளவேண்டும் என்று மிகுந்த ஆர்வம். திருமணத்தின் பின் எனது மனைவியிடமிருந்து (மு.சசிகலா (ஆசிரியர் - ம.ம.கொத. உனுகல்லோயா.த.வி) முதல்முறையாக சிலம்பக் கலையை கற்றுக்கொண்டேன். பின்னர் மூத்தக் கலைஞரான எனது மாமனார் இராஜமணியிடமிருந்து கற்றுக்கொண்டேன்.

சிலம்பக் கலையில் ஏதேனும் நான் சாதிக்க வேண்டும் என்ற எனது மனைவியின் ஆசைக்காகவே முகநூல் வழியாக சிலம்பக் கலையில் மிகவும் தேர்ச்சிபெற்ற ஆசான் அப்துல் ரஹ்மானிடம் தொடர்ச்சியாக இதனை கற்றுக்கொண்டேன்.

சிலம்பம் கலையின் தாயகமாகத் திகழும் இந்தியாவிற்கும் சென்று உலக சிலம்ப சம்மேளனத்தின் செயலாளர் ப. செல்வராஜ் அய்யாவிடம் தொடர்ச்சியாக கற்றுக்கொண்டேன். அத்தோடு வியட்நாம் பயிற்றுவிப் பாளர்கள் மூலம் ஒக்கோ பயிற்சியையும் பயின்று முதன்நிலை சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டேன்.

**சிலம்பக் கலை பற்றியும் இளையவர்களுக்கு அதன் முக்கியத்துவம் பற்றியும் எம்முடன் பகிர்ந்துகொள்வீர்களா?**


சிலம்பக் கலை என்பது தமிழரின் பாரம்பரிய கலாசார பண்பாட்டுடன் கலந்த வீர விளையாட்டுகளில் ஒன்று. திருக்குறளில் கோல் என்றும் கலிங்கத்துப்பரணியில் வீசு தண்டிடை கூர்மழு ஒக்குமே என்ற வரியின் மூலம் தண்டு என்றும் கம்பு என்றும் குறிப்பிடப்படுகிறது. திருவிளையாடல் புராணத்திலேயே சிலம்பம் பற்றி குறிப்பிடப் பட்டுள்ளது. கி.மு. 2000 ஆண்டுகளுக்கு முன்பே சிலம்பக் கலை இருந்தாக ஆதாரங்கள் உள்ளன.

**இக்கலையை கற்றிருப்பதால் உங்களால் உணரக்கூடிய சாதகமான விடயங்கள் பற்றி?**

இக்கலையை நாம் அனைவரும் கட்டாயமாக பயில்வது அவசியம். அழிந்துவரும் எமது கலை, கலாசாரத்தை காப்பது நமது கடமையாகும். சிலம்பம் பயில்வதால் வாதம், பித்தம், கபம் உட்பட பலதரப்பட்ட நோய்கள் கூட எம்மை அனுகாமல் தடுக்கலாம் என்று கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பதார்த்த குண சிந்தாமணி என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்தோடு அழகு, ஆரோக்கியம், இளமை போன்றவற்றை நீண்டகாலம் தன்னகத்தே தக்கவைத்துக்கொள்ள சிறந்த ஒரு வழியாக இது காணப்படுகிறது. இவ்வாறான கலைகளில் மேலதிக நேரத்தை செலவிடுவது என்றும் நம் உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவும்.







இந்தக் காலத்தில் எதிர்கால சந்ததியினர் இணையத்தளத்தில் மூழ்குவதில் அதீத ஆர்வமுடையவர்களாக இருப்பது அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. தன் வாழ்க்கை எதை நோக்கிச் செல்கிறது என்பதை அறியாமலேயே சென்றுகொண்டிருக்கின்றனர். சிறுவயதிலேயே நோய்வாய்ப்பட்டு அவஸ்தைப்படுகின்றனர்.

> **‘இவ்வாறான கலைகளில் மேலதிக நேரத்தை செலவிடுவது என்றும் நம் உடலையும் உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்துக்கொள்ள உதவும். இந்தக் காலத்தில் எதிர்கால சந்ததியினர் இணையத்தளத்தில் மூழ்குவதில் அதீத ஆர்வமுடையவர்களாக இருப்பது அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. தன் வாழ்க்கை எதை நோக்கிச் செல்கிறது என்பதை அறியாமலேயே சென்றுகொண்டிருக்கிறனர். சிறுவயதிலேயே நோய்வாய்ப்பட்டு அவஸ்தைப்படுகின்றனர்’**

நமது மூதாதையர்கள் 70, 80 வயது ஏன் அதற்கு மேல் 100 வயதுவரையும் ஆரோக்கியமாக வாழ்ந்தனர். காரணம், அவர்கள் தன் உடலால் உழைத்தனர். மேலதிக நேரத்தை சிலம்பம் போன்ற கலைகளில் ஈடுபட்டு மகிழ்ந்தனர்.

ஆனால், இன்று அவ்வாறு இல்லை. இயந்திரமயமான டிஜிட்டல் உலகில் மூழ்கியுள்ளோம். அதிலேயே அதிகளவான ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் கொண்டிருக்கின்றோம்.

இங்கு உடலுக்கு ஏதும் வேலை இல்லாமல் போய்விட்டது. நலமாக, நீண்டகாலமாக வாழ எத்தனிப்பவர்கள் உங்கள் மேலதிக நேரத்தை இவ்வாறான கலைகளில் செலவிட்டு மகிழுங்கள். ஆரோக்கியமாகவும் ஆனந்தமாகவும் வாழலாம்.

சிலம்பத்தில் வெறும் கம்பை மட்டுமே பயன்படுத்தி விளையாடுவது அல்ல. இதில் பல்வேறு வகையான பிரிவுகள் அடங்கியுள்ளன. சிலம்பத்தில் ஒத்தைச்சுவடு, பிரிவுச்சுவடு, ரெண்டு வீச்சி, பூட்டுப்பிரிவு, கண்டக் கோடரி, வீச்சரிவாள், வெட்டரிவாள், சுருள்வாள், மான்கொம்பு, வேல்கம்பு போன்ற இன்னும் பல்வேறு பிரிவு விளையாட்டுகள் உள்ளன.

**இக்கலையின் ஊடாக உங்களுக்குக் கிடைத்த வெற்றிகள் நீங்கள் சாதித்தவை எனக் கூற எத்தனிப்பது?**

இக்கலையை இந்தியா சென்று பயின்று இந்தியாவில் நடைபெற்ற முதலாவது தெற்காசிய சிலம்பம் போட்டியில் முதல் இலங்கை தமிழனாகவும் மலையகத்தின் முதல் தமிழனாகவும் ஒரு தங்கம், இரண்டு வெள்ளி, ஒரு வெண்கலம் என நான்கு பதக்கங்களைப் பெற்றேன்.

இலங்கையில் நடைபெற்ற போட்டியில் எனது மாணவர்களை பங்கேற்கச்செய்து தங்கம், வெள்ளி, வெண்கலம் என பதக்கங்களையும் சான்றிதழ்களையும் பெற்றோம்.

**நீங்கள் கற்ற கலையை எதிர்கால தலைமுறை யினருக்கு கற்றுக்கொடுக் கின்றீர்களா? அப்படியாயின், அது பற்றியும் பகிர்ந்து கொள்வீர்களா?**

இக்கலையை பயின்று எனக்கென ஒரு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டேன். இலங்கை சிலம்பம் சம்மேளனம் கொழும்பு, இலங்கை அடிமுறை சம்மேளனம், திகழ் சிலம்பம் பள்ளி ஆகியவற்றினூடாக பல்வேறு இடங்களில் சிலம்பம் வகுப்புகளை நடத்தி வருகின்றோம்.

இக்கலையில் நான் வெற்றி கொள்வதற்கு என்னுடன் எப்போதும் உறுதுணையாக இருக்கும் என் தாய் தந்தைக்கும், மாமனாருக்கும், எனக்கென ஒரு அங்கீகாரம் கிடைக்க ஒரு நல்வழியை காட்டிய எனது மானசீக குரு அப்துல் ரஹ்மானுக்கும், ப.செல்வராஜ் ஆசானுக்கும் என் துணையாளுக்கும் என் மனமார்ந்த நன்றிகளையும் இத்தருணத்தில் நினைவுகூருகின்றேன்.

**குறிப்பாக, மலையக இளம் தலைமுறையினரின் பங்களிப்பு இத்துறையில் எவ்வாறாக இருக்கின்றது?**

மலையகத்தைப் பொறுத்தமட்டில் இப்பொழுதுதான் ஆரம்ப நிலையை தொட்டுள்ளதாகக் கூறலாம். தொடர்ச்சியான பயிற்சிகளில் ஆர்வம் காட்டுவது குறைந்துவிட்டது. ஆனால், சிலம்பம் பயிற்றுவிப்பாளர்கள் அதுவும் மிகவும் திறமையான இளைஞர்கள் மலையகத்திலேயே இருக்கின்றனர். எதிர்கால சந்ததியினர் இதில் ஆர்வம்கொள்ள வேண்டும். மகத்துவம் அறியாது வேற்று நாட்டு












விளையாட்டுகளில் அதீத மோகம் கொள்கின்றனர். மாறவேண்டும். எமது பாரம்பரியங்களை கட்டியெழுப்பவேண்டும்.

---

## புது வெள்ளம்




## மகுடம் பதிப்பகத்தின் 36 ஆவது வெளியீடு

‘மகுடம்’ பதிப்பகத்தின் 36 ஆவது வெளியீடாக கிழக்குப் பல்கலைக்கழக புவியியல்துறை விரிவுரையாளர் திருமதி தவபிரபா சச்சிதானந்தம் எழுதிய ‘Potential Tourism Destinations in the Batticaloa District’ வெளிவந்துள்ளது.

மட்டக்களப்பின் சுற்றுலாத்துறைக்கு உதவுமுகமான இந்தக் கைநூல், Batticaloa Introduction, Natural Destinations, Historical Destinations, Cultural Destinations, Parks in Baticaloa ஆகிய தலைப்புகளில் மட்டக்களப்பின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசங்களையும் சுற்றுலாத்துறைக்குரிய கேந்திர முக்கியத்துவமான பிரதேசங்களையும் பற்றிய தகவல்களைத் தருகிறது. முழு வர்ண பக்கங்களாக வெளிவந்திருக்கும் இந்நூலில் அரிதான பல விடயங்களை அறிந்துகொள்ளலாம்.

**ஆசிரியர் - தவபிரபா சச்சிதானந்தம்**
**நூலின் பெயர்; - ‘Potential Tourism Destinations in the Batticaloa District.’**
**தொடர்புகளுக்கு - 773483080**

---

## கொடகே தேசிய தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகளுக்கான போட்டி – 2021

கொடகே நிறுவனம் நடத்தும் தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகள் போட்டிக்கெனப் பிரசுரிக்கப்படாத நாவல், சிறுகதைத்தொகுப்பு, கவிதைத் தொகுப்புக்கான பிரதிகள் கோரப்படுகின்றன.

போட்டிக்கு அனுப்பப்படும் எந்தவொரு பிரதியும், ஏற்கனவே எந்தவொரு போட்டியிலும் தெரிவுசெய்யப்படாத பிரதியாக இருத்தல் வேண்டும். கொடகே நிறுவனத்தால் நடத்தப்பட்ட கொடகே தேசிய தமிழ் ஆக்க இலக்கியப் பிரதிகளுக்கான போட்டியில் நிராகரிப்பட்ட பிரதிகளாகவும் இருக்கக்கூடாது.

சிறந்த பிரதியாக தெரிவுசெய்யப்படும் ஒவ்வொன்றுக்கும் (நாவல், சிறுகதை, கவிதை) பணப் பரிசில்களும் விருதுகளும் வழங்கப்படும். போட்டிக்கு அனுப்பப்படும் எல்லாப் பிரதிகளும் A4 அளவில் 12 Point Baamini Font யில் கணினியில் தட்டெழுத்து செய்யப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். மேற்படி, போட்டிகளுக்கு அனுப்பப்படும் பிரதிகள் ஏலவே நூல் உருவில் வெளிவராதவையாக இருத்தல் வேண்டும். எந்தவொரு பிரதியின் உள்ளடக்கம் இலங்கை தேசியச் சமூகக் கலாசாரத்தைப் பாதிக்காத வகையில் அமைந்திருத்தல் வேண்டும். கணினி தட்டச்சு செய்யப்பட்டு அனுப்பப்படும் பிரதியின் எந்தவொரு இடத்திலும் படைப்பாளியின் எந்தவொரு விபரங்களும் இடம்பெறலாகாது. பிரதியைப் பற்றிய சுருக்கக் குறிப்பும், எழுத்தாளரைப் பற்றிய சுயவிபர விண்ணப்பமும் பிரத்தியேகமாக பிரதியுடன் இணைத்து அனுப்பப்படல் வேண்டும். போட்டிக்கு ஒரு துறைக்கு ஒரு பிரதி மட்டுமே அனுப்பினால் போதுமானது, இப்போட்டிக்கான நடுவர் தீர்மானமே இறுதியானது.

**நாவல்**

போட்டிக்கு அனுப்பப்படும் நாவலுக்கான பிரதி A4 தாள் அளவில் 80 பக்கங்களுக்குக் குறையாமலும், 150 பக்கங்களுக்கு அதிகரிக்காமலும் இருத்தல் வேண்டும். (நாவல் பிரதி போட்டியில் பங்குபற்றுபவர் ஏலவே நாவல் ஒன்றினை வெளியிடாதவராக இருக்கவேண்டும்! )

**சிறுகதைத் தொகுப்பு**

சிறுகதைத் தொகுப்புக்கான பிரதி 10 சிறுகதைகளுக்குக் குறையாமலும், 15 கதைகளுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். A4 தாள் அளவில் 40 பக்கத்துக்குக் குறையாமலும் 120 பக்கங்களுக்குக் மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(சிறுகதைத் தொகுப்பு பிரதி போட்டியில் பங்குபற்றுபவர் ஏலவே சிறுகதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிடாதவராக இருக்கவேண்டும்! )

**கவிதைத் தொகுப்பு**

கவிதைத் தொகுப்புக்கு அனுப்பப்படும் பிரதி 50 கவிதைகளுக்குக் குறையாமலும் 75 கவிதைகளுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் A4 தாள் அளவில் 30பக்கத்துக்குக் குறையாமலும் 80 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

(கவிதைத் தொகுப்பு பிரதி போட்டியில் பங்குபற்றுபவர் ஏலவே கவிதைத் தொகுப்பு ஒன்றினை வெளியிடாதவராக இருக்கவேண்டும்!) பிரதிகளை ஓகஸ்ட் மாதம் 31ஆம் எஸ். கொடகே சகோதரர்கள் பிரைவேட் லிமிடெட், 661, 665, 675, மருதானை வீதி, கொழும்பு-10. எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக விபரங்களை 0778681464- மேமன்கவி எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ள முடியும்.

**(இலங்கையில் வசிக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கான போட்டி இது.)**

# இரட்டை முகக்கவசம்





கொரோனா வைரஸ் பரவல் அதிகரிப்பையடுத்து முகக்கவசம் அணியும் விடயத்தில் பலரும் அக்கறை காட்டத் தொடங்கியிருக்கிறார்கள். சில இடங்களில் புதிய வகை கொரோனா வைரஸ் பரவி வருவதையடுத்து கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி போடும்வரை முகக்கவசம்தான் பாதுகாப்பு கவசமாக உபயோகத்தில் இருந்துகொண்டிருக்கிறது.

இந்நிலையில், அமெரிக்காவின் நோய்க்கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம் (சி.டி.சி) இரட்டை முகக்கவசம் அணிவது கொரோனா வைரஸ் தாக்குதலிலிருந்து தப்புவதற்கான சிறந்த வழி என்று அறிவித்துள்ளது. இது தொடர்பாக நடந்த ஆய்வில் இரண்டு விதமான வழிமுறைகளை கையாண்டிருக்கிறார்கள்.

முதலில் ஆறு அடி இடைவெளியில் நுகரப்படும் வைரஸ்களை சோதனைக்கு உட்படுத்தியிருக்கிறார்கள். ஒரு முகக்கவசம் அணிந்திருந்தால், பரவும் வைரஸ் துகள்களில் 40 சதவீதம் தடுக்கப்பட்டிருக்கிறது. அதுவே இரண்டு முகக்கவசம் அணிந்திருந்தபோது 80 சதவீத துகள்கள் தடுக்கப்பட்டிருக்கிறது. அறுவைசிகிச்சைக்கு பயன்படுத்தப்படும் சர்ஜிக்கல் முகக்கவசத்தை முதலில் அணிந்துவிட்டு அதன் மீது துணியிலான முகக்கவசம் அணிவது சிறப்பானது என்றும் பரிந்துரைக்கிறார்கள். சாதாரண முகக்கவசங்களைவிட அதிக அடுக்குகள் கொண்ட முகக்கவசங்கள் அணிவது கிருமிகள் ஊடுருவலை தடுக்க உதவும், நோய்த்தொற்றிலிருந்தும் பாதுகாக்கும் என்பது மருத்துவ நிபுணர்களின் கருத்தாக இருக்கிறது.

இரட்டை முகக்கவசம் அணிவதற்கு சிரமமாக இருந்தாலும் அதன்மூலம் நன்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. சுகாதார பணியாளர்கள், துப்புரவு பணியாளர்கள், அத்தியாவசிய பணியாளர்கள் என தினமும் பலருடன் தொடர்பில் இருப்பவர்கள் முகக்கவசம் அணியும் விடயத்தில் கவனமாக இருக்கவேண்டும். தாங்கள் அணியும் முகக்கவசத்தின் தரம், வைரஸ்கள், கிருமிகளை கட்டுப்படுத்தும் தன்மை பற்றி உறுதியாக தெரியவில்லை என்றால் இரட்டை முகக்கவசம் அணிவது பாதுகாப்பானது. ஒருமுறை பயன்படுத்திவிட்டு குப்பையில் வீசப்படும் முகக்கவசங்களையே ஒன்றன் மீது மற்றொன்றாக சேர்த்து அணியக்கூடாது. சர்ஜிக்கல் முகக்கவசம் மீது துணியால் தயாரிக்கப்பட்ட முகக்கவசம் அணியலாம். அது வைரஸ்கள் உள்நுழையும் இடைவெளியை குறைக்கும். பாதுகாப்பான உணர்வையும் கொடுக்கும்.

எல்லாநேரமும் இரண்டு முகக்கவச அணியவேண்டியதில்லை. பொது போக்குவரத்து, மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள இடங்கள், மோசமான காற்றோட்டம் உள்ள இடங்கள், கொரோனா வைரஸ் பரவல் உள்ள பகுதிகள், அதற்கான சிகிச்சை அளிக்கப்படும் இடங்கள் போன்ற பகுதிகளுக்கு செல்லும்போது இரட்டை முகக்கவசம் அணிவது பாதுகாப்பானது. ஒரு முகக்கவசம் அணிந்தாலும், வைரஸ்களிடமிருந்து தற்காத்துக்கொள்ளலாம். ஆனால், மூக்கை முழுமையாக மூடாமல் இருப்பது, தளர்வான முகக்கவசங்களை அணிவது போன்ற செயல்களை தவிர்க்கவேண்டும்.

# கண்களுக்கு ஓய்வுகொடுப்போம்

மனித உறுப்புகளில் மிகவும் மென்மையானது கண். உடலில் ஏற்படும் பல்வேறு நோய்கள், சம்பந்தப்பட்ட உறுப்புகளை பாதிப்பதோடு அல்லாமல் பல நேரங்களில் கண்களையும் பாதிப்பதுண்டு. அதனால் நாம் கண்களை கவனமாக பாதுகாக்க வேண்டும். கண்களுக்கு ஓய்வு கொடுக்கவேண்டும். பொதுவாக கண்களை தூரப்பார்வைக்கு மட்டுமே பயன்படுத்துவது நல்லது.

நம்மில் பெரும்பாலோனோர் நீண்டநேரம் கைபேசி பார்ப்பதை வழக்கமாகக்கொண்டிருக்கிறோம். இப்படி நீண்டநேரமாக கைப்பேசியை கண்களுக்கு அருகே வைத்து பார்ப்பதால் அதன் கதிர்வீச்சுகளால் கண்கள் வெகுவாக பாதிக்கப்படுகின்றன. கணினி, மடிகணினி போன்ற மின்னணு சாதனங்களில் வேலை செய்பவர்கள் தினமும் 12 முதல் 16 மணிநேரம்வரை தொடர்ந்து அவற்றை பயன்படுத்துகின்றனர். அதுபோன்ற நீண்டநேரம் அவற்றை பயன்படுத்துவதால் அவற்றிலிருந்து வெளியாகும் கதிர்வீச்சுக்ள் கண்களை வெகுவாக பாதிக்கின்றன. கூடவே இலவச இணைப்பாக தலைவலி, கண்வலி போன்ற பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றன.





கைபேசி, மடிகணினி போன்ற மின்னணு சாதனங்களை பயன்படுத்தும்போது அவற்றிலிருந்து வெளிவரும் கதிர்வீச்சு கண்களிலுள்ள விழிவெண்படலத்தை பெருமளவு பாதிக்கின்றன. சாதாரணமாக நாம் ஒரு நிமிடத்தில் பலமுறை கண்களை சிமிட்டுவோம். ஆனால், கைபேசியை பார்த்துக்கொண்டிருக்கும்போது குழந்தைகள் கண்களை இமைக்க மறந்து விடுகின்றனர். கூடவே இரண்டு, மூன்று நிமிடங்கள் கூட கண்களை இமைக்காமல் கைபேசியை கூர்ந்து நோக்கிக்கொண்டிருக்கிறார்கள்.

இதுபோன்று நீண்டநேரம் பார்ப்பதால் கண்ணின் விழிவெண்படலத்துக்கு மேலுள்ள ஈரப்பதம் வறட்சியடைந்து கண்களில் எரிச்சல், நீர் வடிதல், அழுத்தம் போன்றவை ஏற்படும். கூடவே கண்கள் சிவந்து தலைவலியும் ஏற்படும். இதுபோன்ற பாதிப்புகளிலிருந்து தற்காத்துக்கொள்ள கைபேசி, டெப் கணினி, மடிகணினி போன்றவற்றை குறைந்தபட்சம் 30 செ.மீ. தொலைவில் வைத்து பார்ப்பது நல்லது. இவற்றை அதிக வெளிச்சத்திலோ மிகக்குறைவான வெளிச்சத்திலோ வைத்து பயன்படுத்த வேண்டும். 20 நிமிடத்துக்கு மேலாக தொடர்ந்து இவற்றை பயன்படுத்தக்கூடாது. செல்போன் உள்ளிட்ட கேட்ஜெட்டுகளை பயன்படுத்தும்போது சிறிது இடைவெளி விட்டு பசுமையான இடங்களை பார்க்கவேண்டும். இப்படிச் செய்வது சிலியரி தசைகளுக்கு நல்லது.

கண்களில் ஏற்படும் அழுத்தத்தைப் போக்க சில ஆலோசனைகள்..

★ சிறிதுநேரம் கண்களை மூடி இமைகள் மீது ஒரு துண்டு வெள்ளரிக்காயை வைக்கலாம்.

★ கண் சொட்டு மருந்தையும் பயன்படுத்தலாம்

★ கணினி, மடிகணினி போன்றவற்றில் எழுத்துகளை பெரிதுபடுத்திக்கொள்ளலாம். தெளிவாக தெரியும், எளிமையான எழுத்து வகைகளை பயன்படுத்தலாம்.

★ கணினியின் திரை கண்பார்வை கோட்டிற்கு கீழே அமையும்படி பார்த்துகொள்ள வேண்டும்.

★ கணினியில் வேலை பார்க்கும்போது சிறுசிறு இடைவேளைகளை எடுத்துகொள்வது மிகவும் அவசியமாகும்.

★ குளிரூட்டி இருந்தால் அது முகத்தில் படும்படி அமரக்கூடாது.

★ மேசை விளக்குகளை பயன்படுத்தலாம்.

# காரிகை களம்

## பூசணிக்காய் துவையல்

**தேவையான பொருட்கள்:**

பூசணிக்காய் - 1 துண்டு
கடலைபருப்பு - 1 டேபிள் ஸ்பூன்
துவரம்பருப்பு - 1 டேபிள் ஸ்பூன்
சிவப்பு மிளகாய் - 4
புளி - நெல்லிக்காய் அளவு
தேங்காய் - அரை மூடி
எண்ணெய் - 1 டேபிள் ஸ்பூன்
உப்பு - சுவைக்கேற்ப
மஞ்சள் தூள் - ஒரு சிட்டிகை

**தாளிக்க**

கடுகு, உளுந்தம்பருப்பு - தலா அரை டீஸ்பூன்
கறிவேப்பிலை - ஒரு இணுக்கு

**பூசணிக்காயில் எல்லா விதமான மருத்துவ குணங்களும் சரிவிகிதத்தில் கலந்திருப்பதால் வாயு தொந்தரவு, செரிமான கோளாறு மற்றும் அல்சர் போன்ற பிரச்சினைகள் குணமாகும்.**





**செய்முறை:**

பூசணிக்காயை தோல் சீவி துருவிக்கொள்ளுங்கள்.

தேங்காயை பூப்போல துருவி வைக்கவும்.

பின் துருவிய பூசணி துருவலில் உப்பு சேர்த்து பிசறி ஒரு தட்டில் அமுக்கி தட்டை சாய்த்தார்போல் வைத்தால் நீரெல்லாம் வடிந்துவிடும். இப்படி செய்து சமைப்பதால் சளி பிடிக்காது. (பூசணியிலிருந்து வரும் நீரில் மிளகுத்தூள் சேர்த்து பழச்சாறாகக் குடிக்கலாம்)

வாணலியை சூடாக்கி, எண்ணெய் விட்டு, கடுகு, உளுந்தம்பருப்பு, கறிவேப்பிலை தாளித்து அதில் கடலைபருப்பு, துவரம்பருப்பு இரண்டையும் மணம் வர வறுத்து, பின் பூசணி துருவல், சிவப்பு மிளகாய், புளி அனைத்தையும் சேர்த்து வதக்கவும்.

ஆறியதும் துருவிய தேங்காய், உப்பு சேர்த்து அனைத்தையும் ஒன்றாக நைசாக அரைக்கவும். பூசணி துவையல் தயார்.

# துளசியின் பக்கவிளைவுகள்



நாம் மிகவும் புனிதமான செடியாக கருதப்படும் துளசி பல நோய்களைக் குணப்படுத்தவல்லது என்று கேட்டிருப்போம். சொல்லப்போனால் ஆயுர்வேதத்தில் பல நோய்களுக்கு சிகிச்சை அளிக்கும் முக்கிய பொருளாக துளசி பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஏனெனில், இதில் ஏராளமான மருத்துவக் குணங்கள் அடங்கியுள்ளன. துளசி செடியில் லட்சுமிதேவி வாசம் செய்வதாகக் கருதி வழிபடுவார்கள்

துளசியில் மருத்துவக் குணங்கள் இருப்பதால், நோய்களுக்கு சிகிச்சை அளிக்க மட்டுமன்றி, உணவுகளில் சுவைக்காகவும் வாசனைக்காகவும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் ஒரு பொருள் எவ்வளவுதான் ஆரோக்கியமான உணவுப் பொருளாக இருந்தாலும், அதில் சில பக்கவிளைவுகளும் இருக்கும். அப்படித்தான் துளசியிலும் ஒருசில பக்கவிளைவுகள் உள்ளன. கீழே துளசியின் பக்கவிளைவுகள் மற்றும் யாரெல்லாம் துளசி சாப்பிடக்கூடாது என்பதைக் காண்போம்.

### கர்ப்பிணிகள் சாப்பிடக்கூடாது

புதினா குடும்பத்தைச் சேர்ந்த நல்ல நறுமணம் கொண்ட மூலிகைதான் துளசி. இந்த துளசி கர்ப்பிணிகள் மற்றும் அவர்களின் கருவில் பாதிப்பை ஏற்படுத்தும். அதுவும் இது கர்ப்பப்பையில் சுருக்கங்களை ஏற்படுத்தி, கருச்சிதைவுக்கு வழிவக்கும். எனவே, கர்ப்பிணிகள் துளசி சாப்பிடுவதைத் தவிர்க்கவேண்டும்.

### சர்க்கரை நோயாளிகள்

பல ஆய்வுகள் துளசியானது இரத்த சர்க்கரை அளவை பராமரிக்க உதவும் என்று கூறியது. ஆனால், ஏற்கனவே சர்க்கரை நோய்க்கான மருந்துகளை எடுத்து வருபவர்கள், துளசியை சாப்பிடுவதைத் தவிர்க்கவேண்டும். அறிக்கைகளின்படி, துளசி இரத்த சர்க்கரை அளவை கடுமையாக குறைத்துவிடும்.

### கருவுறுதலை பாதிக்கும்

விலங்குகளின் மீது நடத்தப்பட்ட ஆய்வொன்றில், துளசி இருபாலினத்தவர்களின் கருவுறுதலையும் பாதிக்கும் என்பது தெரியவந்துள்ளது. மேலும் துளசியானது ஆண்களின் விந்தணுக்களின் எண்ணிக்கையை குறைக்கலாம், விரைவிதைகள், அட்ரீனல் சுரப்பிகள், புரோஸ்டேட், கர்ப்பப்பை போன்ற இனப்பெருக்க உறுப்புகளின் எடையைக் குறைக்கலாம் என்பதையும் ஆய்வுகள் நிரூபித்தன.

### இரத்தத்தை மெலிதாக்கும் பண்புகள்

துளசியில் உடலிலுள்ள இரத்தத்தை மெலிதாக்கும் பண்புகள் உள்ளன. அல்லோபதி மருந்துகளை உட்கொள்ள விரும்பாதவர்களுக்கு இது ஒரு சிறந்த வீட்டு வைத்தியம் என்று நிரூபிக்கப்பட்டிருந்தாலும், ஏற்கனவே இரத்த உறைதல் எதிர்ப்பு/இரத்தத்தை மெலிதாக்கும் மருந்துகளை எடுப்பவர்கள் துளசி சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

### கல்லீரலில் பாதிப்பை ஏற்படுத்தும்

துளசியில் ஏராளமான யூஜெனோல்கள் உள்ளன. இந்த யூஜெனோல் கிராம்பிலும் காணப்படுகிறது. ஆனால் அளவுக்கு அதிகமாக யூஜெனோலை உட்கொண்டால், அது கல்லீரல் பாதிப்பு, குமட்டல், வயிற்றுப்போக்கு, வேகமாக இதயத்துடிப்பு மற்றும் வலிப்பு ஆகியவற்றை ஏற்படுத்தும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

### பற்களுக்கு நல்லதல்ல

துளசி இலைகளை அதிகம் மென்று சாப்பிடக்கூடாது என்று சொல்வதற்கான விஞ்ஞான காரணம் என்னவென்றால், அதில் பாதரம் உள்ளது. இது பற்களை கறைப்படுத்தும் மற்றும் பற்களின் நிறமாற்றத்திற்கு வழிவகுக்கும். எனவே, துளசியை மென்று சாப்பிடுவதைக் குறைக்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது. துளசி இலைகள் இயற்கையாகவே அமிலத்தன்மை கொண்டவை மற்றும் நமது வாய் காரத்தன்மை கொண்டது. எனவே, துளசியை அதிகமாக மென்று சாப்பிடும் போது, அது பற்களிலுள்ள எனாமலை கரைக்கக்கூடும்.

# இங்கே பிறந்தது குற்றமோ



கல்விக்கதிபதி கலைவாணியோ
அவளைக் கட்டி இழுத்து வாருங்கள்
கொரோனா தாண்டவம் ஆடுகையிலும்
கற்றலுக்கு காசாம் காட்டுங்கள்

அரசாங்கம் சம்பளம் கொடுத்தாலும்
அவர் வீட்டில் அரிசி இல்லை போலும்
ஒரு சில மனிதம் தொலைத்தவர்கள்
ஓதியதை விற்கிறார்கள் பாருங்களேன்

வங்கியில் கடனோ அவருக்கு
வாதிட நாமோ முற்படவில்லை
வயிற்றுக்குக் கடன் தீர்க்காமல்
வாய்ப்பில்லை எம் பிள்ளை இருக்கட்டும்

ஓத மறந்தது எம் பிழையா
கலைவாணியே தண்டனை தருகின்றாயோ
எம் பிள்ளை ஓத வேண்டுகையில்
சூம் கிளாஸ் என்று உயர்கின்றாயோ

கல்வி செல்வம் வீரம் என்பார்
கடைசியில் எமக்கு ஏதும் இல்லை
இலங்கை மண்ணில் பிறந்தது
இன்றுவரை குற்றமோ
இனத்தை இனம் எடை போடுவது
என்றுதான் நிற்குமோ..!

காரையன் (கதன்)
காரைதீவு

# தூறல்கள்

# நீண்ட ஆயுளுடன்..



இன்றைய பொழுதுகளெல்லாம்
முகாரியில் மூழ்கியே
விடிகின்றன

மஞ்சள் வெயிலில்
மரணத்தின் சாயல்
விழி நனைத்துச் செல்கிறது

சுயநலன்களும்
அலட்சியங்களும்
பேராபத்துகளை
விதைகளாக்குவதால்

நரமாமிசங்களால்
மஜ்மா நகர்
நிரம்பி வழிகிறது

ஒருவர் பற்றிய
உள்ளுணர்வுகளை
அறியமுடியாமல்
தொலை நுண்ணுணர்வு
தோல்வியடைவதால்
ஒவ்வொரு ஆன்மாவும்
விலைமதிப்பற்றதாகிப் போகிறது

தசைநார்கள் இறுகி
முகத்திரை முக்காடிட்டுக் கொள்வதால்
புன்னகைகளைக் குத்தகையெடுத்த
கொரோனா மட்டும்
நீண்ட ஆயுளுடன்
நீடூழி வாழ்கிறது

பாத்திமா ஸூபா
மருதமுனை

# எழுதித் தீரா இலக்கியமே...!



முழுமதியைக் களவாடி முகமென
மாட்டிக் கொண்டாய்
பகலவன் ஒளியெடுத்து
மேனியெங்கும் பூசிக் கொண்டாய்
இராக்களை இரவல் வாங்கி
கூந்தலிலே குடியமர்த்திக் கொண்டாய்
பாற்கடலை வடிகட்டி நகக்
கணுக்களெங்கும் அப்பிக் கொண்டாய்

உன் புன்னகையை சூடிடவே
மகுடத்தை மறுத்திடும் மலர்கள்
உன் வியர்வையை முகர்ந்திடவே
தேனை வெறுத்திடும் தேனீக்கள்
உன் அழகினைப் பருகிடவே
நீரினை விடுத்திடும் மரங்கள்
உன் சுவாசத்தில் அணையவே
காற்றினை எதிர்த்திடும் சுடர்கள்

நீ எழுதித் தீர்க்க இயலாத
ஓர் இலக்கியப் படைப்பு
எந்த மொழிகளும் செய்யவில்லை
உன்னைப் புகழந்திடத் தேவையான
வார்த்தைகளின் பிரசவிப்பு
பைந் தமிழிலுமில்லை
உன் பெயருக்கு நிகரான வார்த்தைகளின்
இணைப்பு உன் பார்வைக்கே உண்டு
உலக அதிசயங்களின்
ஆணவத்தை உடைத்திடும் சிறப்பு

உன் விழி பார்த்தால்
விண்மீன்களும் உனையே
பின் தொடரும்
உன் இதழ் பார்த்தால் உதிர்ந்த
மலர்களும் மறுமுறை மலரும்
உன் இமை பார்த்தால்
மயில்களின் தோகையும்
தோல்வி பெறும்
உன் நிறம் பார்த்தால்
வானவில் தன் குறையுணர்ந்து
பின் நகரும்

குலேந்திரன்
மயிலந்தனை

# துறவிகளில்லை அவர்கள்

என் வயதினையொத்தவர்களின்
அம்மாக்கள்
அவர்கள் காலத்தில்
பதினாறு பதினேழு
வயதுகளில் தம் கனவுகளை
துறந்தவர்கள் ஆனால்
துறவிகளைப் போலில்லை

அவர்களின் அம்மாக்களின்
அறியாமையினாலும்
அப்பாக்களின்
பிடிவாதங்களினாலும்
தம் ஆசைகளை
துறந்தவர்கள் அதனால்
துறவிகளைப் போலில்லை

வீட்டின் எளிமைகளினாலும்
தம் மனதை
துறந்தவர்கள் ஆதலால்
துறவிகளைப் போலில்லை

தனக்குப் பின்னால்
பிறந்த தம்பி தங்கைகளுக்கு
அக்காக்களும்
இன்னுமொரு தாயென்பதால்
தம் இலட்சியங்களை
துறந்தவர்கள் எனவே
துறவிகளைப் போலில்லை

அப்பாக்களின்
கடமைகளிலொன்றான
திருமணத்தினாலும்
தம் உணர்வுகளை
துறந்தவர்கள் ஆகவேதான்
துறவிகளைப் போலில்லை

என் வயதினையொத்தவர்களின்
அம்மாக்கள் அவர்கள் காலத்தில்
பதினாறு பதினேழு
வயதில் தம் துறவுகளை
துறவிகளைப்போல்
விரும்பியேற்கவில்லை

ஆனாலும்
உள்ளுக்குள் பக்குவமெனும்
ஞானம் பெற்றவர்கள்
வெளியில் அமைதியெனும்
ஒளி சூழ்ந்தவர்கள்

அதனால் அவர்கள்
துறவிகளைப் போலில்லை

மயிலிறகு மனசு
சிபானா அஸீம்



# உன்னாலே இன்று இறுதி நாளே...



தமிழே உன் அகத்திலே
பிரித்தெடுத்த வலியெனும்
வார்த்தையை உணராமல்
கற்பனையில் ஆயிரம் கவி
வடித்தேன் காதல் பிரிவெனும்
தலைப்பிலே வாழ்வின் இறுதி நாள்
வலி கொண்டு இன்றைய படைப்பிலே

அழகே விழிமூடி நான் தூங்க
விழிநீரும் விளையாட மடல்தாண்டி
இமையருகே நடைபோட்டு வருகிறது
காதல் வலி இன்னதென்று
என்னுள்ளே பதிவு செய்து
களங்கத்தை ஏற்படுத்தி இரத்தக்
கண்ணீரைத் தருகிறது

எதிர்பாரா பிரிவுகளை என்னுள்ளே
அனுபவித்து தாய் அரவணைப்பை
தேடிடும் பசுக்கன்றாய் இன்று நான்
பாரிலே அலைகிறேன்
தேற்றிட யாருண்டு?
தலை துவட்டி மடியினை
தூங்க கொடுத்திட எவருண்டு?

அணை உடைத்த குளம் போலே
மனமுடைந்து அழுகிறேன்
அழகுண்ட தேவதையே உன்
அடிமையின் கண்ணீரை
காதலெனும் துணி கொண்டு
துடைத்திட வருவாயா

வாழ்க்கையே போதுமென்று
எண்ணிடும் மனம் கொண்டு
நீ பேசாத இந்நொடியில்
நாடி நாளங்கள் அறுத்துவிட்டு
என்னுயிரை மாய்த்துவிட
என்னுள்ளே போராட்டம்
எனக்காக நடக்கிறது

இறைவா என்னை மீட்டுவிடு
காதலின் வலியினால்
கல்லறைகள் எனக்காய்
திறந்திடும் சத்தம் என் செவிகளில்
இன்று கணீரென்று ஒலிக்கிறது
நீ இல்லாத இவ்வுலகில்
எனக்கெதற்கு வாழ்க்கையடி

என் இறுதி நாள் இன்றென்று
என்றெண்ணி உணர்கிறேன்
என்னருகில் மடிகொடுக்க நீ உண்டென
சொப்பனங்கள் காண்கிறேன்
விழிமூடா நிலையிலே உன்
இதழ் முத்தம் இன்று இனிமையென
இக்கணமே நினைக்கிறேன்

வன்னித் தமிழ் மறவன்
கிளிநொச்சி

# எனக்கும் உனக்குமானது



எனது கனவை
நீயாகவே எடுத்துக்கொண்டாய்
இரவு முழுவதும் பெரும்பாடுபடுத்தி
குறட்டையோடு கரைந்துபோய்
ஏழுவானம் கடந்து பல்வேறு
உயர்ந்த மதில்களை அடைந்து
மரங்களைத் தடவி

உன்னிடம் வந்திருப்பது
பெரும் அதிர்ச்சியில்
பூமி பிளந்தது
கடல் உரத்தது
நட்சத்திரங்கள் சிதறின
நான் ஒரு பூவை நுகர்ந்தபடியாக
இரவைக் கடந்துகொண்டிருக்கிறேன்

எனக்குள் குளிர்ந்த காற்றில்
ஸ்பரிசம் எழுதுவித்தன
பல ஓவியங்கள் கனவற்ற
வெள்ளைக் கடதாசியை நிறைத்தன
விடிய விடிய நீ காணும் கனவில்
வரிசையாகப் பறக்கும் கடற்காகங்கள்
இசைத்துக்கொள்வது
ஆகாயத்தின் முடிவுற்ற பயணம்
எனக்கும் உனக்குமானது

டீன் கபூர்

# நவீன உலகமும் உறவும்

உலகம் மாறுகிறது
யார் காரணம்?
உறவுகள் விலகுகின்றன
யார் காரணம்?

உண்ணும் முறையை மறந்தோம் தினம்
நோயாளிகளாய்ப் பிறந்தோம்
துரித உணவுகளையே உண்டோம் இதனால்
துரிதமாய் மாண்டோம்

இயற்கை வாழ்வை மாற்றி
இயந்திர வாழ்க்கைக்கு மாறினோம்
ஆபத்து என உணர்ந்தும்
அதையே தினம் செய்யத் துணிந்தோம்

நாகரிகம் என்னும் பெயரால்
நம்மை நாமே கூறுபோட்டோம்
காலம் மாறியது என்றெண்ணி
காலாவதி ஆகிப் போனோம்

விஞ்ஞானத்தில் காட்டும் அக்கறையை நம்
மெய்ஞானத்தில் காட்ட மறந்தோம்
நிலவில் தண்ணீர் தொடும் நாமோ தண்ணீருக்காய்
பூமியில் தினம் கண்ணீர் விட்டோம்

காக்க வேண்டியதையெல்லாம் மறந்து
காக்கையாய் பறந்து கொண்டிருக்கிறோம்
காட்டை அழித்து வீட்டைக் கட்டி
நாட்டை நாமோ கோட்டை விட்டோம்

செய்வதையெல்லாம் தெரிந்தே செய்தோம்
நல்லதை மட்டும் செய்ய மறந்தோம்
எல்லாவற்றையும் நாமே செய்தோம்
பழியை மட்டும் ஏற்க மறுத்தோம்

உலகம் மாறவில்லை
மாறுவது நீயே
உறவுகள் விலகவில்லை
விலகுவது நீயே

உண்மையை உணர்ந்தால்
உலகமும் நம்மோடு
உணர்வுகளை மதித்தால்
உறவுகளும் கைகூடும்

இளம் தாரகை
ஷஹ்னா ஸப்வான்
தர்ஹா நகர்



# ஒளிரும் கடற்கரை



உலகின் அழகிய கடற்கரையைக்கொண்ட இடங்களில் வாதூ தீவும் உள்ளடக்கப்படுகிறது. வாதூ மாலைதீவிலுள்ள ஓர் அழகிய தீவாகும். இத்தீவிலுள்ள கடற்கரை சூரியன் மறையும்போது நீல நிறத்தில் ஒளிரும்.

பைட்டோபிளாங்க்டன் எனும் நுண்ணுயிரிகளாலேயே இருட்டில் ஒளிருவதுபோல் இக்கடற்கரை காட்சியளிக்கிறது. நீர்வாழ் உயிரினங்களின் வளர்ச்சியால் கோடை காலத்தின் பிற்பகுதியில் அதாவது ஜூன் மாதம்முதல் செப்டெம்பர் மாதம்வரை இப்பகுதியில் இந்த ஒளிரும் கடற்கரையைக் காணமுடியும்.





ஒளிரும் கடற்கரை என்பது 'பயோலுமினென்சென்ஸ்' எனப்படும் ஓர் இயற்கை நிகழ்வு. நீரில் மிதக்கும் பைட்டோபிளாங்க்டன்கள் கிளர்ந்தெழும்போது துடிப்பான நீல ஒளியை வெளியிடுகின்றது. இந்த நுண்ணிய உயிரினங்களை பெரும்பாலும் மீன்கள் தமது உணவாகக்கொள்கின்றன. இவ்வாறு மீன்களிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளவே இந்த நுண்ணுயிரிகள் நீல நிறத்தில் காட்சியளிக்கின்றன. அவற்றை சாப்பிட முயற்சிப்பவர்களை பயமுறுத்துவதற்கும், பெரிய விலங்குகளை ஈர்ப்பதற்கும் இவை ஒளிரும் தன்மையைக் கொண்டுள்ளன.

உயிரினங்களுக்குள் ஒளியின் உற்பத்தி நுண்ணுயிரிகளுக்குள் உள்ள வேதியியல் எதிர்விளைவுகளின் விளைவாகும். வெளிச்சம் அதிக வெப்பத்தை உருவாக்காததால் உமிழப்படும் நீல ஒளி 'குளிர் ஒளி' என்று கருதப்படுகிறது. எனவே, தொடுவது பாதுகாப்பானது.

பயோலுமினென்சென்ஸ் ஏற்பட, பைட்டோபிளாங்க்டன் பகல் மற்றும் இரவு முழுவதும் நிலையான வெப்பநிலையில் இருக்கவேண்டும். எனவே, கோடைகாலத்தின் பிற்பகுதியிலிருந்து குளிர்காலத்தின் ஆரம்பத்தில் அமாவாசை இரவுகள் இந்த அற்புதத்தை அனுபவிக்க ஏற்றவை. இந்த நேரத்தில் வாதூ கடற்கரையைச் சுற்றியுள்ள கடலில் இந்த உயிரினங்கள் ஏராளமாக உள்ளன. அலைகளுடன் மணலை சூடாக்கும்போது அவை வேறொரு பளபளப்பில் கரையோரத்தை ஒளிரச் செய்கின்றன. மேலும், கையால் தண்ணீரை அசைக்கும்போது உயிரினங்கள் நீரின் இயக்கத்தால் தொந்தரவுசெய்யப்பட்டு பிரகாசிக்கத் தொடங்குகின்றன.

# சிங்கப்பூரின் தூரியன் தியேட்டர்




விதைகளைப் பாதுகாக்கும் தூரியன் பழத்தின் கடினமான முள் தோலால் ஈர்க்கப்பட்டு, டிபி ஆர்கிடெக்ட்ஸ் மற்றும் மைக்கேல் வில்போர்டு ஆகியோரால் வடிவமைக்கப்பட்டதே சிங்கப்பூரின் எஸ்ப்ளேனேட் தியேட்டர். இது விரிவான தோல்




அமைப்பைக் கொண்டுள்ளது.

மெரினா விரிகுடாவின் கரையிலுள்ள எஸ்ப்ளேனேட் கலை நிகழ்ச்சி மையம் சிங்கப்பூரில் 2002 இல் திறக்கப்பட்டது.

சிங்கப்பூரை தளமாகக்கொண்ட டிபி ஆர்கிடெக்ட்ஸ் பிரைவேட் லிமிடெட் மற்றும் மைக்கேல் வில்போர்ட் & பார்ட்னர்ஸ் ஆகியோரால் விருதுபெற்ற வடிவமைப்பு உண்மையில் நான்கு ஹெக்டேயர் வளாகமாகும். இதில் ஐந்து ஆடிட்டோரியங்கள், பல வெளிப்புற செயல்திறன் இடங்கள், அலுவலகங்கள், கடைகள் மற்றும் குடியிருப்புகள் உள்ளன.

எஸ்ப்ளேனேட் வடிவமைப்பு இயற்கையுடன் இணக்கத்தை வெளிப்படுத்துவதாக அமைகின்றது. டிபி ஆர்கிடெக்ட்ஸின் இயக்குநரான விகாஸ் எம்.கோர், எஸ்ப்ளேனேட்டை "ஒரு புதிய ஆசிய கட்டிடக் கலையை வரையறுப்பதில் கட்டாய பங்களிப்பு" என்று அழைத்தார்.


முதன்மை செயல்திறன் இடங்களுக்கு மேல் இரண்டு வட்டமான உறைகள் ஆதிக்கம் செலுத்தும் தெளிவான வடிவத்தை வழங்குகின்றன. இவை இலகு ரக, வளைந்த விண்வெளி பிரேம்கள், முக்கோணக் கண்ணாடிகளுடன் பொருத்தப்பட்டவை மற்றும் சூரிய நிழல் மற்றும் பரந்த வெளிப்புறக் காட்சிகளுக்கு இடையில் உகந்த பரிமாற்றத்தை வழங்கும் ஷாம்பெயின்-வண்ண சன்ஷேட்களின் அமைப்பு. இதன் விளைவாக வடிகட்டப்பட்ட இயற்கை ஒளி மற்றும் நாள்



முழுவதும் நிழல் மற்றும் அமைப்பின் வியத்தகு மாற்றத்தை வழங்குகிறது. இரவில் வடிவங்கள் விரிகுடாவின் விளக்குகளாக நகரத்தின் மீது மீண்டும் ஒளிரும்.

இது சிங்கப்பூரின் முக்கியமான அடையாளமாகத் திகழ்கின்றது.

# ஓவிய மலை



தென்னமெரிக்காவின் பெரு நாட்டில் குஸ்கோ (Cusco) நகரம் இருக்கின்றது. இங்குள்ள Andes மலைத்தொடரை 'ஓவிய மலை' என்று அழைக்கின்றனர். இந்த ஓவிய மலை 5200 மீற்றர் உயரமுள்ள மலைத் தொடரின் குன்றுகள் முழுவதும் பல வண்ணங்கள் பூசப்பட்டதுபோல் இயற்கையிலேயே மிக அழகாகக் காட்சியளிக்கின்றது.

குளிர்காலம் வந்துவிட்டால் நிறைய பனி கொட்டும். பனிக்கால முடிவில்தான் பார்க்க முடியும். அப்பொழுது பனி உருகி, மலைப் பாறைகளைப் பார்க்க முடியும்.

அப்பொழுது ஏற்படும் இயற்கை மாற்றத்தால், மலைத் தொடர் முழுவதும் பல வண்ணங்கள் பூசப்பட்டதுபோல் காட்சியளிக்கும். இதை நேரில் காண ஏராளமான சுற்றுலாப் பயணிகள் இங்கு வந்து போகிறார்கள்.

# உலகில் அதிக விலைகொடுத்து வாங்கப்படும் மாம்பழம்

மியாசாகி (Miyazaki) என்று ஜப்பானிய மொழியில் அழைக்கப்படும், ஜப்பானிய மாம்பழம்தான், இன்று உலக சந்தையில் அதிக விலை கொடுத்து வாங்கப்படும் மாம்பழ இனம். மியாசாகி மாம்பழத்தில் உடலிலுள்ள மாசுக்களைத் தூசுபடுத்தும் ஆன்டிஒக்சிடன்டுகள் (antioxidant) அதிகமாக உள்ளன. பீட்டா கரோட்டின் (beta-carotene), போலிக் அமிலம் (folic acid) நிறைய இருக்கின்றது. கண்பார்வைக்கு நன்மை பயக்கும் பழம் இது. இதன் பூர்வீகம் ஜப்பானின் மியாசாகி நகரந்தான். எனவே, அதன் பெயர்கொண்டே மாம்பழங்களும் அழைக்கப்படுகின்றன.



இது ரூபி வண்ணத்தில் காணப்படும். சர்வதேச சந்தையில் கடந்த ஆண்டு ஒரு கிலோ 2.70 ரூபா இலட்சத்துக்கு விற்பனையானது. (நம்ப முடியவில்லையா? ஆனால், நாம் ஜீரணிக்க வேண்டிய நிஜம் இது)

இது இந்தியாவுக்கும் வந்துவிட்டது ஆச்சரியம். மத்திய பிரதேசத்தில், ஜபால்பூரைச் சேர்ந்த ஒரு விவசாயி, இது என்ன வகை என்று தெரியாமல் நட்ட மரங்களுள் ஒன்று இந்தப் பழத்தைத் தந்திருக்கின்றது. பழத்தின் மதிப்பறிந்து, 24 மணிநேரக் காவல் ஏற்படுத்தப்பட்டுள்ளமைதான் வேடிக்கை. (அல்ஷேஷன் நாய்களுடன் காவலாளிகள்)

டைனோசரஸின் சிகப்பு முட்டைகள் போன்ற தோற்றம் கொண்ட இந்த ஓர் இன மாம்பழம் குறைந்தபட்சம் 350 கிராம் எடை கொண்டதாக இருக்கவேண்டும்.

Taiyo-no-Tomago (Eggs of Sunshine) என்ற பெயரில்தான் இந்த மாம்பழங்கள் ஜப்பானில் விற்பனையாகின்றன. ஏப்ரல் தொடக்கம் ஓகஸ்ட் வரைதான் இந்த இன மாம்பழங்களின் பருவகாலமாகும்.

இரண்டு மாம்பழங்கள் கொண்ட ஒரு பெட்டி 8600 ரூபா தொடக்கம் 2.7 இலட்சம் ரூபா வரை விற்பனையாகின்றன. தாய்லாந்து, பிலிப்பைன்ஸ், இந்தியா ஆகிய மூன்று நாடுகளில் மட்டுமே இவை கிடைக்கின்றன.

# குறும்பன் பதில்கள்




**உண்மையான மகிழ்ச்சி எங்கு கிடைக்கும்?**

பி.ரசீந்திரன் - வெள்ளவத்தை

நமக்கு கிடைக்கும் மகிழ்ச்சி என்பது இடங்களைப் பொறுத்து அமைவதில்லை. நம்மோடு பயணிக்கும் மனிதர்களைப் பொறுத்து அமைகிறது.

**தலைவலி ஏன் வருகிறது?**

வாமணன் அறிவுமதி- தெரணியகலை



தலையின் முன் பகுதியில் தலைவலி இருந்தால் அதற்கு தூங்குவதே மருத்துவம்.

தலையின் மேல் பகுதியில் வலி இருந்தால் சரியாக சாப்பிடுவதும், தண்ணீர் குடிப்பதுவுமே அதற்கு மருத்துவம்.

தலையின் பின் பகுதியில் வலியிருந்தால் அதற்கு மன உளைச்சலே காரணம்.

ஆகையால், எதற்கெடுத்தாலும் மருந்தை உட்கொள்ளாமல் எதற்காக தலைவலி ஏற்பட்டது என்று கண்டறிந்து செயற்படுங்கள்.

**ஏழைக்கும், பணக்காரனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன..?**

செபஸ்டியன் - குருநாகல்

100 கிலோ அரிசி மூட்டை தூக்குபவனுக்கு அதை வாங்க சக்தி இல்லை.

100 கிலோ அரிசி மூட்டை வாங்குபவனுக்கு அதைத் தூக்க சக்தி இல்லை.

**பெண் தோழிகள் அதிகம் இருக்கும் ஆண்களைப் பற்றி குறும்பன் நினைப்பது என்ன..?**

ச.நவன் - பூகொடை

ஓர் ஆணுக்கு பெண் தோழிகள் அதிகம் இருந்தால், அவன் காதல் மன்னனாக இருக்க வேண்டுமென்பது இல்லை.

நல்ல கண்ணியமான ஆணாகவும் இருக்கலாம்..!

**அறிவியல் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?**

த.விஜயரஞ்சன் - ஹெட்டியாவத்தை

பெப்ரவரி 28




**இந்தியாவின் பரப்பளவு எவ்வளவு?**

த.அறிவானந்தம் - தெஹிவளை



32,87,263 சதுர கிலோமீற்றர்

**சொன்னது சொன்னதுதான்**

மதுபானக் கடையில் ஒரு சிறுவன் பணியாற்றி வந்தான். அவன் தினமும் காலை 9 மணியிலிருந்து இரவு 10 மணிவரை அந்த மதுபானக் கடைக்கு வருபவர்களுக்கு மதுபானம் ஊற்றிக் கொடுத்து வந்தான்.

ஒருநாள் அந்த மதுபானக் கடைக்கு ஒரு தொழிலதிபர் வருகை தந்தார். அவர் அங்குள்ள எவரையும் மதிக்காமல் ஆணவத்தோடு பலவகையான மதுபானங்களை வாங்கி குடித்துக் கொண்டிருந்தார்.

அப்போது, தொழிலதிபருக்குத் தேவையான அனைத்து மதுபானங்களையும் அந்த சிறுவனே வழங்கி வந்தான். அப்போது சிறுவனை நீண்ட நேரமாக அவதானித்துக் கொண்டிருந்த தொழிலதிபர் திடீரென அவனை அழைத்தார்.

''நீயெல்லாம் இங்கு வந்து வேலை செய்யாதே. பிறகு என்னைப்போல் குடிகாரனாக ஆகிவிடுவாய்'' என்றார்.

அதற்கு அந்த சிறுவனோ, ''நீயும் இனிமேல் இங்கு குடிக்க வராதே. பிறகு நாளைக்கு உன் பையனும் என்னைப் போலவே அப்பாவை இழந்து இங்கு வேலைக்கு வந்தாலும் வருவான்'' என்று சொல்லிவிட்டு தன் வேலைகளைக் கவனித்தான்.

**உங்களுடைய கேள்விகளை குறும்பனிடம் கேளுங்கள்**
**whatsapp - 076 2728213**
**e-mail- kurumpan@yahoo.com**

# தமிழன் தர்பார்



தொகுப்பு:
மணி ஸ்ரீகாந்தன்

## இது எங்க ஏரியா

## கடைசி மனிதன் இருக்கும்வரை...





ஒருசமயம் சின்ன அண்ணாமலை, கவியரசரிடம் இந்தியாவில் இலஞ்சத்தை ஒழிக்கவே முடியாதா கவிஞரே? என்று கேட்டுள்ளார். அதற்குக் கவியரசர் உடனடியாக ஒரு குட்டிக் கதை சொன்னாராம்.

ஓர் ஊரில் எலித்தொல்லை பெருத்து மக்கள் அவதிப்பட்டனர். ராஜாவுக்கு இந்தச் செய்தி போனது. எலிகளை ஒழிக்க ராஜா ஒரு யோசனை செய்து, ''செத்த எலி ஒன்றுக்கு ஐந்து ரூபா தரப்படும். அரண்மனையில் செத்த எலிகளைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுக் காசு பெற்றுக்கொள்ளலாம்'' என்று தண்டோரா போடப்பட்டது. ஏராளமான எலிகளைப் பிடித்துச் சாகடித்துக் கொண்டுவந்து கொடுத்துக் காசு பெற்றுச்சென்றார்கள் மக்கள். இதனால் அரண்மனை நாற்றமெடுக்க ஆரம்பித்துவிட்டது. உடனே, யாரும் செத்த எலிகளைக் கொண்டுவர வேண்டாம். எலியின் வாலை மட்டும் கொண்டுவந்தால் போதும்'' என்று சொல்லப்பட்டது. மக்களும் செத்த எலியின் வாலைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுக் காசு வாங்கிச் சென்றார்கள்.

நாளுக்கு நாள் எலி வாலைக் கொடுத்துவிட்டுக் காசு வாங்கிச் செல்பவர்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே போகிறதே தவிர, எலித் தொல்லை அடங்கினபாடில்லையே...'' என்று ராஜா யோசித்தார். நாட்டுல என்ன நடக்குத்துன்னு இரகசியமா ஆள் போட்டு விசாரித்தார். காசு கிடைக்குமென்று மக்களே எலிகளை வளர்க்க ஆரம்பித்துவிட்டார்கள் என்பது அப்போதுதான் தெரியவந்தது. இந்தக் கதையை சொல்லிவிட்டு, கடைசி மனிதன் இருக்கும்வரை இலஞ்சத்தை ஒழிக்கவே முடியாது என்றாராம் கண்ணதாசன்.


இன்னிக்கு இருக்கிற மீனு நாளைக்கு கருவாடு ஆகும். இன்னிக்கு வைக்கிற மீன் குழம்பு நாளைக்கு கருவாட்டுக் குழம்பு ஆகுமா?




நடனக் கலைன்னா டான்ஸ். ஓவியக் கலைன்னா ஆர்ட். அப்போ, தவக்களைன்னா ?



கொசு கடிச்சா யானைக்கால் நோய் வரும். ஆனா, யானைக் கடிச்சா கொசுக்கால் நோய் வருமா?



வாயால் நாய்னு சொல்லலாம். ஆனால், நாயால் வாய்னு சொல்ல முடியுமா?



## அம்மா ஒரு வரம்



வீட்ல சும்மாதான இருக்க..

எல்லோரும் கூறுகின்ற இந்த வார்த்தையை இப்பொழுது குழந்தைகள் கூட சொல்ல ஆரம்பிச்சுட்டாங்க..

"நீ சும்மா தான மா இருக்க..

இது செஞ்சி கொடுத்திடு மா.."

எல்லாரும் சொல்றது போல ஒரு நாள் சும்மா இருந்தா என்னன்னு தோணுச்சு.

வீட்டில் உள்ள அனைவரும் கிளம்பிட்டாங்க....

அவரவர்க்கு தேவையான உணவுகளை சமைத்து கொடுத்து விட்டேன்.

இன்றைக்கு சும்மா இருப்போம் என்னதான் ஆகும் பாப்போம்.

மாலை கணவரும், பசங்களும் வீட்டிற்கு திரும்பினார்கள்.

"அம்மா பசிக்குது மா..

எதாவது எடுத்துட்டு வா மா,"

"எனக்கும் தலைவலிக்குது ஒரு கோப்பி போட்டு தா மா" என்று சொல்லிக்கொண்டே வீட்டின் உள்ளே நுழைந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

வாசல் முழுவதும் குப்பையால் நிறைந்து இருக்கிறது.

வீட்டின் உள்ளே சென்றால் காலையில் செல்லும் பொழுது இரைத்த பொருட்கள் எல்லாம் அனைத்தும் கீழே இருக்கின்றன.

காலையில் துடைத்த ஈரமான துண்டுகள் அனைத்தும் நாற்காலியில் கூளமாக இருக்கின்றன.

பாலிஷ் செய்யும் டப்பா திறந்தே இருக்கு.

தலைக்கு தடவும் ஜெல்லும் ஓபன் பண்ணி இருக்கு.

பசங்களுக்கும் ஒன்றும் புரியவில்லை.

அவர்கள் புத்தகங்கள் ஆங்காங்கே இருக்கின்றன.

விளையாட்டுப் பொருட்கள் இரைந்து கிடக்கின்றன.

சீருடைகள் தோய்க்காமல் அப்படியே போடப்பட்ட இடத்தில் இருக்கின்றன.

இவ எங்க தான் போனான்னு சமையல் அறைக்குள் சென்று பார்த்தால், பாத்திரங்கள் கழுவாமல் நாற்றம் அடித்துக்கொண்டு இருக்கின்றன.

எங்க தான் போனாலோ.. உடம்பு சரி இல்லையோ?"

ரூமிற்கு சென்றால், இரவு உபயோகப்படுத்திய தலையணை, போர்வை எல்லாம் மடித்து வைக்காமல் இரைந்து கிடக்கின்றன.

சரி பாத்ரூமில் இருப்பாள் கதவு தட்டி பாக்கலாம் னு திறந்தா, காலையில் போட்ட சோப் டப்பா முழுவதும் தண்ணீரில் முழுகிக் கரைந்து போய் தரை முழுவதும் கொழ கொழனு ஆகிடுச்சு.

அழுக்கு துணிகள் அசிங்கமாய் தொங்கிக்கொண்டு இருந்தன.

ஒன்றும் புரியாமல் பதற்றத்துடன் மாடியில் உள்ள அறைக்குள் சென்றார்கள்.

கையில் நாவல் புத்தகம் ஒன்றுடன் நாற்காலியில் அமர்ந்துகொண்டு தேநீர் அருந்திகொண்டு இருந்தாள்.

"என்னடி ஆச்சு உனக்கு ?

வீடு ஏன் இப்படி இருக்கு?

அம்மா என்ன ஆச்சு மா உனக்கு?"

பதட்டமான கேள்விகள்.

"நீங்க எல்லோரும் தான் சொல்லிட்டு போனீங்க, வீட்ல சும்மா தான் இருக்க ன்னு.

அதான் சும்மா இருக்கலாம்னு!!"

கணவனுக்கு தன் தவறு உணர்ந்தது.

இந்த வார்த்தையை சொல்வது தவறு.

அவ எதுவும் செய்யவில்லை என்றால் வீடு வீடாகவே இருக்காது....

"என்னை மன்னித்து விடு" என்று கூறினார்.

பிள்ளைகளும் தம் தவறை உணர்ந்து "அம்மா மன்னிச்சிடு மா. இனி அப்படி சொல்ல மாட்டோம். நீ இல்லைனா வீடு எப்படி இருக்கும்னு தெரிஞ்சுகிட்டோம்."

நான் சொல்வதால்தான் என் பசங்களும் இந்த வார்த்தையை அவ கிட்ட சொல்லி கஷ்டப்படுத்தறாங்கனு அவருக்கு புரிந்தது.

இனி எப்பொழுதும் தன் மனைவியை பிள்ளைகளிடமோ, வெளி ஆட்களிடமும் தாழ்த்தி பேசமாட்டேன் என்று மனதிற்குள் ஒரு முடிவு எடுத்தார்.

"நீ இங்கயே இரு. நா போய் உனக்கு கோப்பி போட்டு எடுத்துட்டு வரேன்" கணவர் கிளம்பினார்.

பசங்களும் "நாங்க உனக்கு ஸ்நாக்ஸ் எடுத்துட்டு வரோம் மா. நீங்க வெயிட் பண்ணுங்க மா"

"யாரும் எதுவும் செய்ய வேண்டாம். எல்லோரும் போய் ரிவி பாருங்க. நான் பத்து நிமிடத்தில் உங்களுக்கு கேசரி செய்து தரேன் சாப்பிடுங்க" என்றாள்.

மனதில் சந்தோஷத்துடன் சமையல் அறைக்கு சென்றாள்.....

இதுதான் அம்மா!

## யாருக்கும் கடமை உணர்வே கிடையாது



ரயில் வண்டி ஓடிக் கொண்டிருந்தது. ஒரு பெட்டியில் சிலர் பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சு இந்திய ரயில்வே ஏன் நஷ்டத்தில் இயங்குகிறது? என்று திரும்பியது.

"திறமை இல்லாத நிர்வாகத்தால்தான் நஷ்டம் வருகிறது" என்றார் ஒரு பெரியவர்.

குறுக்கிட்ட ஒரு பெண்மணி, "தேவைக்கு அதிகமாக நிறைய பேரை வேலைக்கு வைத்திருக்கிறார்கள். இதனால் நிறைய செலவாகிறது. ஆகவேதான் நஷ்டம் வருகிறது" என்று தன் கருத்தைச் சொன்னார்.

இன்னொருவர், "நீங்கள் இருவர் சொல்வதுமே எனக்கு அவ்வளவு பொருத்தமாகத் தெரியவில்லை. இங்கே வேலை செய்யறவங்க எல்லாம் சோம்பேறிகள். யாருக்கும் கடமை உணர்வே கிடையாது. அதனால்தான் நஷ்டம் வருகிறது" என்றார்.

அருகில் இருந்த மற்றொரு பெண்மணி தன் கருத்தைச் சொல்ல வாயைத் திறந்தார்.

அப்பொழுது டிக்கட் பரிசோதகர் வருகிறார் என்ற குரல் கேட்டது.

அவ்வளவுதான். பேசிக்கொண்டிருந்த அனைவரும் தாங்கள் அமர்ந்திருந்த இருக்கைக்கு அடியில் ஒளிந்துகொண்டனர்.

## பாதுகாப்பு முக்கியம்!



சிறுவன் ஒருவனுக்கு டாக்டர் அம்மை ஊசி போட்டார். "ஊசி போட்ட காயம் ஆற ஒரு வாரத்திற்கு மேல் ஆகும். வலி மிகுதியாக இருக்கும். உன் நண்பர்கள் யாரும் இந்தக் கையில் இடித்துவிடாமல் இருக்கக் கட்டுப்போட்டு விடட்டுமா?" என்று கேட்டார்.

"டாக்டர்! ஊசி போடாத இன்னொரு கையில் கட்டுப் போட்டு விடுங்க" என்றான் சிறுவன்.

வியப்பு அடைந்த டாக்டர், "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டார்.

"என் நண்பர்கள் என்ன செய்வார்கள் என்று எனக்குத் தெரியும் டாக்டர். அதனால்தான்" என்றான் அவன்.






"நான் உன்னைப் பெண் பார்க்க வந்தபோது இரகசியமாக ஐந்து விரல்களையும் குவித்து, வாயால் ஊதி, தலையை ஆட்டி என்னவோ சாடையாகக் கேட்டியே. என்ன அது?"

"உங்களுக்குச் சமைக்கத் தெரியுமா என்று கேட்டேன் அவ்வளவுதான்."








சமூக வலைத்தளங்களில் நீங்கள் படைக்கும், பகிர்ந்த, படித்துச் சுவைத்த சுவாரஸ்யமான விடயங்களை எமக்கு அனுப்பிவையுங்கள். அத்தோடு சிரிப்புத் துணுக்குகள், வித்தியாசமான செல்பிகள், புகைப்படங்கள், நச்சுன்னு நாலு வரியில் எழுதப்படும் ஹைக்கூ உள்ளிட்டவற்றையும் எம்மோடு பகிர்ந்துகொண்டால் சிறப்பானதை தெரிவுசெய்து "தமிழன் தர்பார்" பக்கத்தில் பிரசுரிக்கக் காத்திருக்கிறோம்.

தொலைபேசி இல - 0740107194
அனுப்பவேண்டிய முகவரி : இல.91, விஜேராம மாவத்தை, கொழும்பு-07 மின்னஞ்சல் முகவரி: thamilandharbar@yahoo.com

# சீத்துவக்கேடு 143


காரைக்கவி

சரி சரி உந்த வாத்திமாற்றை கதையையும் பள்ளிக்கூடக் கதையையும் பிறகு ஒரு நாளைக்கு ஆறுதலாக் கதைப்பம் எண்ட அப்பு, அருளும் தெருளும் இருந்தா ஒருத்தனுக்கு பொருள் தன்ரை பாட்டுக்கு கிடைக்கும் எண்டார்.

கடவுளுக்கு உடம்பாலை யும் மனசாலையும் எவன் ஒருத்தன் தொண்டு செய்யுறானோ அவனுக்கு கடவுளின்ரை அருள் அளவில்லாமல் கிடைக்கும். அவன் கேக்கிறது கேக்காதது எண்டு அவனுக்கு எல்லாச் செல்வங்களையும் கடவுள் குடுப்பார். அவனுக்கு என்ன வேணும் எண்டு கடவுளுக்குத் தெரியும் எண்டார் அப்பு.

நான் முந்திச் சொன்ன மாதிரி கோயில்களிலை காலமையும் பின்னேரமும் கட்டாயம் விளக்கு கொளுத்த வேணும் எண்ட ஆச்சி, உதுபோல வீடுகளிலையும் எங்கட தொழில்கள் செய்யுற இடங்களிலையும் வியாபார இடங்களிலையும் கட்டாயம் விளக்கு கொளுத்த வேணும். அப்பதான் வீடும் சரி எங்கட தொழில்களும் சரி விருத்திக்கும் செல்வம் பெருகும் எண்டா.

முந்தி கன கோயில்களிலை அணையா விளக்குகளே எரிஞ்சது. உப்ப உவங்கள் கோதாரி விழுந்த பிராமணன்களும் மணியகாரர்மாரும் உதுகளை எங்க கவனிக்கிறான்கள் எண்டார் அப்பு.

முந்தி சாமி அறையில மட்டும் எண்டில்லை, வாசல்படியிலை தொங்கு விளக்கு எண்டும் ஒருவிதமான விளக்குகள் கொளுத்தினவை. அதால வீடு முழுக்க வெளிச்சமாய் இருக்கும். அதமாதிரி வீட்டு மாடங்களிலையும் விளக்குகள் கொளுத்தினவை கண்டியோ எண்டார் அப்பு.

விளக்கு எண்டது கடவுளின்ரை அம்சம். விளக்கை நாங்கள் எந்தளவுக்கு மனம் ஒன்றி கும்பிடுறமோ அந்த அளவுக்கு கடவுளை நெருங்க முடியும் எண்டு பெரிய ஆக்கள் சொல்லுகினம்.

ஒருத்தர் ஒவ்வொரு நாளும் விளக்கு கொளுத்தி கும்பிட்டால் அவருக்கு மெய் உணர்வைப் பெற முடியும் எண்டு உவர் எங்கட அப்பர் சொல்லி இருக்கிறார் தெரியுமெல்லே.

காலமை, பின்னேரம் பொழுது படேக்கை ரெண்டு நேரமும் விளக்கு கொளுத்திற வீடுகளில பிரச்சினையள் ஒண்டும் வராது புண்ணியமும், ஞானமும் கூடும் எண்டுகினம்.

அதால நான் என்ன சொல்ல வாறன் எண்டால், எல்லாப் பெண்டுகளும் வீடுகளிலை காலமை, பின்னேரம் ரெண்டு நேரமும் கட்டாயம் விளக்கு கொளுத்த வேணும் எண்டா ஆச்சி.

உந்த விளக்குகளிலை கனவிதம் இருக்கெண்டும் கொளுத்திற ஒவ்வொரு விளக்குக்கும் ஒவ்வொருவிதமான நன்மை இருக்கெண்டும் பெரிய ஆக்கள் சொல்லி வைச்சிருக்கினம் எண்ட ஆச்சி அதுகளை லிஸ்ட் போட்டா.


**அகல் (மண்) விளக்கு**
**- எல்லா மங்கலங்களையும் அளிக்கும்.**

**வெண்கல விளக்கு**
**- தோசங்களை நீக்கும்.**

**செம்பு விளக்கு**
**- மனதில் அமைதி தரும்.**

**பித்தளை விளக்கு**
**- குடும்பத்தில் ஒற்றுமையை ஏற்படுத்தும்.**

**வெள்ளி விளக்கு - அமைதி நிலவும்.**
**தங்க விளக்கு - ஆயுள் நீடிக்கும்.**



ஆனா ஒரு விசயம் தெரியுமே உங்க கன வீடுகளிலையும் கோயில்களிளையும் ஸ்ரயிலுக்கு கொளுத்திற எவர்சில்வர் விளக்குக்கு என்ன நன்மை எண்டு ஒரு புத்தகங்களிலையும் ஒண்டும் சொல்லேல்லை எண்டா ஆச்சி.

உந்த வீட்டில கொளுத்திற விளக்குகளை குத்து விளக்கு, தூண்டா மணி விளக்கு, காமாட்சி விளக்கு, பாவை விளக்கு எண்டு எங்கட ஆக்கள் பிரிச்சு வைச்சிருக்கினம் எண்ட அப்பு, உந்த குத்து விளக்கை பிரம்மா, விஷ்ணு, சிவன் மூண்டு பேரும் சேர்ந்த ரூபம் எண்டுவினம் எண்டார் .

உதமாதிரி எங்கட ஆக்கள் விதம் விதமான எண்ணெய் வகைகளைப் பாவிச்சு விளக்குகள் கொளுத்தினவை. அப்பிடி பாவிக்கிற ஒவ்வொரு விதமான எண்ணெயளுக்கும் ஒவ்வொருவிதமான நன்மையள் இருக்கெண்டு பெரிய ஆக்கள் சொல்லி இருக்கினம் எண்ட ஆச்சி அதுக்கும் ஒரு பட்டியல் போட்டா.

**நெய்**
**- சுகமும், ஞானமும் அதிகரிக்கும்.**

**நல்லெண்ணெய்**
**- நோய் பரிகாரம்.**

**இலுப்பெண்ணெய்**
**- கடன் தொல்லை நீங்கும்.**

**ஆமணக்கெண்ணெய்**
**- சகல சம்பத்தும் கிடைக்கும்.**

**தேங்காயெண்ணெய்**
**- கணபதி, குல தெய்வ ஆசீர்வாதம் கிடைக்கும்.**


எண்ட ஆச்சி உந்த அஞ்சு எண்ணெயளையும் கலந்தும் விளக்கு கொளுத்தலாம் எண்டா.

**(தொடரும்)**





# இவ்வார இராசி பலன்கள்



வித்வ கலாபூஷணம்
ஜோதிட திலகம் சிவஸ்ரீ
வெங்கட சுப்ரமணிய
குருக்கள்

### மேஷ ராசி அன்பர்களே!

குடும்பத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கும்போது பொறுமை அவசியம். கணவன் - மனைவிக்கிடையே ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகள் தீர்ந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். தடைப்பட்டுவந்த சுபநிகழ்ச்சிக்கான பேச்சுவார்த்தை நல்லபடி முடியும். சிலருக்கு பணிச்சுமை அதிகரிப்பதால் உடல் அசதி ஏற்படும். வாரப் பிற்பகுதியில் எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகளுக்கு இடமுண்டு.

வியாபாரத்தில் கொடுக்கல் வாங்கல் விடயத்தில் தகுந்த எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியம். மற்றபடி வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சியும் நிம்மதியும் தரும் வாரம் இது. புகுந்த வீட்டி னருடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

### ரிஷப ராசி அன்பர்களே!

குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த சிறுசிறு பிரச்சினைகள் நீங்கி, மகிழ்ச்சி குடிகொள்ளும். பணியின் காரணமாக பிரிந்திருந்த தம்பதி ஒன்றுசேரும் வாய்ப்பு ஏற்படும். பிள்ளைகள் உங்கள் எண்ணப்படி நடந்துகொள்வார்கள். தாயின் தேவைகளைப் பூர்த்திசெய்து, மகிழ்ச்சி அடைவீர்கள். சகோதரர் நீங்கள் கேட்ட உதவியை செய்துதருவார். எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கும். சிலருக்கு பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்புண்டு. வியாபாரத்தில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினை எதுவும் இருக்காது. பணியாளர்கள் நல்லமுறையில் ஒத்துழைப்பார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு மனதை சஞ்சலப்படுத்தும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் அனுசரணையாக நடந்துகொள்வார்கள்.

### மிதுன ராசி அன்பர்களே!

உடல் ஆரோக்கியம் மேம்படும். தேவையான பணவரவு உண்டு. சிலருக்கு வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். நீண்டநாளாகத் தடைப்பட்டுவந்த ஒரு காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். தாயாரின் உடல் ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகள் வழியில் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். வியாபாரத்தில் கடையை விரிவுபடுத்துவதற்காக பாடுபடுவீர்கள். அதிக உழைப்பின் காரணமாக அசதியும் சோர்வும் ஏற்பட்டு நீங்கும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்கள் மிகவும் பொறுமையாக இருக்கவேண்டியது அவசியம். செலவுகளைச் சமாளிக்கத் தேவையான பணம் கிடைப்பதில் பிரச்சினை எதுவும் இல்லை.

### கடக ராசி அன்பர்களே!

பொருளாதார நிலை திருப்தி கரமாக இருக்கும். ஆனாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படும். பிள்ளைகள் வகையில் தேவையற்ற செலவுகள் ஏற்பட்டு மனதை சஞ்சலப்படுத்தும். சிலருக்குச் சிறியளவில் உடல் ஆரோக்கியம் பாதித்தாலும் உடனே சரியாகிவிடும். கணவன் - மனைவிக் கிடையே கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. தந்தையின் மூலம் பண வரவுக்கு வாய்ப்புண்டு. வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் திருப்தி தருவதாக இருக்கும். பங்குதாரர்கள் உங்கள் முயற்சிகளுக்கு உதவி செய்வார்கள். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு குடும்பத்தில் செலவுகள் அதிகரிக்கும் என்பதால் கடன் வாங்க நேரும். பிள்ளைகளால் உறவினர்களிடையே உங்கள் கௌரவம் உயரும்.

### சிம்ம ராசி அன்பர்களே!

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும், போதுமான பணவரவு இருப்பதால் எளிதாகச் சமாளித்துவிடுவீர்கள். நீண்டநாளாகச் சந்திக்காமல் இருந்த நண்பர்களைச் சந்தித்து மகிழும் வாய்ப்பு ஏற்படும். திருமணத்துக்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். நல்ல இடத்தில் வரன் அமைவதற்கு வாய்ப்புள்ளது. சிலருக்கு வீட்டுக்கு அருகிலுள்ள ஆலயத்தில் சிறப்பு வழிபாடு செய்யும் வாய்ப்பு ஏற்படும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகும். வியாபாரத்தில் விற்பனையை அதிகரிக்கக் கூடுதலாக உழைக்க வேண்டியிருக்கும். பணியாளர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். சக வியாபாரிகளால் மறைமுக இடையூறுகள் ஏற்பட்டாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. குடும்ப நிர்வாகத்தில் இருக்கும் பெண்களுக்கு மகிழ்ச்சி தரும் வாரமாக இருக்கும். வேலை செய்யும் பெண்களுக்கு வீட்டுச் சூழ்நிலையின் காரணமாக பணிகளை முடிப்பதில் தாமதம் ஏற்படும்.

### கன்னி ராசி அன்பர்களே!

வருமானத்துக்குக் குறைவிருக்காது. உறவினர்கள் வருகை வீட்டில் சுபநிகழ்ச்சிகள் நடப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தும். கணவன் - மனைவிக்கிடையே இருந்துவந்த கருத்துவேறுபாடு மறைந்து, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் பெருமைப் படும் செய்தி கிடைக்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். புதிய முயற்சிகள் அனுகூலமாக முடியும். தந்தையுடன் வீண் வாக்குவாதம் செய்வதைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் சந்தை நிலைவரத்தை அறிந்து செயல்படும் திறன் அதிகரிக்கும். சக வியாபாரிகள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். பணியாளர்கள் நல்லபடி ஒத்துழைப்பர். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்குத் தேவையான பணம் இருப்பதால் சிரமம் எதுவும் இருக்காது. கணவருடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளதால் பொறுமை அவசியம்.

### துலா ராசி அன்பர்களே!

புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். தாயாரின் உடல்நலனில் கவனம் செலுத்தவும். நீண்டநாளாக எதிர்பார்த்துக் காத்திருந்த சுபநிகழ்ச்சி ஒன்று நடைபெறுவதற்கான வாய்ப்பு கூடிவரும். திருமண முயற்சிகள் சாதகமாக முடியும். வாரப் பிற்பகுதியில் உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்பட்டாலும் அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. நண்பர்கள் உதவிகரமாக இருப்பார்கள்.

புதிதாக வியாபாரம் தொடங்க விரும்புபவர்களும், வியாபாரத்தை விரிவுபடுத்த நினைப்பவர்களும் அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். சாதகமாக முடியும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு நிம்மதியான வாரம். புகுந்தவீட்டு உறவினர்கள் உங்களிடம் மிகுந்த அன்பு பாராட்டுவார்கள். பணவரவும் திருப்தி தரும்.

### விருச்சிக ராசி அன்பர்களே!

குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். பணவரவுக்குக் குறைவிருக்காது. கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். வாழ்க்கைத் துணைவழி உறவினர்களால் அனுகூலம் உண்டாகும். சகோதரர்கள் உதவி கேட்டு வருவார்கள். சிலருக்கு எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டாகும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். பெண் அல்லது பிள்ளையின் திருமணம் தொடர்பான முயற்சி சாதகமாக முடியும். வியாபாரத்தில் புதிய முயற்சிகள் எதுவும் இப்போது வேண்டாம். விற்பனையும் இலாபமும் வழக்கம்போலவே காணப்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும். குடும்ப நிர்வாகத்தை கவனித்துவரும் பெண்கள் குடும்ப நிர்வாகத்தில் பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். புகுந்தவீட்டு உறவினர்களுடன் இணக்கமாக நடந்துகொள்வது அவசியம்.

### தனுசு ராசி அன்பர்களே!

பணவரவு மகிழ்ச்சி தருவதாக இருக்கும். வீண் செலவுகளும் ஏற்படுவதற்கில்லை. நண்பர்களின் சந்திப்பு ஆதாயம் தருவதாக இருக்கும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும். உடல் ஆரோக்கியம் மேம்படும். கணவன் - மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக் கூடும் என்பதால் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். தந்தையிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வியாபாரம் வழக்கம்போலவே காணப்படும். சக வியாபாரி களுடன் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கி, சுமுகமான உறவு ஏற்படும். பங்குதாரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு மனதில் சிறுசிறு சலனம் ஏற்படக்கூடும். கணவர் கண்டிப்பாகப் பேசினாலும் பொறுமையுடன் இருப்பது மிகவும் அவசியம்.

### மகர ராசி அன்பர்களே!

பணவரவு திருப்தி தரும். வீண் செலவுகள் எதுவும் ஏற்படாது. சிலருக்கு எதிர்பாராத பண வரவுக்கும் சாத்தியம் உள்ளது. சகோதர வகையில் இருந்துவந்த கருத்துவேறுபாடுகளும் கசப்பு உணர்வுகளும் மாறி, சுமுகமான உறவு ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்படும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத்துணையின் ஆதரவுடன் தேவையான உதவியும் கிடைக்கும். நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். வாகனத்தில் செல்லும்போது கவனம் தேவை. வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். பழைய கடன்கள் தீரும். பங்குதாரர்கள் மூலம் தேவையான உதவி கிடைக்கும். பணியாளர்களால் செலவுகள் ஏற்படும். குடும்ப நிர்வாகத்தை கவனிக்கும் பெண்களுக்கு சற்று சிரமமான வாரம் என்றே சொல்லவேண்டும். கணவர் மற்றும் பிள்ளைகளால் பணிச்சுமை அதிகரிக்கும் என்பதால் உடல் அசதி ஏற்படும்.

### கும்ப ராசி அன்பர்களே!

பணவரவு போதுமான அளவு இருக்கும். செலவுகளும் அளவாகவே இருக்கும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உங்கள் தேவையறிந்து நண்பர்கள் உதவிசெய்வது ஆறுதலாக இருக்கும். பழைய கடன்களைத் தந்து முடிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படும். சுபநிகழ்ச் சிக்கான பேச்சுவார்த்தை சாதகமாக முடியும். சிலருக்குக் குலதெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் இருந்த கருத்து வேறுபாடு நீங்கி இணக்கமான சூழ்நிலை உண்டாகும். விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடியே இருக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு திருப்திகரமான வாரம். கணவருடன் ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும். பிள்ளைகள் உதவிகரமாக இருப்பார்கள்.

### மீன ராசி அன்பர்களே!

குடும்பத்தில் கணவன்-மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். வாரப் பிற்பகுதியில் அரசாங்கக் காரியங்கள் அனுகூலமாக முடியும். பணவரவைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் இல்லை. உறவினர்கள் மூலம் ஆதாயம் கிடைக்கும். உங்கள் முயற்சிகளில் சகோதரர்கள் உதவி செய்வார்கள். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவதில் சற்று அலைச்சல் ஏற்படும். வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கும். அவர் மூலம் முதலீடு செய்வதற்கான பணஉதவியும் கிடைக்கும். விற்பனையும் இலாபமும் அதிகரிக்கும். குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்களுக்கு உற்சாகமான வாரமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புகுந்தவீட்டு உறவினர்கள் உங்கள் நிர்வாகத் திறனை சிலாகித்துப் பேசுவார்கள்.

தமிழன் தொடர்கதை

# மகள் தூங்குகிறாள்

## அத்தியாயம் -30

- ஸாலிஹ் அஸீம்



தான் சொன்னது போலவே ஐந்து நிமிடத்தில் தான் படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு அம்மாவின் அழைப்பை ஏற்று சாப்பிடுவதற்காக எழுந்து சென்றாள்.

அங்கே ஜன்னலின் ஓரமாக போடப்பட்டிருந்த சாப்பாட்டு மேசையில் போய் அமர்ந்துகொண்ட ரொமேசிகாவுக்கு சாப்பாட்டை பரிமாறிவிட்டு அவளின் அம்மா சமையலறைக்குச் சென்றாள், பகல் சாப்பாட்டை சமைப்பதற்காக.

ரொமேசிகாவும் சாப்பிட்டுக் கொண்டே ஜன்னலின் வழியாக வெளியை இயற்கையை ரசித்துக்கொண்டிருந்தாள். அப்போது அவள் துளிகூட நினைத்து பார்த்திராத அந்தச் சம்பவம் நடந்தது.

அங்கே, தூரத்தில் நிசாந்த மலர் கொத்தொன்றை தனது கையிலே எடுத்தபடி வந்துகொண்டிருந்தான்.

அதனைக் கண்ட ரொமேசிகா அதிர்ந்துப் போய்விட்டாள். அவளின் மனதிற்குள்

''திக்'' என்றிருந்தது.

''என்ன இவரு...!

இந்த நேரத்தில வாறாரு.....?

அம்மா கண்டால் என்னாகும்...?

போதாக்குறைக்கு சத்தியம் வேறு பண்ணி கொடுத்திருக்கிறோமே....!

இன்னும் ரெண்டொரு நாள்தானே இருக்கு.

அதற்குள்ளே காரியத்தை கெடுத்திடுவாரு போல...'' என்றெல்லாம் தனது மனதிற்குள் எண்ணிக்கொண்ட ரொமேசிகா என்ன செய்வதென்று ஒன்றுமே தெரியாமல் அப்படியே சாப்பாட்டை வைத்துவிட்டு வெளியே ஓடிச் சென்றாள்.

வேகம் வேகமாக நிசாந்தவின் அருகில் போன ரொமேசிகா,

''என்ன நீங்க...!

எதுக்காக இப்போ இங்கே வந்தீங்க...?

உடனே திரும்பிப் போங்க

அம்மா கண்டால் வீணாய் பிரச்சினைகள் வரும்'' என்று நிசாந்தவை ரொமேசிகா காலில் விழாத குறையாக விரட்டியடித்தபோதும் அவன் அந்த இடத்தைவிட்டு அசையவில்லை.

''இல்லே ரொமேசிகா இப்போதைக்கு என்னால போக முடியாது.

இன்றைக்கு நான் ஒரு நல்ல முடிவு எடுக்கணும்.

இண்டைக்கு உன்னோட பிறந்தநாள் ரொமேசிகா.....!

அதுதான் வாழ்த்திட்டு ஒரு முடிவெடுத்திட்டு இந்தப் பூக்கொத்தையும் உன்கிட்டே கொடுத்திட்டுப் போவோமுனு வந்தேன்'' என்று நிசாந்த சொன்ன போதுதான் அன்றைய ரொமேசிகாவுடைய பிறந்தநாளே அவளுக்கு ஞாபகத்தில் வந்தது.

அதனைக் கேட்ட ரொமேசிகா,

''சரி....! சரி நீங்க இப்போ இங்கிருந்து போய் விடுங்க...!

உள்ளே அம்மா இருக்காங்க. அவுங்க பார்த்தால் அது பிரச்சினையாகிவிடும்'' என்று அவசரப்படுத்தினாள்.

அதனைக் கேட்ட நிசாந்த,

''நீ... சொல்றமாதிரி அப்படியெல்லாம் என்னாலப் போகமுடியாது ரொமேசிகா.

முதல்ல நான் கேட்கிறதுக்கு பதில் சொல்லு ரொமேசிகா...

அதுக்கப்புறமாய் நீ சொல்லத் தேவையில்லை. நானே போயிடுறேன்.

எதுக்கு ரொமேசிகா என்னோட கதைக்க மாட்டேங்குறே...?

நான் உனக்கு என்ன தவறு செஞ்சேன் ரொமேசிகா?

காரணத்தை சொன்னால் நான் எதற்கு உன்னை கஷ்டப்படுத்துறேன்.

என்னால உன்னோட கதைக்காமல்லிருக்க முடியல ரொமேசிகா....

அப்படியிருக்கிறதையும் பார்க்க நான் செத்துப் போயிடலாம். ரொமேசிகா....

ப்ளீஸ்....! ஏன் என்னோடு கதைக்க மாட்டேங்குறேனு மட்டும் சொல்லு ரொமேசிகா....!

அது போதும் எனக்கு...

நான் உடனேயே போய் விடுவேன்'' என்று அவளிடம் கெஞ்சினான் நிசாந்த.

ஆனாலும் எந்த பதிலையும் சொல்ல முடியாமல் ரொமேசிகாவை தடுத்தது அவளுடைய அம்மாவிடம் அவள் செய்துகொடுத்த சத்தியம் என்பதை நிசாந்தனால் புரிந்துகொள்ள முடியவில்லை.

இருந்தாலும் அவனை சமாளிக்க வேண்டும் என்பதற்காக அதையும் மீறி

''எனக்கு இப்போதைக்கு படிப்புதான் முக்கியம் நிசாந்த.

இந்தக் காதல் மண்ணாங்கட்டியெல்லாம் தேவையில்லை.

தயவுசெய்து போய்விடுங்க....!

என்னை கஷ்டப்படுத்தாதீங்க....'' என்று ரொமேசிகா நிறையவே கெஞ்சினாள். ஆனாலும் நிசாந்த அவைகளை எல்லாம் கணக்கில் எடுக்கவில்லை.

''ரொமேசிகா..! இப்போ... கேட்கிறேன் கடைசியாகச் சொல்லு.

என்னை உன்னால ஏற்றுக்கொள்ள முடியுமா....? ஏற்றுக் கொள்ள முடியாதா....?'' என்றான் உறுதியாக நிசாந்த.

அதனைக் கேட்ட ரொமேசிகா,

''இங்கப் பாருங்க. சொன்னால் புரிஞ்சுக் கொள்ளுங்கள்.

இப்போதைக்கு என்னால உங்களை ஏற்றுக்கொள்ளவே முடியாது.

தயவுசெய்து இந்த இடத்தை விட்டு போய் விடுங்க....!

சொன்னால் கேளுங்க...!'' என்றாள்.

அதனைக் கேட்ட நிசாந்தவின் விழிகள் கோபத்தில் சிவந்தன. உடனே கோபத்தோடு ரொமேசிகாவை நோக்கிய நிசாந்த,

''முடியாது ரொமேசிகா....!

இதுக்கு மேலே என்னால உன்னை விட்டுட்டு வாழவே முடியாது ரொமேசிகா.

உன்னோட கதைக்காமல், பேசாமல், பார்க்காமல் என்னால் இருக்க முடியவில்லை.

அது எனக்கு நரகத்தை விட கொடுமையானது.

இதுக்கு மேலையும் என்னாலத் தாங்கிக் கொள்ள முடியாது ரொமேசிகா....!'' என்றவன்,

''என்னை மன்னிச்சிக்கோ ரொமேசிகா...! என்னை மன்னிச்சிக்கோ...

எனக்கு மனசு வரயில்லைதான். இருந்தாலும் இதுக்கு மேலையும் என்னாலே பொறுக்க முடியல ரொமேசிகா....!'' என்ற நிசாந்த கையிலிருந்த பூக்கொத்தை தூக்கி வீசிவிட்டு அப்பூக்கொத்தில் மறைத்து வைத்திருந்த கூரிய கத்தியை கையிலெடுத்தான்.

அதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த ரொமேசிகா வாய் திறக்கும் முன்னாடியே வேகமாக ரொமேசிகாவின் வயிற்றுல் அக்கூரிய கத்தியால்

சதக்....! சதக்....!! என்று பன்னிரெண்டு தடவைகள் குத்தினான்.

இதனை சற்றும் எதிர்பார்த்திருக்காத ரொமேசிகா,

''நீங்க அவசரப்பட்டுடீங்களே...!'' என்று சொல்லியபடியே... தரையிலே சாய்ந்து துடிதுடிக்க,

தனது கையில் இருந்த அக்கூரிய கத்தியினால் தனது கழுத்தையும் அறுத்துக்கொண்ட நிசாந்த, அப்படியே தரையில் சாய்ந்திட இருவரும் பீரிட்டுப் பாய்ந்த இரத்த வெள்ளத்தில் மிதந்துக் கொண்டு துடிதுடிக்க...

சத்தம் கேட்டு அங்கே ஓடி வந்த ரொமேசிகாவின் அம்மா அந்தக் காட்சியை கண்டு அதிர்ச்சியில் உறைந்துப் போய்

''ஐயோ.....! என் மகளே.... ரொமேசிகா...

உனக்கென்னம்மா ஆச்சு...?''

என்றபடியே தரையில் மயங்கியபடி சாய்ந்தாள்.

சற்று நேரத்தில் எல்லாமே முடிந்துபோயிருந்தது. அக்கிராமத்து மக்கள் கூடி நிற்க, ரொமேசிகாவும் நிசாந்தவும் தம் உயிரை இழந்து பிணமாக இரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்க, ரொமேசிகாவின் அப்பாவும் தங்கையும் ஒப்பாரி வைத்துக் கதறிக் கொண்டிருந்தனர்.

கொஞ்ச நேரத்தில் மயக்கம் விட்டெழுந்த ரொமேசிகாவின் அம்மா அதிர்ச்சியோடு சுற்றும் முற்றும் பார்த்தாள். பார்த்துவிட்டு,

''என்னோட மகள் தூங்குகிறாள்.......!
என்னோட மகள் தூங்குறாள்.......!!
அவளை யாரும் எழுப்பாதீங்க.....!'' என்று சொல்லத் தொடங்கிய ரொமேசிகாவின் அம்மா அந்த வார்த்தைகளை இன்றுவரை அவ்வாறே சொல்லிக்கொண்டிருக்கிறாள்.

என்று அந்த

என்னோட மகள் தூங்குறாள்..!
என்னோட மகள் தூங்குறாள்.......!!
அவளை யாரும் எழுப்பாதீங்க.....!''

கிழவியின் கதையைச் சொல்லி முடித்தார் அங்கே நின்றுகொண்டிருந்தவர்.

அதனைக் கேட்ட சுற்றுலா வந்திருந்த மாணவியின் விழிகளிலும் நீர்த்துளிகள் எட்டிப்பார்த்தன.

தன்னைச் சுதாகரித்துக்கொண்ட ரொமேசிகாவின் அம்மா...!

என்னோட மகள் தூங்குறாள்.......!
என்னோட மகள் தூங்குறாள்.......!!
அவளை யாரும் எழுப்பாதீங்க.....!''

என்றபடியே சொல்லிக்கொண்டுபோய் அந்த வீதியை விட்டு மறைந்துவிட்டாள்.


**முற்றும்**

---

தமிழன் சிறுகதை

# நாட்சம்பளம் ஆயிரம் ஒரு மாத சம்பளமாகியது!

கே. நடேசன் துரைராஜ்



அன்று மாலை நேரம். தோட்டத்தில் சம்பளம் கொடுத்தார்கள். சம்பளத்தை வாங்கி வந்த ராசாத்தி இரவு சாப்பாட்டுக்கான ஏற்பாடுகளை செய்யத் தொடங்கினாள். முத்து மரக்கறி தோட்டப்பக்கம் போய்விட்டார். சம்பளம் கை நிறைய வாங்கியதற்கான சந்தோஷத்தை காணவில்லை. மூத்த மகனுக்கு ஏதோ சந்தேகம். சம்பளத்தில் முரண்பாடு ஏற்பட்டிருக்க வேண்டும் என்ற சந்தேகம் தோன்றியது.

மலைத்தோட்ட ராசாத்திக்கு இரண்டு ஆண்களும் இரண்டு பெண்களும் இருந்தார்கள். மூத்தவன் நன்றாகத்தான் படித்துக்கொண்டிருந்தான். இந்த காலத்து பிள்ளைகளுக்கு சொல்லவா வேண்டும்.

தோட்டத்திலேயே உயர்தர வகுப்புவரை படித்துக்கொடுக்கிறார்கள். ஆசிரியர்கள் எல்லோரும் மலைநாட்டில் படித்தவர்கள். பெண் ஆசிரியர்களே அதிகமானவர்கள். அதிபரும்கூட மலைநாட்டவரே.

சாதாரண வகுப்புவரை படித்த மூத்தவன் பரீட்சை முடிந்த உடனேயே நகர கடையொன்றில் வேலைக்கு சென்றுவிட்டான். இன்னும் மூன்று மாதத்தில் பரீட்சை முடிவு வந்துவிடும். அதை பார்த்துக்கொண்டு வேலைக்கு போவதா இல்லை படிப்பை தொடர்வதா என்று முடிவை எடுக்கலாம் என்ற ராசாத்தியின் வார்த்தைக்கு, "அம்மா எனக்குப் பின் மூன்று பேரும் பள்ளிக்கூடம் போகின்றார்கள். எப்படி சமாளிக்கப் போகின்றீர்கள் என்னால் நினைத்துக்கூட பார்க்கமுடியவில்லை."

"அப்பா நோயாளியானாலும் இந்த குடும்பத்தை காப்பாற்ற எவ்வளவு சிரமப்படுகிறார். தோட்ட வேலை குறையும் போது டவுனில் கிடைக்கும் வேலைகளை செய்து குடும்பத்தைக் காப்பாற்றி வருகிறார். உன்னுடைய வேலை மட்டும் எங்களை காப்பாற்ற போதாது" என்று போனவன்தான் வேலை செய்யும் இடத்திலும் அவனை பிடித்துவிட்டது. இவனுக்கும் வேலையும் இடமும் பிடித்துவிட்டது.

அப்பன்காரனுக்கு இந்த விடயம் தெரியவர உள்ளூர மகிழ்ந்தாலும் மகனும் வேலைசெய்தால் பெரிய பாரம் ஒன்று இறங்கியதுபோல் மனதில் தோன்றியது.

பேச்சு போங்குக்காக "நீ வேலை செய்துதான் இந்த குடும்பத்தை தாங்க போகிறாயா?" என்ற வார்த்தையோடு நிறுத்திக்கொண்டார்.

ராசாத்தியும் பிள்ளைகள் வளர வளர சாப்பாடு செலவுகள் பள்ளிக்கூட பிள்ளைகளுக்கான செலவுகள் அதிகரித்தவண்ணமாகவே இருந்தது. இவைகளை சமாளிக்க வேலை செய்த மகனால் மாதாமாதம் அனுப்பப்படும் பணம் 'இடுப்பில் படங்கை இறுக்கி கட்டியிருந்து கயிறு தளர்த்தியது போல' வாழ்க்கைச் செலவு சிறிது தாராளம் கண்டது.

இருந்தாலும் மகன் அனுப்பும் பணத்தை அவன் பெயரிலேயே கொஞ்சம் பேங்கில் போட்டுவைக்கத் தவறவில்லை.

தொழிலாளிக்கு நாட்சம்பளம் ஆயிரம் கொடுப்பதாக பேச்சுவார்த்தைகள் 'கர்ப்பிணித்தாய்மார்களின் பத்துமாத உடம்பில் வரும் அத்தனை பிரச்சினைகளையும் தீர்வுகண்டு பெற்றெடுக்கும் சிசுவைப்போல' ஆட்சிபீடத்திலிருக்கும் அரசாங்கமே ஆயிரம் கொடுப்பதாக கூறியது. இது தோட்டத் தொழிலாளர்களுக்கே பெரும் வெற்றியை கண்டதுபோல் நினைத்தார்கள்.

ராசாத்தியும் இனி கணவனையும் வெளி இடங்களுக்கு அனுப்பக்கூடாது என்று "நீங்க தோட்டத்தில் கொடுக்கும் வேலையை மட்டும் செய்தால் போதும்" என்றாள்.

இவ்வளவு காலமாக சம்பளம் கூட்டும் பேச்சுவார்த்தையில் இணங்க மறுத்து வந்த தோட்டக் கம்பெனிகள் இணக்கத்துக்கு வந்ததில் முத்துவுக்கு நிறைய சந்தேகம் வந்தது.

'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பதுபோல் ஏதோ தொழிலாளர்களுக்கு டாட்டா காட்டத்தான் போகிறார்கள் என்று மனைவி ராசாத்தியிடம் கயிறு கொடுத்தான்.

"ஆமா ஆமா உங்களுக்கு தொட்டதுக்கு எல்லாம் சந்தேகம்தான்."

"நீ பார்த்துக்கிட்டு இரு. இன்னும் ரெண்டு மூன்று மாதங்களுக்குள் குட்டு வெளிய வரும். தோட்டக் கம்பெனிக்காரர்கள் தோட்டத் தொழிலாளர்கள் சம்பள விடயத்தில் அரசாங்கம் தலையிடத் தொடங்கியதிலிருந்து கூடிய சம்பளத்தை வழங்க முடியாததற்கான காரணங்களை கூறிவிட்டனர்.

அரசாங்கமும் எதிர்க்கட்சியும் நாடே தொழிலாளர்கள் சார்பாக பேசியபடியால் மறுக்கமுடியாத சூழ்நிலையில் ஒத்துக்கொண்டார்கள்.

ராசாத்திக்கு கணவன் கூறும் காரணங்களில் உண்மை இருப்பதையும் அதனால் உள்ளூர ஏற்பட்ட பயமும் இருந்தது.

அப்படி இருந்தாலும் குடும்ப காரியத்தில் கவனத்தை எல்லாம் செலுத்திக் கொண்டிருந்தாள்.

தோட்டங்களில் வீடு கட்டுவதற்கான காணி கொடுத்திருந்தார்கள். அதை எப்படியாவது கட்டி விடவேண்டும். பிள்ளைகளை மேல் படிப்புவரை படிக்கவைக்க வேண்டும். அதன்மூலம் அரசாங்கம் கொடுக்கும் வேலைகள் பெற்று அரசாங்க உத்தியோகத்தவர்களாக வேண்டும் என்ற எண்ணங்களெல்லாம் வேரோடிக்கொண்டிருந்தது.

தோட்டங்களிலிருந்து ஆசிரியர் ஆசிரியையாகவும், கிராம உத்தியோகத்தவர்களாகவும், கம்பெனி உத்தியோகத்தவர்களாகவும் செல்வதை பார்க்கும்போது மூன்று பிள்ளைகளையும் படிக்கவைக்கும் ராசாத்தியின் மனதில் மூன்று பிள்ளைகளையும் ஏதோ ஒரு வேலையில் இருப்பவர்களாக காண ஆசை கொண்டவளாக இருந்தாள்.

தோட்டத்தில் வேலைசெய்பவர்கள் எல்லோரும் எப்படியாவது மாதம் குறிப்பிட்ட நாட்கள் வேலை செய்தார்கள். இதுவரை வேலை செய்த சம்பளத்தைவிட அதிகமாக கையில் வாங்கலாம் என்ற நம்பிக்கையில் இருந்தார்கள்.

இனிமேல் எத்தனையோ சங்கடங்களிலிருந்து விடுபடுவதற்கான காரியங்களை செய்துவிடலாம். சம்பள நாளை எண்ணிக்கொண்டிருந்தார்கள்.

'கொரோனா கொவிட்-19' நாட்டின் எல்லா பகுதியிலும் வந்தாலும் தோட்டப்பகுதிகளில் தொடர்ந்து வேலை கொடுத்ததால் அதன் பாதிப்பு விளங்கவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக தொடர்ந்து வந்ததால் தோட்டங்களையும் எட்டிப் பார்க்கத் தொடங்கியது.

முழுமையாக நாடுபூராவும் கடையடைப்பு செய்தார்கள். தொடர்ந்து போக்குவரத்து தடையும் செய்தார்கள். இதனால் சாப்பாட்டுச் சாமான்களே ஒழுங்காக பெறமுடியாத நிலை ஏற்பட்டது. தோட்டப்புறங்களும் பாதிபபுக்குள்ளாகின. ராசாத்தி மட்டும் விதிவிளக்கா? மகன் 'கொவிட19'ஆல் வேலை செய்த இடமும் மூடி இருந்ததால் வீட்டாளாகிவிட்டான்.

சென்றமாத சம்பளம் இந்த மாத 10ஆம் திகதிதான் கொடுப்பார்கள். அந்த நாளும் வந்தது. வேலை செய்தவர்கள் சம்பளத்தை வாங்கி திகைத்து அதிர்ச்சியடைந்தார்கள். காரணம் தோட்டத்தில் ஒவ்வொரு நாளும் இருபது கிலோ தேயிலைக் கொழுந்து எடுக்கவேண்டும். அதற்கு குறைந்தால் அரைநாள் பேராக கணக்கிட்டிருந்தார்கள்.

அந்த முறைமையால் பத்தாயிரம் சம்பளமாகவும் அதில் முற்பணம் அட்வான்ஸ், சேவைக்கால பணம், சங்கப்பணம், தீபாவளி போனஸ் பணம், வீடு கட்டுவதற்கான தவணைப் பணம் ஆகியவை சம்பளத்தில் பிடிக்கப்பட்டு நாட்சம்பளமாக ஆயிரம் கொடுப்பதாக பீத்திக்கொண்டார்களே. அந்தளவு பணம்தான் சம்பளமாக - தொழிலாளர்கள் மாத சம்பளமாக பெற்றனர்.

இந்த நிலையை யாரிடம் சொல்வது? இது பெரிய மகன் கண்ணனுக்கு விளங்கிவிட்டது. தான் வெளியிடங்களுக்கு வேலைக்கு செல்வதை கைவிட்டு தோட்டத்தில் பேரை பதிந்து தோட்டத்தில் வேலைசெய்வதற்கான முடிவை எடுத்தான். இந்த மாதிரியான ஏமாற்று இனியும் நடக்கவிடக்கூடாது. நம்மைப்போல் எதிர்ப்புச் சக்திகளை வளர்க்கவேண்டும்.

இப்படி வெளி இடங்களில் வேலை செய்தவர்கள் தோட்டத்தில் பேரை பதிந்து வேலை செய்யவேண்டும் கம்பெனிக்காரர்கள் செய்யும் நயவஞ்சக வேலைக்கு முடிவுகட்ட வேண்டும் என்ற தீர்மானத்தை எடுத்தான்.

**முற்றும்**

# ‘நவரசா’ குறித்து மணிரத்னம்




























**ம**ணிரத்னம்... இந்த ஒற்றைப் பெயர்மீது அவ்வளவு அன்பு, அவ்வளவு காதல், அவ்வளவு மரியாதை சினிமா உலகிற்கு இருக்கிறது. இவரின் படங்களைப் பார்த்து சினிமாவுக்கு வரத்துடிக்கும் இளைஞர்களுக்கு இன்று மட்டுமல்ல, எப்போதும் சக போட்டியாளராக சவால்விடுவதுதான் மணிரத்னத்தின் தனித்திறமை. எந்தவொரு தொழில்நுட்பம் அறிமுகமானாலும் அதைப் பரிசோதித்துப் பார்ப்பதில் அவருக்கு அலாதி ஆர்வம். இப்போது உலக சினிமாவே ஓ.டி.டி. தளத்துக்குப் பின்னால் ஓடிக்கொண்டிருக்கையில் மணிரத்னம் அந்தப் பயணத்தில் இணைந்திருக்கிறார்.

நெட்ஃபிளிக்ஸிற்காக ‘நவரசா’ எனும் ஆந்தாலஜி சீரிஸை தன் நண்பர் ஜெயேந்திராவுடன் இணைந்து தயாரித்திருக்கிறார்.

‘‘கொரோனா முதல் அலை வந்தபோது, திரைத்துறை நிறைய பாதிக்கப்படும்னு தெரிஞ்சது. அப்போ நானும் ஜெயேந்திராவும் இப்படியொரு சீரிஸ் பண்ணி அதன் மூலமா வரும் வருமானத்தை சினிமாத் தொழிலாளர்களுக்குக் கொடுத்திடலாம்னு முடிவு பண்ணினோம். இந்த யோசனைக்குத் திரைத்துறையிலும் நிறைய ஆதரவு கிடைச்சது. நிறைய இயக்குநர்கள், நடிகர்கள், டெக்னீஷியன்கள் முன்வந்தாங்க. இது ஒரு கூட்டு முயற்சிதான். தமிழ் சினிமா முழுக்க சேர்ந்து சினிமாவுக்காகப் பண்ற விஷயம்தான் ‘நவரசா’ சீரிஸ்’’.

**ஓ.டி.டி. தளங்களின் வருகையை எப்படி உணர்கிறீர்கள்?**

‘‘ரொம்பப் புதுசா இருக்கு. நிச்சயமா ஒரு படைப்பாளிக்கு சுதந்திரமளிக்கும் தளமா இதைப் பார்க்கிறேன். புது அனுபவங்கள் ஓ.டி.டி. அளிக்கும் வரம். ‘நவரசா’ அப்படியான அனுபவத்தைத்தான் தந்தது. ஒன்பது இயக்குநர்கள், அவங்க தேர்ந்தெடுத்த நடிகர்கள்னு ரொம்பப் பெரிய டீம். ஒன்பது கதைகளைப் படிச்சு, அதைப் பத்தி அவங்களோடு பேசி, விவாதிச்சு, அந்த அனுபவமே ரொம்பப் புதுசா இருந்தது. நிச்சயமா ‘நவரசா’ மூலமா நிறைய கத்துக்கிட்டேன்.

“நவரசங்கள் நிறைந்ததுதான் நம்ம வாழ்க்கை. ஒவ்வொரு ரசத்தையும் அடிப்படையாகக் கொண்ட படங்களை ஒவ்வொரு இயக்குநரும் இயக்கியிருக்காங்க. கௌதம் மேனன் படத்தின் எமோஷன் சிருங்காரம், அதாவது காதல்! லவ் போர்ஷனைக் கையாள்வதில் அவருக்குன்னு ஒரு ஸ்டைல் இருக்கு. அதுல அவர் வழக்கம்போல் சூப்பராவும் அழகாவும் பண்ணியிருக்கார். சூர்யாவும் ப்ரயாகா ரோஸ் மார்ட்டினும் நடிச்சிருக்காங்க. பிரியதர்ஷன் சாருடையது ‘ஹாஸ்யம்’. ஒரு உண்மைச் சம்பவத்தை எடுத்துக்கிட்டு அதுல கொமடிக் கதை பண்ணியிருக்கார். யோகிபாபு, ரம்யா நம்பீசன் எல்லாம் நடிச்சிருக்காங்க. ‘கருணை’யை மையமா வெச்சு பிஜாய் நம்பியார் படம் எடுத்திருக்கார். இதுல விஜய் சேதுபதி, பிரகாஷ்ராஜ், ரேவதி, அசோக் செல்வன் இவங்க எல்லோரும் நடிச்சிருக்காங்க. எல்லோருடைய பர்ஃபாமென்ஸும் நிச்சயம் பேசப்படும். கார்த்திக் நரேன் இயக்கியிருக்கிற ரசம், ‘ஆச்சர்யம்’. தான் எடுத்திருக்கிற எமோஷனை சயன்ஸ் பிக்‌ஷன் ஜானர்ல சொல்லியிருக்கார். வித்தியாசமான முயற்சி. அதுல அரவிந்த்சுவாமி, பிரசன்னா, பூர்ணா நடிச்சிருக்காங்க. அரவிந்த்சுவாமி ‘கோபம்’ என்னும் உணர்ச்சியை அடிப்படையாகக்கொண்டு படத்தை இயக்கியிருக்கார். இதில் ரித்விகா, ரமேஷ் திலக், ‘பசங்க’ ஸ்ரீராம் நடிச்சிருக்காங்க. அவர் எடுத்திருக்கிற படத்தைப் பார்க்கும்போது நிச்சயமா முதல் படம் மாதிரியே தெரியாது. அவ்வளவு மெச்சூர்டா எடுத்திருக்கார். கார்த்திக் சுப்புராஜுடைய போர்ஷன் ‘அமைதி’. பாபி சிம்ஹா, கௌதம் மேனன், சனந்த் நடிச்சிருக்காங்க. ரதீந்திரன் எடுத்திருக்கிற போர்ஷன் ‘பயம்’. சித்தார்த், பார்வதி நடிச்சிருக்காங்க. ரொம்ப நல்லா பண்ணியிருக்கார். சர்ஜுனுடையது ‘தைரியம்’. அதர்வா, அஞ்சலி, கிஷோர் நடிச்சிருக்காங்க. வித்தியாசமான களத்தைக் கையிலெடுத்திருக்கார். வசந்த் இயக்கியிருக்கிற போர்ஷன், ‘அருவருப்பு’. இந்த எமோஷன்ல படம் பண்றது ரொம்ப சிரமமான விஷயம். ஆனா, அதை ரொம்ப நல்லா பண்ணியிருக்கார்’’ என ஒவ்வொரு இயக்குநரின் படைப்பைப் பற்றியும் ஷார்ட் அண்ட் ஸ்வீட்டாக விளக்குகிறார்.

**எந்த இயக்குநருக்கு எந்த போர்ஷன் என்று எப்படி முடிவானது?**’ என்று கேட்டதற்கு, ஜெயேந்திரா பதில் சொல்லத் தொடங்கினார்.

,ஒன்பது கதை பண்ணலாம்னு முடிவான பிறகு, நிறைய இயக்குநர்கள்கிட்ட அப்ரோச் பண்ணினோம். யாருக்கெல்லாம் இதுல ஆர்வம் இருந்ததோ, சினிமாத் தொழிலாளர்கள் நலனுக்கான இந்த நோக்கம் இருந்ததோ, அவங்க எல்லோரும் இந்த புராஜெக்டுக்குள்ள வந்தாங்க. அப்புறம், எல்லோருடைய முயற்சியா ‘நவரசா’ மாறிடுச்சு. இந்த ஐடியாவை எல்லோருக்கும் சொன்னபோது, ‘நான் இந்த எமோஷனை எடுத்துக்கிறேன்’னு தங்களுடைய சொய்ஸை சொல்லி சிலர் எடுத்துக்கிட்டாங்க. கார்த்திக் சுப்புராஜ், அரவிந்த்சுவாமி எடுத்தவுடனே ‘நான் இதைப் பண்றேன்’னு சொல்லிட்டாங்க. இப்படி எல்லோரும் ஒவ்வொன்றை எடுக்க எடுக்க அடுத்து இருக்கிறவங்களுக்கு சொய்ஸ் குறைவாகிட்டே வந்தது.

**அரவிந்த்சுவாமி என்றாலே நினைவுக்குவரும் பெயர் மணிரத்னம்தான். அந்த அளவுக்கு நெருக்கமானவர் முதன்முதலில் படம் இயக்குகிறார். ஒரு குருவாக உங்கள் மனநிலை, பங்களிப்பு என்ன?**

என்று கேட்டவுடன், கொஞ்சமும் தாமதிக்காமல் பதில் வருகிறது மணிரத்னத்திடம்.

பிலிம் மேக்கிங்னு வந்துட்டா, அந்தக் கதையும் அந்த க்ரியேட்டர் என்ன பண்ணணும் அப்படிங்கிறதும்தான் தூக்கலா நிற்கும். அங்க குரு - சிஷ்யன் எல்லாம் கிடையாது. படம்தான் முக்கியம். நடிகரா அவரை எனக்கு ரொம்ப நல்லாத் தெரியும். அவருடைய படைப்பைப் பார்க்கும்போது, இன்னும் நிறைய படங்கள் இயக்குவார்னு தோணுது.


ஜெயேந்திராவுடன் மணிரத்னம்

**பிலிம் மேக்கிங்ல ஒவ்வொரு முறையும் வித்தியாசம் காட்டும் உங்களுடைய இந்த சீரிஸில் என்ன புதுசா இருக்கும்?**

இந்த பார்மெட்டே புதுசுதான். இலக்கியத்திலேயே ரொம்ப அழுத்தமான மீடியம் சிறுகதைன்னு சொல்லலாம். அதுக்குன்னு ஒரு அழகு இருக்கு. முழுமை இருக்கு. அதே மாதிரிதான் இங்கேயும். எல்லாமே 30 - 40 நிமிடங்கள் இருக்கிற ஷார்ட் பிலிம்ஸ்தான். அதுக்குள்ள ஓர் உலகத்தைக் காட்டுறது ஒரு படைப்பாளிக்கு ரொம்ப ஆர்வமாகவும் சுவாரஸ்யமான சவாலாகவும் இருக்கும். வெரைட்டியான இயக்குநர்கள் இருந்ததனால வெரைட்டியான டேஸ்ட் கிடைச்சிருக்கு.

**சிறுகதையைப் படமாக்கும்போது இருக்கும் சவால்கள் என்னென்ன?**

நிச்சயமா அது சுவாரஸ்யமான சவால்தான். நம்ம எல்லோரும் நிறைய சிறுகதைகள் படிச்சுதான் வளர்ந்திருப்போம். அந்த உலகத்துல நிறைய ஜாம்பவான்கள் இருந்திருக்காங்க. அவங்களுடைய கதைகள் எல்லாம் நமக்குள்ள போயிருக்கு. அதனால, மீடியம்தான் மாறுதே தவிர, கதை சொல்லல் ஒன்றுதான். ஓ.டி.டி தளங்கள்ல மக்கள் வெவ்வேற மொழிப் படங்களைத் தேடித்தேடிப் பார்க்குறாங்க. பெரிய நடிகர்கள் நடிச்சிருக்காங்களா, பெரிய இயக்குநர்கள் படமான்னு எல்லாம் பார்க்காமல், கதையை மட்டுமே பிரதானமா பார்க்கும் பழக்கம் உருவாகியிருக்கிறது நல்ல விஷயம். நல்ல கதை கொண்ட படங்களுக்கு, ஆர்ட்டிஸ்ட் வேல்யூவோ மொழி மாறுபடுறதோ பெரிய விஷயமில்லை என்ற ஜெயேந்திராவைத் தொடர்ந்து, ஆர்வமாகப் பேச ஆரம்பிக்கிறார் மணிரத்னம்.

ஓ.டி.டிக்குப் படம் பண்ணும்போது உலகத்துல எங்கே வேணாலும் பார்க்க முடியும். மக்கள் ரொம்ப அப்டேட்டடா இருக்காங்க. அதனால, நம்ம படங்களுடைய தரம் உயர வேண்டியதா இருக்கு, உயரும் என்றவரிடம்,

**உங்க வயதுக்கும் உங்க ஸ்டைலிஷான பிலிம் மேக்கிங்கிற்கும் தொடர்பில்லைன்னு புரிஞ்சுக்க முடியுது**

என்று கேள்வியை முடிக்கும் முன்பே, யாருக்கு வயசாகிடுச்சுன்னு சொல்றீங்க? என சிரித்தபடி பேச ஆரம்பித்தார். ‘‘பிலிம் மேக்கிங் என்பது ஒரு மொழி. அதுக்கும் வயசுக்கும் சம்பந்தமில்லை. ஒரு எழுத்தாளருக்கு எத்தனை வயசானாலும் அவர் படைப்புத்திறமை மாறப்போறதில்லை. அதுமாதிரிதான் சினிமாவும்” என்கிறார்.

ஜெயேந்திராவிடம், ‘‘மணிரத்னத்தின் சினிமாக்கள் உருவாகும்போது அவர்கூடவே இருந்து பார்த்திருக்கீங்க. அதைப் பத்திச் சொல்லுங்க’’

மணி ‘மௌனராகம்’ பண்ணும்போது மணி, நான், பி.சி.ஸ்ரீராம் நாங்க மூணு பேரும்தான் முதல்ல படம் பார்த்தோம். ‘நாயகன்’ பண்ணும்போது நான் பாம்பேல இருந்ததனால, நான்தான் லொகேஷன் மெனேஜர். ‘அஞ்சலி’ படத்துல நடிச்சது, என் விளம்பரத்துல நடிச்ச குழந்தை... இப்படி எல்லாப் படங்கள்லயும் நானும் மணியும் சேர்ந்து வேலை செய்றமாதிரி ஒரு சூழல் வரும். அப்படித்தான் ‘நவரசா’வும். நான் ‘180’ படம் பண்ணினதுக்கு முழுக் காரணம் மணிதான். உங்களுக்குத் தெரியாத ஒரு விஷயம் சொல்லவா? மணி சூப்பரா கோல்ஃப் ஆடுவார்’’ என்று சொல்லி முடித்தவுடன், ஜெயேந்திராவைப் பற்றிப் பேசத் தொடங்கினார் மணிரத்னம்.

“ஜெயேந்திரா சினிமாவைத் தாண்டி நிறைய விஷயங்கள் பண்ணிக்கிட்டிருக்கார். ‘பூமிகா’ன்னு ஓர் அமைப்பு ஆரம்பிச்சு ரொம்ப வருஷமா மக்களுக்கு உதவி செய்யறார். சுனாமி, புயல், வெள்ளம் மாதிரியான பேரிடர்களின்போது, பூமிகாவுடைய பங்கு அளப்பரியதா இருந்திருக்கு. கொரோனா காலகட்டத்தில் இவங்க டீமுடைய உழைப்பு அபாரமானது. ‘நவரசா’விலேயே சினிமாத் தொழிலாளர்களுக்கான நிவாரணத் தொகையை அவங்களுக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கிறதை ‘பூமிகா’ டீம்தான் பார்த்திருக்கிறாங்க. ஜெயேந்திரா எங்களுக்கு ரோல்மொடல் மாதிரி’’ என்ற மணிரத்னத்திடம்,

**உங்களுடைய படம் வெளியாகுற நாள் உங்களுடைய மனநிலை எப்படியிருக்கும்? தியேட்டருக்குப் போய்ப் பார்க்கிறதுண்டா?**

என்று கேட்டதற்கு,

“முதல் நாள் தியேட்டருக்குப் போறதேயில்லை. என் படத்தை தியேட்டருக்குப் போய்ப் பார்த்து 25 வருஷமாகுது. பார்த்தா, அதுல இருக்கிற தவறுகளெல்லாம் தெரியும். எதுக்கு?’’ என்று சிரிக்கிறார்.

## யூரோ கால்பந்தாட்ட போட்டியில் ‘வலிமை’ அப்டேட் கேட்ட ரசிகர்கள்

‘**வ**லிமை’ திரைப்படத்தின் பெர்ஸ்ட் லுக் போஸ்டர் அஜித் பிறந்தநாளான மே முதலாம் திகதி வெளியாகும் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால், கொரோனா தொற்று அதிகமாக இருந்ததால் அதன் வெளியீடு தள்ளிவைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ‘வலிமை’ அப்டேட் கேட்டு ரசிகர்கள் சோர்வடைந்து விட்டனர். கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் வலிமை அப்டேட் கேட்டு வருகிறார்கள்.

அந்தவகையில் தற்போது மேலும்



ஒரு சுவாரஸ்யமான நிகழ்வு நடந்துள்ளது. யூரோ உதைபந்தாட்டப் போட்டியின்போது அஜித் ரசிகர்கள், வலிமை அப்டேட் கேட்டு பதாகைகளை ஏந்தியுள்ளனர். இந்தப் படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

## சம்பளத்தை குறைக்க மாட்டேன் பூஜா ஹெக்டே

**த**மிழில் மிஷ்கின் இயக்கத்தில் வெளிவந்த ‘முகமூடி’ படத்தில் கதாநாயகியாக அறிமுகமானவர் பூஜா ஹெக்டே. நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் ‘பீஸ்ட்’ படம் மூலம் தமிழுக்கு வருகிறார். தற்போது இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையில் நடந்துவருகிறது.

தெலுங்கில் கைவசம் மோஸ்ட் எலிஜிபில் பேச்சுலர், ஆச்சார்யா, ராதே ஷ்யாம் ஆகிய படங்கள் பூஜா நடித்து அடுத்தடுத்து வெளிவரவுள்ளன. அங்கு தற்போதைக்கு இவர்தான் நம்பர் 1 கதாநாயகியாக இருக்கிறார். மேலும், அவரைத் தேடி பல வாய்ப்புகள் வந்து கொண்டிருக்கிறதாம்.

சமீபத்தில் முன்னணி தெலுங்கு நிறுவனம் ஒன்று அவர்களது படத்தில் நடிப்பதற்காக பூஜாவை அணுகியதாம். சம்பள விடயத்தில் தயாரிப்பு நிறுவனம் பேரம் பேசியிருக்கிறது. ஆனால், தனது சம்பளத்திலிருந்து ஒரு ரூபாவைக்கூட குறைக்க மாட்டேன் என கறாரா பதிலளித்தாராம் பூஜா.

அதே நிறுவனம் அப்படத்தில் நடிப்பதற்காக ஒரு நடிகருக்கு பெரும் தொகையை சம்பளமாக வழங்குகிறதாம். அவருக்கு ஒரு நியாயம், தனக்கொரு நியாயமா என பொங்கிவிட்டாராம் பூஜா.



Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7